
# காகிதப் பூக்கள்



சத்யராஜ்குமார்

## உள்ளே...


1. காகிதப் பூக்கள் 5
2. ரோஜக்களில் பன்னீர் துளிகள் 104



34228
5168583
கொளத்தூர், சென்னை - 99.


# காகிதப் பூக்கள்

## 1

பூஜையிலிருந்து அப்போதுதான் வெளிப்பட்டார் மாருதி. நெற்றியில் இடம் பிடித்திருந்த விபூதிப் பட்டையும், மத்தியில் அந்தக் குங்குமமும் அவர் முகத்துக்கு அழகு சேர்த்திருந்தது.

தன் வீட்டிலிருந்த அலுவலக அறைக்குள் நுழைந்தார். அவருடைய செயலாளர் ஜனார் பவ்யமாக வணங்கிவிட்டு எதிரே வந்து நின்றான்.

''உங்கம்மாவுக்கு உடம்பு தேவலையா ஜனார். நீ இன்னிக்கு வர மாட்டேன்னு நினைச்சேன்!''

''பரவாயில்லை சார்.''

''வெல்! இன்னிக்கு என்னோட அப்பாயின்மெண்ட்ஸ் என்ன?''

ஜனார் டைரி பிரித்து வரிசையாக நேர வாரியாகச் சொல்லிக் கொண்டே வந்தான்.

அவர் மனதுக்குள் குறித்துக் கொண்டார்.

''இப்ப உங்களைச் சந்திக்க இவங்கள்ளாம் வந்திருக்காங்க.'' ஒரு பட்டியல் தந்தான். வாங்கிப் பார்த்தார்.

அதற்குள் இன்டர்காம் ஒலித்தது. எடுத்தார். "ம்! அனுப்பு!" வைத்தார்.

"செக்குகளை கொண்டு வா ஜனார்!"

கையெழுத்திடும் இந்த இடைவேளையில் மாருதி பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ளலாம்! மாருதி என்ற பெயரைக் கேட்டதும் தீவிர அனுமார் பக்தர் என்று நீங்கள் நினைத்தால் உங்களுக்கு நூறு மார்க்.

வயது நாற்பத்தி நாலு! இந்த வயதில் இத்தனை உயரம் தொட எவராலும் முடியாது என்று சவால் விடுமளவுக்கு அகில இந்திய ரீதியில் தொழிலில் உச்சம் தொட்டவர். சர்வதேச அரங்கில்கூடப் பேசப்படுமளவுக்குப் புகழ் பெற்றவர். இருபது வயதில்கூட அடுத்த வேளைச் சோற்றுக்கு என்ன வழி என்று யோசித்தவர். தனது கடுமையான உழைப்பால் படிப்படியாக உயர்ந்து இந்த நிலைக்கு வந்து விட்டார். அவருக்கு ஒரே மகள்... லண்டனில் பிஸினஸ் மானேஜ்மெண்ட் படிக்கும் அனு. நாலு வருடங்கள்முன்பு மனைவிக்கு கேன்சர் வந்து அவள் உயிர் பறிக்கப்பட்டது.

அள்ளித் தரும் வள்ளல்... இரக்கமே உருவானவர்... இப்போதைக்கு மாருதி பற்றி இது போதும்.

கேழ்வரகுக் கஞ்சி ட்ரெயில் எடுத்து வரப்பட்டது. அவரது காலை உணவு அதுதான்.

குடித்தார். தான் பார்க்க வேண்டிய நபர்களை 'டிக்' செய்து வரிசையாக அனுப்பும்படி சொல்லிவிட்டு சாய்ந்து உட்கார்ந்தார்.

ஜனார் வெளியே வந்தான். உடனே அந்த எம்.எல்.ஏ. எழுந்தார்.

"என்னை வரச் சொன்னாரா?"



"இன்னும் நாலைந்து பேர் திரும்பிப் பார்த்தார்கள்.

"ஸாரி ஸார்! உங்களைப் பார்க்க அவர் விரும்பலை. நீங்க போகலாம்!"

எம்.எல்.ஏ. சிவதாசனுக்குக் கண்கள் சிவந்தது.

"இல்லை! நான் மாருதியைப் பார்த்தே ஆகணும்!"

"அனுமதியில்லை சார். மன்னிக்கணும்!"

"நான் வந்து பேசிக்கறேன்!" துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு சிவதாசன் வெளியேற, அங்குள்ளவர்கள் சிரித்தார்கள்.

"மகா அயோக்கியன் தெரியுமா இந்த சிவதாசன்?"

"அதான் ஊர் முழுக்க அவன் பேர் நாறுதே!"

"மாருதி உத்தமமானவர். அவர் இவனைப் பார்க்க விரும்ப மாட்டார்."

"தெரியும் எனக்கு!"

"அவன் அரசியல்வாதி. ஏதாவது தொந்தரவு தந்தா!"

"இவருகிட்ட முடியுமா? மக்கள் அபிமானம் பெற்றத் தொழிலதிபர். மந்திரிப் பதவியைத் தங்கத்தட்ல ஏந்திட்டு வந்து தந்தப்ப வேண்டாம்னு சொன்னவர். என்ன நினைச்சீங்க மாருதி பற்றி?"

"சார்! உங்களைக் கூப்பிடுறார்!"

எழுந்து அவர் உள்ளே போனார் அங்குள்ளவர்களைப் பார்த்துவிட்டு எல்லாரும் போனதும் எழுந்தார் மாருதி.

"பேக்டரிக்குப் போ, ஒரு மணிக்குத்தானே பிரஸ் மீட்?"

''ஆமாம் சார்.''

''இன்னிக்கு பத்திரிக்கையாளர் கூட்டத்துக்கு நானே வர்றேன். சில முக்கிய அறிவிப்புகள் தர வேண்டியிருக்கு!''

''சரி சார்.''

தொலைபேசி அழைத்தது. எடுத்தான் ஜனார்.

''அ... அப்படியா? பேசச் சொல்றேன். லண்டன்லேருந்து உங்க பொண்ணு சார்!''

''அப்படியா! கொண்டா!'' உற்சாகமாக வாங்கிக் கொண்டார்.

''அனுவா? சொல்லும்மா!''

''டாடி! நான் நாளைக்கு இங்கிருந்து புறப் படறேன்.''

''உன் தேர்வுகள் முடிய ஒரு மாசமிருக் கேம்மா!''

''இல்ல டாடி. அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கு. நான் ஒரு மாத காலத்துக்கு அங்கே இருப்பேன்.''

''சரிம்மா காத்துட்டு இருக்கேன்!''

மேலும் கொஞ்சம் பேசிவிட்டு வைத்தார்.

''போகலாம்?''

''சார். பாப்பா எப்ப வருது?''

''நாளை மறுநாள் ராத்திரி, நான் விமான நிலையம் போகணும். இந்த முறை அனு வந்ததும் அவளுக்கு வரன் பார்க்கத் தொடங்கிடணும்.''

''ஆமாம் சார்!''

''ஒருத்தன் கையில் ஒப்படைச்சிட்டா என் பாரம் குறையும். அவங்கம்மாவும் இல்லை!''



அவர் காருக்கு வரும் சமயம் மறுபடியும் தொலைபேசி ஒலிக்க, ஜனார் போய் எடுத்தான். பேசிவிட்டு வைத்தான்.

''சார்! நம்ம சரக்குகள் சிலது நாளைக்குக் காலைல வர்ற கப்பலே வருதாம்!''

''நல்லது''

''முடிஞ்சா நேரடியா உங்களையே சென்னை துறைமுகத்துக்கு வரச் சொல்றாங்க!''

''பார்க்கலாம்!'' மாருதி காரில் ஏறி விட்டார்.

''சார்!'' முன் கதவைத் திறந்துகொண்டு ஏறிய ஜனார் மெல்ல அழைத்தான்.

''சொல்லு ஜனார்.''

''அந்த எம். எல். ஏ. சிவதாசன்...

''அவனுக்கென்ன?''

''நீங்க அவனைப் பார்க்காம திருப்பி அனுப் பினதுல கடுமையான கோபம் இருக்கு அவருக்கு.''

''அவன் கோபம் என்னை என்ன செய்யும்?''

''அப்படியில்லை சார். அரசியலில் ஓரளவு செல்வாக்கு உள்ள நபர் சிவதாசன்.''

''அதனால...''

''நமக்குத் தொல்லைகள் தந்தா?''

''தந்து பார்க்கட்டும்! அடுத்த தேர்தல்ல ஜாமீன் தொகைகூட அவனுக்கு மிஞ்சாது. நான் மக்கள் ஆதரவு பெற்ற நேர்மையான நிரந்தரத் தொழிலதிபர். புரியுதா? நீ கவலைப்படாதே! நான் பார்த்துக்கறேன்.''

அப்படியும் ஜனாரிடம் கலக்கம் இருந்தது.

## 2

அமைச்சர் வெள்ளைச்சாமியின் அறைக்குள் ஆவேசமாக நுழைந்தார் எம்.எல்.ஏ சிவதாசன்.

அன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முதல் வரால் மேற்படித் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருந்தது.

சட்டமன்றக் கூட்டத்தில்—போன முறை சிவதாசன் எல்லை மீறி எதிர்க் கட்சியிடம் மோத, அவர்கள் பதிலுக்கு ஆவேசப்பட, சிவதாசன் எழுந்து நின்று வேட்டியை அவிழ்ந்து ஆபாசச் சைகை செய்ய, அமளி அதிகமாகி விட்டது.

அவை முன்னவர் இதைக் கண்டிக்க, சிவதாசன் வெளியேற்றப்பட்டார். அவர் செயலுக்காக எதிர்க்கட்சி உறுப்பினரிடம் முதல்வர் மன்னிப்பு கேட்க, அது பிரபலப் பத்திரிகைச் செய்தியாகி விட்டது. சட்டமன்ற நடவடிக்கைகளில் இருந்து சிவதாசன் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டிருந் தார்.

முதல்வரின் பெருந்தன்மை பெருமளவு பேசப் பட்டது. தவறு தன் கட்சிக்காரருடையது என்பது தெரிந்ததும், தலைப்புடன் பத்தி பத்தியாகச் செய்தி. அதில் சிவதாசனின் பெயர் சிரிப்பாய் சிரித்துவிட்டது வெள்ளைச் சாமியின் வலது கை சிவதாசன்.

''கதவைச் சாத்து தாஸ்!''

''என் பேர் சிரிப்பா சிரிச்சாச்சு. ஒரே நாள்ல என் இமேஜ் மக்கள் மத்தில கெட்டுப் போச்சு. என்னைத் தற்காலிக நீக்கம் செய்து வெளியேற் றினது சரியில்லை. முதல்வரை நான் விடப்போற தில்லை!''



வெள்ளைச்சாமி மௌனமாக இருந்தார்.

''நீ இங்கே வந்து கூச்சல் போட்டு என்ன உபயோகம் தாஸ்?''

''நீங்கள்ளாம் அமைச்சர்கள்தானே...? கட்சிக் காக எத்தனை உழைச்சிருக்கேன் நான்? ஒருத்த ராவது என் பக்கம் பேசினீங்களா?''

''பேசும்படியா நீ நடந்துகிட்ட தாஸ்!''

''சட்ட மன்றத்துல இதுக்கு முன்னால எந்தத் தப்பும் நடக்கலையா?''

''தாஸ்!''

''எந்த ஆபாச எல்லைக்கெல்லாம் அந்த மக்கள் மன்றம் போயிருக்கு? ஏன் அப்பல்லாம் முதல்வர் மன்னிப்புக் கேட்கலை?''

''நீ என்ன சொல்றே?''

''இன்னும் நாலஞ்சு மாசங்கள்ள தேர்தல் வருது. திரும்பவும் பதவியைப் பிடிக்க முதல்வர் இப்பவே தன்னைத் தயார் படுத்திக்கணும் இல்லையா? என்னைப் பலி கொடுத்து தன் நாற்காலியைத் தக்க வச்சுக்கற ஆசை!''

வெள்ளைச்சாமி பேசவில்லை.

''உங்க கையில எத்தனை எம்.எல்.ஏ?''

''தொண்ணுத்தி ஆறு!''

''இந்த அளவுக்கு உறுப்பினர்களை நம்ம பக்கம் சேர்த்தது யாரு?''

''நீ... நீதான்!''

''இப்ப நீங்க நினைச்சாக் கூட ஆட்சியைக் கலைச்சிரலாம்!''

''எதுக்கு?''

''தனிச்சி நின்னு போட்டி போடறதுக்கு!''

''கட்சி உடையாது?''

''உடையட்டும். நாம புதுக்கட்சி தொடங்கலாம். மக்கள் மாறுதல் விரும்பிகள். புது கட்சி எப்படித்தான் இருக்கும்னு ஒரு எதிர்பார்ப்பு இருக்கும். நிச்சயம் ஜெயிக்கலாம். நாம ஜெயிச்சிட்டா நீங்கதான் முதல்வர். நான் துணை முதல்வர்!''

வெள்ளைச்சாமிக்கு கேட்க சந்தோஷமாக இருந்தது. கற்பனையில் ஓரிரு நிமிடம் முதல்வராக வாழ்ந்து விட்டு மீண்டார். ''என்ன சொல்றீங்க?''

''தாஸ்! நீ சொல்றது எல்லாமே சரி. ஆனா உனக்கு பதட்டம் அதிகம். அதனாலதான் பதவியை அத்தனை சுலபமா உன்னால கைப்பற்ற முடியறதில்லை. அரசியல்ல நிதானம் தேவை. ஒரு ஆழ்கடல் அமைதியும் அவசியம். எப்ப கொந்தளிக்கணுமோ, அப்ப அதைச் செய்யலாம்!''

சிவதாசன் பேசவில்லை.

''மாருதியைப் போய் பார்த்தியா?''

''பார்க்க விடலையே! அந்த ஆளைக் கவனிக்கறபடி கவனிக்கணும் போலிருக்கு!''

''உளராதே தாஸ். திரும்பும் பதட்டம் எந்த வஞ்சத்துக்கும, மிரட்டலுக்கும், பதவி ஆசைக்கும் மாருதியை மட்டும் நீ பலிதர முடியாது. நீ சொன்னியே பதவி... அதையே வேண்டாம்னவர் மாருதி. புரியுதா?''

''அதனால?''

மக்கள் செல்வாக்கு பெற்ற மனிதர். பகைச்சுக்காதே அவரை. பணத்தால அவரை வாங்க முடியவே முடியாது!''

''பின்ன?''

''நாளை மறுநாள் அவர் மகள் அனு லண்டன்லேருந்து திரும்பறா!''

''படிப்பு அதுக்குள்ளே முடிஞ்சு போச்சா?''



''இல்லை. ஒருமாத லீவுல வர்றா. அந்தப் பெண் மூலம் காரியம் சாதிக்கணும்!''

''எப்படி? புரியல!''

''உனக்கு மகன் உண்டு இல்லையா?''

''ஆமாம் அவன் ஒரு உதவாக்கரை. எட்டாவது வகுப்பை எட்டு தடவை படிச்சவன்.''

''இப்ப என்ன செய்யறான்.''

''கள்ளச்சாராயம் காய்ச்சிட்டு இருக்கான்!''

''குடும்பத் தொழில்!''

''வெள்ளைச்சாமி...?''

''ஷ் கோவப்படாதே தாஸ்! நான் சொல்லப் போறது நல்ல விஷயம்! உன் பிள்ளையைக் கொஞ்சம் நாகரிகமா மாற்று. அந்த அனுவை இவன் மூலம் கைப்பற்றணும்.''

''கடத்தணுமா?''

''ச்சீ! புத்திப் போகுது பாரு! கடத்த வேண்டாம் தாஸ். உன் பிள்ளை அந்த அனு மனசுல காதலை வளர்க்கணும்! அவளும் அவனை விரும்பும்படியா செய்யணும்.''

''அதனால என்ன லாபம்?''

''இருக்கு! தன் மகள் கேட்டு எதையும் மறுத்ததில்லை அந்த மாருதி. இதுல கொஞ்சம் போராட்டம் இருந்தாலும், பொண்ணுக்காக அவர் விட்டுக் கொடுத்துத்தானே ஆகணும்?''

''சரிய்யா! நமக்கென்ன லாபம்?''

''இருக்கய்யா, உனக்கு சம்மந்தி ஆவார் மாருதி அதனாலே உன் மதிப்பு உயரும்.''

''சரி.''

''அவனைப் போல பணக்காரரும் மக்கள் செல்வாக்கு பெற்றவரும் இந்த மாநிலத்துல இல்லை. அவர் மூலம் சுலபமா மக்களை அடையலாம். ஜெயிக்கலாம்!

''பதவி?''

''அலையாதே! பெரிய பதவிலே நீ உட்கார்ந்துக்கோ. நான் வேணும்னா இப்பவே என் பதவியை ராஜினாமா பண்ணிடுறேன்!''

''வெள்ளைச்சாமி என்ன பேசற நீ? சரி, என் மவனை எப்படி அந்தப் பொண்ணைக் காதலிக்கச் சொல்றது?''

''ஒரு கோடி காட்டு! பாஞ்சிருவான். வயசுப் புள்ளைகளுக்கு காதலிக்க நீதானா கற்றுத் தரணும்?''

சிரித்தான் சிவதாசன். ''அந்தப் பெண் வந்து இறங்கினதுமே உன் மகன் தொடங்கிரட்டும்.''

''சரி.''

''நீயே உன் செய்கைக்காக மன்னிப்புக் கேட்டு ஒரு அறிக்கை குடு. அது பத்திரிக்கைல வரட்டும். இரந்த பேரை ஓரளவுக்காவது ஈடுகட்டலாம்.''

''சரி.''

''நீ புறப்படு! நிறைய வேலைகள் இருக்கு எனக்கு:''

''தொகுதி பக்கம் போகப் போறியா?''

''வேற வேலை இல்லை. அடுத்த முறை தேர்தல் வரும்போதுதானே மக்கள் வேணும்? இந்தத் தொகுதி வேண்டாம். வேற தொகுதி வாங்கிப்பேன்!''

''சாதி ஓட்டு அடிப்படுமேப்பா!''

''படட்டும்.''

''பின்னே எப்படி ஓட்டு கிடைக்கும் உனக்கு?'

''கள்ள நோட்டும், கள்ள ஓட்டும் இருக்கிற வரைக்கும் நம்மை மாதிரி அரசியல்வாதிகள் கவலையில்லாம வாழலாம்.'' நமட்டுச் சிரிப்புடன் எழுந்தார் வெள்ளைச்சாமி.



## 3

'விக்ராந்த்' என்ற அந்தச் சரக்குக் கப்பல் சென்னையின் துறைமுகம் தொட்டது அப்போது தான் கரையில் மாருதி இருந்தார். அவரது முக்கிய சரக்குகள் பல அதில் வந்திருந்தன எந்திரங்கள், தொழில் ரீதியான பல பொருட்கள். மாருதி பட்டிலைச் சரி பார்த்து, பணத்தைக் கட்டிவிட்டு, பொருட்களை இறக்கச் சொன்னார்.

எல்லாம் இறங்கியானதும் கேப்டனை வந்து சந்தித்தார். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் ''இந்த கப்பல் எத்தனை நாளைக்கு இங்கே இருக்கும்?''

''நாலு நாளைக்குச் சார்!''

''என் சரக்குகள் கொஞ்சம் ஏற்றுமதிக்கு இருக்கு!''

''கொண்டு வாங்களேன் மற்ற நடைமுறைகள் எல்லாம் இருக்கே!''

''எல்லாம் தயார். நாளைக்குச் சரக்கை ஏத்திற வேண்டியதுதான். நம்ம வீட்டுக்கு நாளைக்கு வாங்களேன் கேப்டன்! ஒரு விருந்து சாப்பிடலாம்!''

''நாளைக்கு முடியாதுசார். ஒரு முக்கிய வேலை இருக்கு. நாளை மறுநாள் போன் பண்ணி விவரம் சொல்றேனே!''

''சரி, நான் வர்றேன் கேப்டன்!''

அவர் போனதும் உள்ளே வந்தார் கேப்டன் மோசஸ். தன் கேபினுக்கு முக்கியமான—அவருக்கு நம்பகமான நாலஞ்சு க்ரூப் மெம்பர்களை வரச் சொன்னார்!

"இந்தக் கப்பல் இங்கே இருக்கப் போறது நாலு நாளைக்கு!"

"ஆமாம் சார்!"

"முஸ்தபாவை என்ன செய்யறது!"

"அதை அவனையே கேளுங்க சார்!"

"தன் பெயரைத் தவிர அவன்தான் எதையுமே பேசறதில்லையே!"

"சரி சார்! நாலு நாள் கழிச்சு அவனைக் கூட்டிட்டுப் போக முடியுமா?"

"நம்மோடவா?"

"ம்!"

"சான்ஸே இல்லை. கராச்சி துறை முகத்துலேர்ந்து நம்ம கப்பல் புறப்படும்போதே அதுல இவன் இருந்தான். பேரை மட்டும் சொன்னான் முஸ்தபானு. வேற எதுவும் இன்னைய தேதிவரைக்கும் பேசலையே!"

"ஆமாம் சார்!"

"அவன் யாரு? எந்த ஊர்க்காரன்? எதுவும் தெரியாம எப்படி நடவடிக்கை எடுக்கறது?"

"அதான் இறக்கி விட்ரலாம் சார்!"

"அது அத்தனை சுலபம் இல்லை ஜானி. சட்டச் சிக்கல் நிறைய இருக்கு. நம்ம சரக்குக் கப்பல் புறப்பட்ட இடம் கராச்சி, பாகிஸ்தானிய தலை நகரம். இவன் ஒரு முஸ்லீம். ஒரு வேளை பாகிஸ்தானிய உளவாளியா இருந்தா?"

"சார்!"

"நம்ம இந்திய மண்ணுல எப்படி இவன் கால் பதிக்க முடியும்?"

"முடியாதுதான்!"

"விசா இருக்கா தெரியல, இமிக்ரேஷன் பார்க்கணும். இவன் இந்தியக் குடிமகன்னு என்ன ஆதாரம் இருக்கு?"



"சரி சார் இறக்கி விடவும்முடியாது. கூட்டிட்டு போக முடியாதுன்னா என்ன செய்வோம்?"

"ஆலோசிக்கணும்!"

"சட்ட ரீதியா கலந்து யோசிச்சா?"

"யார்கிட்ட?"

"அதை நீங்கதான் சார் தீர்மானிக்கனும்"

கேப்டன் மோசஸ் யோசித்தான். சட்டென முகம் மலர்ந்தது.

"என்னோட கல்லூரில ஒண்ணா படிச்சான். கமலேஷ். அவன் இப்ப அட்வகேட்டா இருக்கான். நிச்சயமா சென்னையிலதான் அவன் இருக்கணும். அவனை நான் இப்பவே போய் சந்திக்கறேன். முஸ்தபா பத்திரம்?"

"சரி சார்"

கேப்டன் மோசஸ் கமலேஷைப் பார்க்க புறப்பட்டான். அதே நேரம் உயர்நீதிமன்றத்தில் ஒரு அரசியல்வாதியின் முகத்திரையைக் கிழித்துக் கொண்டிருந்தான் கமலேஷ் ஆதாரங்களுடன்.

ஒரு மணி நேரம் விவாதம். தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டதும் களைத்துப் போய் வெளிப்பட்டான். சேம்பரில் தன் அறையில் போய் உட்கார்ந்தான். கண்களை மூடிக்கொண்டு இருக்கையில் சாய்ந்தான்.

"சார்!"

கண்களைத் திறந்தான்.

"என்னப்பா?"

"உங்களைப் பார்க்க மோசஸ்னு ஒருத்தர் வந்திருக்கார்."

"வரச் சொல்லு!"

மோசஸ் உள்ளே நுழைந்தான். கண்களைச் சுருக்கிக் கொண்டு பார்த்த கமல், குபீரென எழுந்தான்.

''அட மோசஸ்! இதென்னடா திடீர் வரவு?''

ஓடிவந்து கட்டிக்கொண்டான்

''சரி சரி! வீட்டுக்கு வா!''

''இருக்கட்டும் கமல், இப்ப நேரமில்லை. கப்பல் நாலு நாளைக்குத்தான் இருக்கும். உன்னைப் பார்த்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன்!''

''உட்காரு'' குளிர்பானத்துக்குச் சொல்லி விட்டான் கமல்.

''அப்புறம்?''

''சொந்தமா வாழ்க்கை தெளிவா இருக்கு. ஆனா தேவையில்லாத பிரச்சனை ஒண்ணு முளைச்சிருக்கு!''

''என்ன அது?''

''கராச்சி துறைமுகத்துல தாடியும், தலையுமா ஒருத்தன் ஏறிட்டான். அவன் எப்படி கப்பலுக்குள்ள வந்தான்னு யாருக்கும் தெரியலை. பேரு முஸ்தபா. அவன் சொல்றது அதை மட்டும்தான். வேற எதுவும் பேசறதில்லை. முகம் பார்த்தா இந்தியன் மாதிரிதான் இருக்கு பேரை உச்சரிக்கிற விதத்துல இந்திய வாடை தெரியுது. அவன் ஒரு பெரிய கேள்விக்குறியா இருக்கான். அவனை என்ன செய்யலாம்னு புரியலை எனக்கு. உன் ஆலோசனை நாடி வந்திருக்கேன்!''

கமல் யோசித்தான்.

''சட்டச் சிக்கல் நிறைய இருக்கு!''

''ம்! தெரியும்!''

''அவன் இந்த தேசத்துக் குடிமகனா இருக்க என்ன ஆதாரம் இருக்கு அவன்கிட்ட!''

''ஆதாரம் கிடக்கட்டும் கமல். அவன் பேறசதே இல்லையே. வாயைத் திறந்தாத்தானே?''



''ஆள் எப்படி இருக்கான்?''

''பாவமா இருக்கான். கடுமையாப் பேசினா கண்கள் கலங்கிப் போகுது. பரிதாபமா இருக்கு பார்க்க. நிச்சயம் அவன் மூர்க்கன் இல்லை.''

''சரி! நான் ஒரு வாட்டி அவனைப்பார்க்கணும் முடியுமா?''

''இப்பவே புறப்படு என்னோட!''

''இப்ப முடியாது. நாளைக்குக் காலைல வரட்டுமா?''

''ம். நான் வந்து கூட்டிட்டுப் போறேன்''

மோசஸின் வரவு பல புதிய பிரச்சனைகளின் ஆரம்பம் என்பது அப்போது கமலுக்கு தெரியாது.

## 4

சிவதாசன் தன் வீட்டு மொட்டை மடியில் விஸ்கி வகையறாக்களுடன் உட்கார, உள்ளே நுழைந்தான் காசி.

''வரச் சொன்னீகளாப்பா?''

''ம்! உட்காரு!''

காசி வெகு சுவாதீனமாக அப்பா இருக்கிறார் என்ற மரியாதைகூட இல்லாமல், பல்லால் கடித்து பாட்டில் மூடியைத் திறந்தான். கடகடவென சோடாவைக் கலக்காமல் அப்படியே ஊற்றிக் கொண்டான்.

பாட்டிலை கீழே வைத்தான். ''எதுக்கு டாடி வரச் சொன்னீங்க?''

''நிச்சயமா குடிக்கறதுக்காக இல்லை. உன்னையெல்லாம் நம்பி நானொரு காரியத்துல இறங்கினா, நாண்டிகிட்டிச் சாகவேண்டியதுதான்.''

''ஏன் டாடி?''

''நான் பேசினா மண்டையில ஏறுமா உனக்கு?''

''அரை பாட்டில்தானே குடிச்சேன்? இது மாதிரி மூணு முழு புட்டி அடிச்சாலும், நிதானம் தவற மாட்டேன். சும்மா சொல்லுங்க!''

''நீ காதலிக்கணும்?''

''யாரை? எலிசபெத் டெய்லரையா?''

''உள்ளூர் டெய்லர் உன் சட்டைக்குப் பட்டன் கட்ட சொன்னாலே, காறித்துப்பறான். எலிசபெத் டெய்லர் கேக்குதா உனக்கு? விஷயத்துக்கு வாடா!''

''ஏன் டாடி கோபம்? விஷயத்துக்கு நீங்கதான் வரணும்!''

''உன் படிப்பு என்னடா?''

''எட்டாவது. ஆனா இங்கிலீஷ் பேசுவேன் சுமாரா!''

''யாரு கேட்டாங்க? என்ன உன் தொழில்?''

''கஞ்சா, கள்ளச்சாராயம், கள்ளக் கையெழுத்து!''

''வெக்கமாயில்லை!''

''நாங்க ஏம்பா வெக்கப்படணும்?''

''சமூகம் சீரழியும்டா உங்களால!''

''நீங்கள்ளாம் என்ன செஞ்சிட்டு இருக்கீங்க! உங்களால இந்த சமூகத்துக்குப் பெருமையா? நீ பதவில இருந்துட்டே பாதகம் பண்றே. நான் இல்லாம பண்றேன். சரி நம்ம புண்ணிய சரித்திரம் இருக்கட்டும். நான் காதலிக்கணும் சொன்னியே எதுக்காக?''

''எதுக்காங்கற கேள்வி அப்புறம் யாரைனு கேளு!''

''ஏதோ ஒரு கழுதை. ஏன் காதலிக்கணும்னு முதல்ல சொல்லு!''

''சொல்றேண்டா, அந்தத் தொழிலதிபர் மாருதியைத் தெரியுமில்லை!''



''எனக்கு மாருதிக் கார்தான் தெரியும்!''

''சரி விடு! அவர் மக்கள் செல்வாக்கு பெற்ற மகத்தான மனிதர். அவர் மகள் லண்டன்ல படிக்கறா. பேரு அனு. இன்னிக்கு ராத்திரி ப்ளைட்ல வந்து இறங்கறா.''

''அவளை நான் காதலிக்கணுமா?''

''ஆமாம்!''

''ஆளை வுடு''

''ஏன் கேட்டியே, இப்பச் சொல்றேன்!''

''சொல்லு''

''அவளை நீ காதலிக்கணும். கல்யாணமும் செஞ்சுக்கணும்டா காசி.''

''கல்யாணமா?''

''ஏண்டா? அந்த வயசு உனக்கு வரலியா இன்னும்?''

''அப்படியில்லை. அப்பப்ப சுகம் வேணும்னா, காசைக் கொடுத்தாக் கிடைக்குது. அதை விட்டுட்டு இதுக்காக ஒருத்தியைக் கட்டிக்கிட்டு வந்தா வாழ்நாள் முழுக்கக் காப்பாற்ற வேண்டாம். ஒரு வாட்டி காசு குடுத்தோம்—படுத்து எழுந்தோம்னு இருந்துட்டா, யாருக்கும் கட்டுப்பட வேண்டாம் பாரு!''

''இப்படி சொல்ல அருவருப்பா இல்ல உனக்கு?''

''சின்னவீடு, சிங்கார வீடுன்னு ஆயிரம் வீடுகள் வச்சுக்கறதைவிட இது தேவல. மேலும் ஒரு பொண்ணைக் கட்டிக்க நான் தயாரா இல்லை. ஆளை விடு!'' எழுந்துவிட்டான் காசி.

''நில்லுடா!''

''நைனா!''

''உட்காரு அப்படி. என்னைப் பேச விடு. அந்த மகள் ஒரு கோடீஸ்வரி. அவளை வசப்படுத்தி, உன்னையே நினைச்சு அவளை உருக வைக்க உன்னால முடியாதா?''

''எதுக்கு?''

''சொத்துக்கள்டா. எத்தனை நாளைக்குக் கள்ளச் சாராயமும் கஞ்சாவும் உனக்குச் சோறு போடப் போகுது?''

''நைனா?''

''நீ மாப்பிள்ளையாயிட்டா, மாருதி நம்ம கையில. அவர் மகள் உன் மனைவி. கோடிக்கணக்கான சொத்துக்கு நீ அதிபதி.''

''நைனா?''

''சொல்லு காசி!''

''நான் கோடீஸ்வரன் ஆறது இருக்கட்டும். உனக்கென்ன ஆதாயம் இதுல?''

''அடப்பாவி!''

''அரசியல் ஆதாயம் இல்லாம நீ இறங்குவியா அத்தனை சுலபத்துல?''

''காசி!''

''சொல்லு! உனக்கென்ன ஆதாயம்?''

''மக்கள் செல்வாக்கு. தேர்தல்ல செலவழிக்கப் பணம். திரும்பவும் பதவி. போதாதா? என்னை அவமானப்படுத்தின அந்த முதல்வர் கண்ல விரலை விட்டு ஆட்டணும்!''

''இது என் விரல் நைனா நல்லா குடிசிட்டா, யாருது, எதுன்னு தெரிய மாட்டேங்குது உனக்கு.''

''சரி பதில் சொல்லு! காதலிக்கறியா அவளை?''

''நான் ரெடி நைனா. அவ என்னைக் காதலிப்பாளா?''

''மாக்கானாட்டம் இப்படி போய் நின்னா, சத்தியமா உன்னை அவ விரும்ப மாட்டா. மாறணும் நீ!''

''எப்படி? தலைகீழா நிக்கணுமா?''

''எந்திரிச்சி போடா?''



''கோவப்படாதே நைனா. காதலிச்சுக்கறேன் கவலைப்படாதே. அந்தப் பொண்ணு போட்டோ இருக்கா?''

''இல்லை!''

''பின்ன எனக்கெப்படி அடையாளம் தெரியும்''

''ராத்திரி விமான நிலையம் போ! மாருதி வருவார் அவரோட வர்றது அவர் மகள்தானே?''

''ஒருவேளை செட்டப்பா இருந்தா?''

''செருப்படி படுவே எங்கிட்டயிருந்து. நீ போகலாம்!'

''இரு நைனா! இன்னும் நான் பேசி முடிக்கலையே''

''என்ன பேசப் போறே?''

''இந்தப் பொண்ணைக் காதலிச்சு, ஒருவேளை கல்யாணம் வரைக்கும் வந்துட்டா எனக்கென்ன ஆதாயம்?''

''மவனே! இத்தனை நேரம் பேசினது மண்டையில ஏறலையா உனக்கு! கோடிக்கணக்கான சொத்துடா. நீ சொந்தக்காரனில்லையா அந்தச் சொத்துக்களுக்கு''

''நைனா! தாலி கட்டினதும் எம்பேர்ல சொத்துக்களை எழுதியா வைக்கப் போறார் அந்த மாருதி!''

''ஆனாலும் உனக்குத்தானேடா''

''நான் ஜொள்ளு விட்டுவிட்டு எத்தனை காலம் காத்துட்டு இருக்க முடியும் சொத்துக்காக''

''சரி என்ன சொல்ல வர்றே நீ''

''மாருதி சம்பந்தியாகி, அவர் மக்கள் செல்வாக்கால உன் கட்சி அதிகப் பெரும்பான்மை பலம் பெறுமா''

''வாய்ப்பு இருக்கு!''

''அப்ப நீதான் முதல்வரா''

''இல்லைடா! வெள்ளைச்சாமி அண்ணன் தான் முதல்வர்!''

''ஏன்.. உனக்கு அந்தத் தகுதி கிடையாதா''

''என்னடா சொல்றே..''

''மாநிலத்தை, மண்டலத்தை, இந்தத் தேசத்தை அரசியல்வாதிகள் குடும்பச் சொத்தக் காற காலம் இது. முதல்வர் பதவியை நீ வச்சுக்கோ நான் கேக்கலை. நிதி உள்துறை ரெண்டும் நம்ம கைக்கு வருமா...''

''அடப்பாவி, விட்டா நாலே நாள்ல கஜானா வைக் காலி பண்ணிருவியே நீ..''

''மக்கள் எதுக்காக நம்மைத் தேர்ந்தெடுத்து அனுப்பறாங்க... தாய்நாடு நம்ம சொந்த வீடு மாதிரி நைனா. நமக்கில்லாம யாருக்கு கஜானா சொந்தம்! சாப்பிடு''

சிவதாசன் மிரண்டு போனார்.

## 5

திரிசூலம் வண்ண விளக்குகளை அணிந்து கொண்டு இருட்டைப் பகலாக்கிக் கொண்டிருக்க—காசி தன் சகா ஒருவனுடன் பைக்கில் வந்து இறங்கினான். ''யாரு காசி வர்றது''

''மாருதி மகள்''

''என்னடா சினிமா தலைப்பு மாதிரி என்னவோ சொல்ற...''

''தொழிலதிபர் மாருதியோட மகள் வர்றா''

''அதுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்''

''இருக்கு. நம்ம ஆட்கள் அஞ்சாறு பேரை ஏற்பாடு பண்ணியிருக்கேன்.''



''எதுக்கு''

''பாரேன்''

லவுன்சில் நுழைந்தார்கள் இருவரும். நல்ல கூட்டம் இருந்தது. ஆங்கிலமும், வறுத்த முந்திரியும், ஷாம்பெய்னும் தத்தளித்துக் கொண்டிருக்க, அந்த அலிடாலிடா விமானம் வரும் அறிவிப்பு தேன் தடவிய குரல் மூலம் ஒழுக, வந்தவர்கள் விறைப்பானார்கள்.

நேரம் இரவு பத்து — அதுஒரு சிறப்பு விமானம். மாருதியும அவருடன் ஏழெட்டு முக்கிய அதிகாரிகளும் அப்போதுதான் உள்ளே நுழைந்தார்கள்.

''அவர்தான் மாருதி!''

''அம்சமா இருக்காரு தலைவா! இந்த வயசுலேயும் என்ன ஒரு நிகுநிகுப்பு!''

''பணம்டா. பச்சை பச்சையா நோட்டு இருந்தா எவன்தான் பளபளப்பா இருக்க மாட்டான்?''

விமானம் வந்து கொண்டிருந்தது. எஸ்கலேட்டர் பொருத்தப்பட்டு, கதவு திறக்க கையாட்டியபடி நிறைய பேர் இறங்கி வந்தார்கள். அதில் யார் அனு என்று தெரியவில்லை. செக்யூரிட்டி சோதனைகள் முடிந்து பயணிகள் வெளிப்பட மேலும் ஒரு மணிநேரம் ஆனது.

''ஹாய் டாடி!''

அனு தள்ளிக் கொண்டு வந்தாள்.

மாருதி மகளை அள்ளி அணைத்துக் கொண்டார். நெற்றியில் முத்தமிட்டார்.

உடன் வந்த அதிகாரிகள் பூச்செண்டு தந்து வாழ்த்தினார்கள்.

''மச்சான் ஒல்லிடா பொண்ணு?''

''இருக்க வேண்டியதெல்லாம் சரியா இருக்கு. அது போதும்!''

காசி அனுவை அங்குலம், அங்குலமாக மனதுக்குள் பதிய வைத்துக் கொண்டான். எல்லோரும் வெளியே வர, ஒரு சாக்லெட் நிற காண்டெஸா க்ளாகிக் வண்டியின் கதவுகள் வெண்ணையாகப் பிளக்க அப்பாவும் மகளும ஏறிக் கொண்டார்கள். பின்னால் இருநத வேனில் மற்ற அதிகாரிகள் நுழைய தன் பைக்கை இயக்கினான் காசி

''எங்க போறோம்!''

''பொறு! வந்துட்டே இரு!''

கார் கிண்டி வந்து, வடபழனி பக்கம் திரும்பி எம். எம். டி. காலனிப் பக்கம் வர ஏறத்தாழ போக்குவரத்து முற்றிலுமாக முடிந்து போயிருந்தது. அந்தப் பகுதியில் எந்த சந்தடியும் இல்லை. வேன் உதயம் தாண்டியதும் தன் திசையைக் கம்பெனிப் பக்கம் மாற்றிக் கொள்ள, கார் மட்டும் மாருதியின் வீட்டை விரும்பிக் கொண்டிருந்தது.

கோயம்பேட்டின் அருகில் கார் வர, குறுக்கே அந்த வேன் வந்து வழி மறித்தது.

''என்ன டிரைவர்?''

''எவனோ வேனைக் கொண்டு வந்து குறுக்கே நிறுத்தியிருக்கான்''

அதற்குள் வேனைவிட்டு உதிர்ந்த நாலைந்து பேர், காரை நோக்கி வந்தார்கள்.

டிரைவர் கதவைப் பிளந்தான்.

''யார் நீங்க?''

டிரைவருக்குப் பதில் சொல்லாமல், கதவைப் பிளந்து, அனுவை வெளியே இழுத்தான் அவன். மாருதி பதறிப் போய் வெளிப்பட்டார்.

''யாரப்பா நீங்க?''



''நீ பெரிய தொழிலதிபர் மாருதினு தெரியும். உம் பொண்ணு இன்னிக்குத்தான் லண்டன்லேருந்து வர்றாளா? மாதுளம்பழம் மாதிரி இருக்கா செக்க சிவக்க, வாடீ!''

''டேய் விட்ரா! எவ்ளோ பணம் வேணும்னாலும் தர்றேன் அவளை விடு!''

''உன் பணத்தைக் கொண்டு போய் கொளுத்து தள்ளிகிட்டுப் போடா இதை, அந்த டிரைவர் கையைக் காலைக் கட்டி பள்ளத்துல உருட்டு. கிழவனைக் காருக்குள்ள பூட்டு! சீக்கிரம்?''

படபடவென ஒலித்தபடி அந்த பைக் வர, மாருதி வேகமாகத் திரும்பினார். அட்வகேட் கமலேஷ்தான்! ஒரு வழக்கு தொடர்பாக தாம்பரம் வரை போய் விட்டுத் தாமதமாகத் திரும்பிக் கொண்டிருந்தான்.

''தம்பி... காப்பாத்து!'' மாருதி கூச்சலிட, கமலேஷ் பைக்கைவிட்டு இறங்காமல் அதில் இருந்தபடியே வித்தைக் காட்டத் தொடங்கினான். அந்த ஆட்கள் அதிகம் போராடவில்லை. காசி ஏற்பாடு செய்திருந்த ஆட்கள்தான்.

''நீங்க வழிமறிச்சு கலாட்டா பண்ணுங்க! நான் பைக்ல வருவேன். நாலு அடி நான் போட்டதும் ஓடிப் போயிடுங்க. பணத்தைக் காலைல வந்து வாங்கிக்குங்க!''

''சரிப்பா!'' பைக்கில் வந்தவன் காசிதான் என்று நினைத்துக் கொண்டு, அவர்கள் ஓடிவிட்டார்கள். கமலேஷ் ஆச்சரியப்பட்டான். ஏன் எதிர்க்கவில்லை அவர்கள்? புரியவில்லை. காரின், அருகில் வந்தான்.

''ரொம்ப நன்றி தம்பி. நீ மட்டும் வரலைனா என் பொண்ணு கதி என்னாயிருக்கும்!''

''நீ யாரு?''

''என்னைத் தெரியாதப்பா! நான் மாருதி! தொழிலதிபர்.''

''ஓ . அது நீங்கதானா? ஐயாம் கமலேஷ்! அட்வகேட்.''

''ஓ .. அது நீ.. ஸாரி நீங்கதானா?''

''ஆமாம் சார், ஏன் இந்த நடுராத்திரில இங்கே வச்சி...?''

''என் மகள் அனு. லண்டன்ல எம். பி. ஏ. பண்றா. லீவுக்கு வந்திருக்கா. அவளைக் கூட்டிட்டு ஏர்போர்ட் லேருந்து நான் வர்ற வழி. யாரோ... ரௌடிங்க!''

''சரி நிற்க வேண்டாம். புறப்படுங்க.''

''தேங்க்யூ தம்பி!''

''டாடி!''

''என்னம்மா அனு?''

''அவருக்குக் கஷ்டமில்லைனா, நம்ம வீடு வரைக்கும் பைக்ல நம்மைத் தொடர்ந்து வரட்டுமே!''

''ஏன் பயமா?''

''ம்! இருக்கக் கூடாதா?'' படபடவென்ன அனு விழிகளை அடிக்க கமலேஷின் லப்டப் அதிகரித்தது.

''தம்பிக்குத் தொந்தரவும்மா?''

''இல்லை சார் நான் வருகிறேன். நீங்க வண்டியை எடுங்க டிரைவர். டிரைவரும் அப்பாவியா இருக்காரே. உங்களை மாதிரி தொழிலதிபர்



கள் சண்டைப் பயிற்சிகள் தெரிந்த நபரை டிரைவரா வச்சுக்கணும்.''

''நல்ல ஆலோசனை'' அனுவின் குரலில் கிலி இருந்தது.

கார் ஓடத் தொடங்கியது. பைக்கை இயக்கி, கமலேஷ் பின் தொடர. அப்போதுதான் காசி அங்கே வந்து சேர்ந்தான். பரங்கிமலை அருகில் அவன் பைக் காலை வார, அதை பாதியில் பார்த்து இங்கு வருவதற்குள் கார் போய்க்கொண்டிருந்தது.

''என்னா தலைவா திட்டத்துல எள்ளா?''

இந்த வண்டிய முதல்ல கொளுத்தணும். நான் மட்டும் சரியான நேரத்துல வந்திருந்தா லவ்வு இப்பவே தொடங்கியிருக்கும்!''

''சரி வுடு! நாளைக்கு அமாவாசை. நல்ல நாள் தொடங்கு.''

காசி வெறுப்புடன் வண்டியைத் திருப்ப, அதே நேரம் மாருதியின் கார் போர்டிகோவில் நுழைந்தது.

''நான் வர்றேன் சார்''

''சரி தம்பி''

''ஸீ யூ அனு!'' போய்விட்டான் கமலேஷ்.

உள்ளே வந்த அனு, ''என்ன டாடீ நீங்க? வீடு வரைக்கும் வந்தவரை உள்ளே கூப்பிட மாட்டீங்களா?''

''அடடா, தோணலைம்மா?''

''அவர் நம்மைப் பற்றி அசிங்கமா எடை போட்டிருப்பார்.'' மாருதி பேசாமல் உள்ளே போய்விட்டார்.

## 6

கப்பலில் நுழை வாயிலில் கால் பதித்தான் கமலேஷ். ''வெல்கம் கமல்! உனக்காக நான் காத்துட்டு இருக்கேன்.'' மோசஸ் ஓடி வந்து கமலின் கைகளைப் பிடித்துகொண்டான்.

''உள்ளே வரவே ரொம்பக்கஷ்டம் உண்டோ?''

''ம்! சரக்குக் கப்பல் சும்மாவா? நான் சொல்லி வச்சிருந்தேன். இல்லைன்னா வரமுடியாது சுலபமா?''

அந்தக் கப்பல் பிரமாண்டமாக இருந்தது.

''கிட்டத்தட்ட ஒரு ஊரே இதுக்குள்ளேஇருக்கு போலிருக்கே!''

''ஆமாம்.''

தொழிலாளிகள் சரக்குகளைச் சரிபார்த்து அடுக்கி, தன் பணியில் மும்முரமாக இருந்தார்கள். நங்கூரம் பாய்ச்சப்பட்டிருந்த கப்பல் ஒருகான்ரிக்ட் மாளிகை கடலோரம் இளைப்பாற வந்ததைப் போல அழகாக இருந்தது.

தன் கேபினுக்குள் அழைத்துச் சென்றான் மோசஸ். ''உட்காரு கமல், என்ன சொல்லட்டும்? விஸ்கி ஆர் ரம்?''

''ஸாரி! நான் லிக்கர் சாப்பிடறதில்லை?''

''ஆச்சரியா இருக்கு!''

''வக்கீலா இருந்தா கைக்குட்டை கூட க்ளையண்டியன் செலவுதான் வாங்கணும்னு உண்டா? எனக்குப் பிடிக்கலை.''



''குட்! வித்யாசமா இருக்கே!''

''இந்தக் கப்பல் தான் உன் உலகம் இல்லையா மோசஸ்? நைஸ். இது கூட ருசியான வாழ்க்கை தான் அப்புறம்?''

''முஸ்தபாவைப் பார்க்கலாமா?''

''ம்!''

''ரொம்பவும் பயந்த சுவாபம். இங்குள்ள தொழிலாளர்களைப் பார்த்தாக் கூட, பீதில உறைஞ்சு போயிடுவான். நான் மட்டும் தான் அவனுக்குத் தோழன். உன்னைப் பார்த்து மிரளுவான். நிதானமா அவனை அணுகணும் புரியுதா!''

''நீ கவலையே படாதே மோசஸ். நான் பார்த்துப்பேன்.''

''வா!''

இருவரும் படிகளைக் கடந்து மேல் தளத்துக்கு வந்தார்கள். ஸிகல் பறவைகள் வானத்தில் வட்டமிட, மடிந்து மடிந்து வரும் அலைகள் அற்புதமாக இருந்தது. அந்த உயரப் பார்வையில் உடல் ரம்யமாக காட்சி அளித்தது. நாலைந்து திருப்பங்களைக் கடந்து மூலையில் இருந்த அறையின் வாசலில் போய் நின்றான் மோசஸ். கதவை மெலிதாகத் தட்டினான்.

''முஸ்தபா நான்தான்!''

கதவைத் தள்ளித் திறந்தான். மெல்ல உள்ளே நுழைந்தான்.

''நீ வெளியே இரு கமல். நான் கூப்பிட்ட பின்னால வா!'' மோசஸ் மட்டும்உள்ளே வந்தான். முஸ்தபா எழுந்து வந்தான்.

"சாப்பிட்டியா?"

தலையாட்டினான்.

"உன்னைப் பார்க்க ஒருத்தர் வந்திருக்கார்."

சட்டென முஸ்தபாவின் விழிகள் தறிகெட்டு அலைந்தன. வேண்டாம் வேண்டாம் என்று கொஞ்சும் பார்வை. அதில் டன்டன்னாக கண்ணீர் சட்டென மண்டியிட்டான். கால்களைப் பிடித்துக் கொண்டான் இருக சகலத்தையும் கமல் மறைந்து நின்று பார்த்தான்.

'என்னை விட்டு விடாதே என்கிறானா?'

'அல்லது உன்னைத் தவிர என்னைப் பாது காக்கும் நபர் யாருமில்லை என்று சொல்கிறானா?'

"எழுந்திரு முஸ்தபா! என்ன இது குழந்தை யாட்டம்? உன்னை நான் ஒரு கஷ்டத்துலேயும் தள்ள மாட்டேன். உன்னை ரட்சிக்கத்தான் என் நண்பர் ஒருத்தர் வந்திருக்கார்!"

முஸ்தபா கவலையுடன் பார்க்க,

"உள்ளே வா கமல்!"

கமல் மெல்ல உள்ளே வந்தான்.

"வணக்கம் முஸ்தபா. நான் உன் சிநேகிதன் தான்! மோசஸ் தப்பான ஒருத்தரை இங்கே கூட்டிட்டு வருவானா? சொல்லு!"

குரலை மிகவும் குழைத்து கனிவு தடவி கமல் பேச, முஸ்தபாவின் பார்வையில் உள்ள பயம் குறையத் தொடங்கியது. இன்னும் நெருங்கினான் கமல். மெல்லத் தோளில் கை பதித்தான்.

"நான் உன்கூட பேசலாமா முஸ்தபா? நீ பயப்படுவேன்னா நான் பேசலை?"



பேசவும் பிடிக்கவில்லை. வேண்டாமென்றும் மறுக்கவும் அவனுக்குத் தோன்றவில்லை. கமல் மேல் பதிந்திருந்த தன் விழிகளை எடுக்கவும் தோன்றாமல் அப்படியே நின்றான்.

"சரி நான் புறப்படறேன். நாளைக்கு உன்னைப் பார்க்க நான் வரட்டுமா?"

"சரி!" என்பதுபோல தலையசைத்தான்.

"வா மோசஸ்!" இருவரும் அறையை விட்டு வெளியே வந்தார்கள் சற்று தூரம் போய்த் திரும்ப, தன் அறை வாசலில் நின்று முஸ்தபா எட்டிப் பார்ப்பது தெரிந்தது.

"அவனுக்கு உன்னையும் பிடிச்சிருக்கும் கமல்!"

இருவரும் கேபினுக்குள் நுழைந்தார்கள். உட்கார்ந்தார்கள். தேனீர் வந்தது. "என்ன செய்யலாம் கமல்?"

"நிச்சயமா இவன் ஒற்றன் இல்லை. நீ, நான் எல்லாரும் பேசற தமிழ் தெளிவா இவனுக்குப் புரியுது. முகத்துல பளிச்சிடற பாவங்கள்ள இருந்து நமக்குப் புரியுதே!"

"அதனால?"

"இவன் தமிழன். அல்லது தமிழ் பிரமாதமா தெரிஞ்ச இந்தியன். நிச்சயமா இவன் பாகிஸ்தானி இல்லை!"

"ஒரு இந்தியன் சென்னையில தரையிறங்க முடியாதா கமல்?"

"இவன்கிட்ட எந்த ஆதாரமும் இல்லை. பேசறதும் இல்லை. நிச்சயமா இவன் ஊமை யில்லை. அப்படி இருந்திருந்தா, அதை அவனோட முனகல் வெளிப்படுத்தியிருக்கும்."

''சரி கமல்! இவன் முறையா, கோர்ட்ல ஒப்படைச்சா விசாரிச்சு இவன் யார்னு முடிவெடுக்கறது நம்ம கடமை இல்லையா?''

''நீ சொல்றது சரிதான். ஆனா இங்குள்ள அதிகாரிகளுக்கு யானை நுழையறது தெரியாது. கொசுவைப் பிடிக்க கொட்டக் கொட்ட முழிச்சிட்டு உட்கார்ந்திருப்பாங்க. இதை வேற மாதிரி அணுகலாம்!''

''எப்படி.''

''பத்திரிகைல இவன் போட்டோவோட ஒரு விளம்பரம் வந்துட்டா, பிரச்னையே இல்ல!''

''எப்படி சொல்ற?''

''இவனுக்கு வேண்டியவங்க கண்ல அந்தப் பத்திரிகை படாமலா போகும்? பார்த்த உடனே தேடி வரமாட்டாங்க.''

''சரி! நம்மதமிழ் நாட்டுல சொந்தக்காரங்க யாரும் இவனுக்கு இல்லையா.''

''தென்னிந்தியால நிச்சயமா இருக்கும் மோசஸ். எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு. எல்லா ஆங்கில, தமிழ் நாளிதழ்கள்ள ஒரே நாள்ல விளம்பரம் வரட்டும் பலன் தரும். நான் ஒரு நல்ல புகைப்படக்காரரை — பத்திரிகையாளர்தான கூட்டிட்டு வர்றேன் எப்ப வரட்டும்.''

''இன்னும் மூணு நாள்ல கப்பல் புறப்பட்டுடும். நாளைக்கே புகைப்படம் எடுத்துட்டா, நாளை மறுநாள் தகவல் வந்துரும் இல்லையா.''

''ஏன் தாமதப்படுத்தணும்? இன்னிக்கே போட்டோ எடுத்துரலாம்.''

''நாளைக்குச் செய்தி வரட்டுமே!''

''அதுதான் சரி கமல்!''



கமலேஷ் அந்தப் பிரபல புகைப்படக்காரரை தொலை பேசி மூலம் அணுகினான். அவரிடம் அன்று மாலை ஆறு மணிக்கு நேரம் பதிவு செய்து தன் வீட்டுக்கு வரச் சொன்னான். அவர்கள் வர தன் காரில் அவரை அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

இருவரும் கப்பலுக்கு வர மேல் தளத்துக்கு அழைத்துப் போனான் மோசஸ். முஸ்தபாவின் அறைக்கு வந்து அவனை வெளியே அழைத்தான்.

புகைப்படக்காரரைக் கண்டதும் முஸ்தபா கணிசமாக மிரண்டு போனான்.

கமல் அருகில் வந்தான்.

''முஸ்தபா! நீ பயப்பட வேண்டாம். உன்னை ஒரு ஆபத்தும் வராம நாங்க காக்கறோம். எத்தனை நாள் நீ இந்தக் கப்பல்ல பயணம் செஞ்சிட்டே இருக்க முடியும்? உன் ஊர், உன் மனிதர்கள், உனக்குன்னு ஒரு வாழ்க்கை இதெல்லாம் வேண்டாமா? அதை உனக்கு உண்டாக்கித் தரத்தான் இந்த ஏற்பாடு!''

கைகளைத் தட்டி தட்டி வேண்டாமென்று பார்வையால் கெஞ்சினான் முஸ்தபா.

''இங்கேயும் உனக்குப் பாதுகாப்பில்லை.. இந்திய மண்ல பிறந்த நீ அந்நிய மண்ல சிக்கினா, மீள முடியாம கூடப் போகலாம். சம்மதமா.''

முஸ்தபா பேசவில்லை.

''கொஞ்சம் ஒத்துழைப்பு குடு. ப்ளீஸ்!''

புகைப்படக்காரர் அவனைப் பல கோணங்களில் எடுத்துக் கொண்டார்.

''தேங்க் யூ ஸார்!''

''நாங்க வர்றம் மோசஸ் நாளைக்குக் காலைல இந்தச் செய்தி அடங்கின நாளிதழோட வர்றேன்!''

கமல் துரிதமாச் செயல்படத் தொடங்கினான். அவனுக்கு ஏறத்தாழ எல்லா முக்கிய பத்திரிகைகளிலும் நல்ல நட்பு இருந்தால், செயல்பாடு சுலபமாக இருந்தது. இரவு பத்துக்குள்ள எல்லா காலை பதிப்பில் மறுநாள் செய்தி வரும்படி ஏற்பாடு செய்துவிட்டு வீடு திரும்பினான்.

''என்னடா தம்பி இத்தனை லேட்டு? கவலையாய் போச்சு எனக்கு!''

''தொழில் அப்படிம்மா.''

கை, கால், முகம் கழுவிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தான்.

''அண்ணா! உன்னைத் தேடி சாயங்காலம் அஞ்சு மணிக்கு ஒரு பெண் வந்தா!''

''பெண்ணா?''

''பேரு அனுன்னு சொன்னா. தொழில் அதிபர் மாருதியோட மகளாம்!''

''அவரும் வந்தாரா?''

''இல்லை! அவ மட்டும் வந்தா!''

''என்னவாம்.''

''ஒண்ணும் சொல்லலை, ஒரு மணி நேரம் உன்னோட ஆபீஸ் ரூம்ல காத்துட்டு இருந்தா..''

''க்ளையண்டா இருக்கும்..''

''அப்படித் தெரியல!''

''பின்ன?''



''உட்கார்ந்தபடியே டேபிள் மேல இருந்த உன் கவர் போட்டோவை எடுத்துக் கையில வச்சுட்டா ரொம்ப நேரம் ரசிச்சா. நான ஒளிஞ்சு நின்னு பார்த்தேன்!'' அம்மா தண்ணீர் எடுத்து வர உள்ளே போன சமயம் அதைச் சொன்னாள் அஜந்தா.

''... ...''

''ஏண்ணா பேசலை? உன் ஆளா?''

''கொல்லுவேன் கழுதை! அண்ணன் கிட்ட தங்கச்சி பேசற பேச்சா இது? எந்திரி!''

''அட இருண்ணா, அவசரத்துக்குத் தோழியா வச்சுக்கோ. தூது போக வேண்டி வந்தா ஆள் கிடைக்காம அலைவே!''

அவன் அடிக்க கை ஓங்க, எழுந்து ஓடினாள் அஜந்தா. அம்மா வந்துவிட்டாள்.

''தம்பி, தரகர் வந்தார். நம்ம அஜந்தா ஜாதகத்தை எடுத்து வரலாமான்னு கேக்கறார்!''

''எனக்கு என்னம்மா அவசரம்?'' சிணுங்கினாள் அஜந்தா.

''அவசரம் தான். இந்தக் கழுதையை முதல்ல வீட்டை விட்டுத் துரத்தணும். வரம் பார்க்கச் சொல்லும்மா இங்க வா வாலு!''

அஜந்தா வர, அவள் காதைப் பிடித்துத்திருகிக் கொண்டே, ''யாராவது செட்டப் பண்ணிட்டாங்களா உன்னை?''

''போண்ணா, இல்லை!''

''அப்ப நான் பார்க்கற முட்டாள் கழுத்துல நீ தாலி கட்டலாம்..''

''அண்ணா..''

''ஓ... அவன்தான் உனக்குக் கட்டுவானோ? மறந்துட்டேன்.'' சில கேள்விகளை அவசரமாக ஒரு முன்னோட்டம் பார்த்து விட்டு கமல் படுக்கைக்கு வர மணி பதினொன்று.

விளக்கை அணைத்துவிட்டுக் கண்களை மூடினான். முஸ்தபாவின் உருவம்.

இத்தனைபயமும் பீதியும் சொட்டும் ஒரு ஆண் முகத்தை வாழ்நாளில் இதுவரை சந்தித்ததில்லை.

கலைந்த தலை... பெரிய கண்கள்! அதனடியில் கருவட்டம் கட்டி கலவரத்தில் உருளும் கண்மணிகள்.

வட்ட முகம் .. பீதியில் துடிக்கும் அந்த தடித்த உதடுகள். மங்கலான நிறம்தான். ஷேவ் செய்யாத ரோமக் காட்டில் சிக்கியிருந்த முகத்தில் ஜீவகளை மட்டும் தொலைந்து போயிருக்கவில்லை. சட்டையைக் கையில் பிடித்தபடி, என்னை ஒன்றும்செய்து விடாதீர்கள்'' என்ற பார்வை. பரிதாபமான இளைஞன்...

'எப்படி வந்து இந்தக் கப்பலில் சிக்கிக் கொண்டான்?'

'நிச்சயமாக இவன் நடிக்கவில்லை!'

'ஊமையும் அல்ல!'

'ஆனால் 'முஸ்தபா' என்ற ஒரு சொல் மட்டும் தான் அவன் உதட்டிலிருந்து உதிர்கிறது.'

'நிச்சயமாக மனநலம் குன்றியவன்தான் இவன்!''

'இவனை இங்கிருந்து வெளியே கொண்டு வந்த பிறகுதான், உண்மைகளை வெளிக் கொணர முடியும்!'

'முடியுமா?'

'உனக்கேன் இத்தனை அக்கறை?' உள் மனது அவசரக் கேள்வி ஒன்றை அவ்வப்போது அனுப்பிக்



கொண்டிருந்தாலும் அந்தக் கேள்வியை அலட்சியப் படுத்திக் கொண்டு ஆவல் கிளம்புகிறது.

நள்ளிரவுக்கு மேல் உறங்கிப் போனான் காலை எழுந்ததும் ஹாலில் தினசர் படித்துக் கொண்டிருந்தாள் அஜந்தா. அதை வெடுக்கென பறித்தான் கமல்.

''அண்ணா!''

''நீ அப்புறமா படிக்கலாம் நான் பார்க்கணும் முதல்ல!''

அவசர அவசரமாகப் புரட்டினான். ஐந்தாம் பக்கம் வெளியாகியிருந்தது முஸ்தபாவின் முகம். கீழே செய்தி.

இவன் முஸ்தபா. இவனுக்கு உறவோ, நண்பர்களோ இருப்பின் உடனடியாகத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி .. கீழே முகவரி தரப்பட்டிருந்தது. துறைமுகத்தை ஒட்டிய காவல் நிலையத்தின முகவரி. ஏறத்தாழ எல்லா பதிப்புகளிலும் அந்தப் புகைப்படம் செய்தியுடன் வெளியாகியிருந்தது.

கேப்டன் மோசஸ் அதைத்தான் படித்துக் கொண்டிருந்தான் தன் கேபினில்.

அதே நேரம் நாலைந்து பேர்கள், துறைமுகத் தொழிலாளர்கள் போல கப்பலுக்குள் நுழைந்தார்கள். மற்ற தொழிலாளர்களும அங்கே வேலையில் இருந்ததால், அந்த நாலைந்து பேர் யார் கண்களையும் உறுத்தவில்லை.

அவர்கள் வேகமாக முன்னேறி, மேல் தளத்துக்கு வந்துவிட்டார்கள். திருப்பங்களைக் கடந்து மளமளவென முன்னேறி கோடியில் இருந்த முஸ்தபாவின் அறையை அடைந்துவிட்டார்கள். கதவைத் தட்ட, அதே பத்திரிகையில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த முஸ்தபா,

அது மோசஸ்தான் என்ற தைரியத்தில் நிதானமாகச் சென்று கதவைத் திறந்தான்.

அந்த ஐந்து பேரும் குபீரென்று உள்ளே பாய்ந்தார்கள். முஸ்தபா அந்த அதிரடித் தாக்குதலை எதிர்பாராமல் நிலை குலைந்தான்.

தற்செயலாக அந்தப் பக்கம் வந்த ப்ரிகேடியர் ஜான் முஸ்தபாவின் அறைக்குள் கலவரமாக ஓசை கேட்க, மேல் தளத்தில் இருந்த தொழிலாளர்களைப் பார்த்துக் கூச்சலிட்டான். அவர்கள் தடதடவென இறங்கி ஓடி வர, இந்த முரடர்களை கண்டு நடுங்கி, பின்னடைந்து சுவரில் முட்டிக் கொண்டு கலவரத்துடன் முஸ்தபா நிற்க, ஒருவன் இடுப்பிலிருந்த மடக்குக் கத்தியை எடுத்து சரக்கென விரித்தான். பளபளத்த அந்த வஸ்துவுடன் வேகமாக முஸ்தபாவை நோக்கி முன்னேறினான்.

## 7

கமலேஷ் மோசஸ் கேபினுக்குள் நுழைந்தபோது மோசஸ் சோர்ந்து உட்கார்ந்திருந்தான். முகத்தில் ஆங்கங்கே காயங்கள், உடைகள் சில இடங்களில் கிழிந்து தொங்க, கமலை ஏறிட்டான்.

"என்னடா ஆச்சு உனக்கு?"

"உன் பத்திரிகை விளம்பரத்துக்குப் பலன்!"

"மோசஸ், என்ன சொல்றே?"



"நாலு ஆட்கள் துறைமுகத் தொழிலாளிகள் போல உள்ளே வந்துட்டாங்க. எப்படி, எந்த அனுமதியும் இல்லாம அவங்களால வர முடிஞ்சதுன்னு இப்பவும் எனக்குப் புரியலை. நிச்சயமா கடல் வழியாதான் நீந்தி வந்திருக்கணும்!"

"விவரத்தைச் சொல்லு!"

"முஸ்தபாவைக் கொலை செய்ய முயற்சி செஞ்சாங்க. ஒரு நிமிடம் அசந்திருந்தாலும், முஸ்தபா எமன் வாய்ல. எப்படியோ காப்பாத்திட்டம் கடவுள் கருணையால."

"அப்படியா!"

"ஆமாம் ஆனா அந்த நாலு பேர்ல ஒருத்தனைக் கூடப் பிடிக்க முடியலை. இங்கிருந்து கடல்ல குதிச்சிட்டாங்க!"

"முஸ்தபாவைப் பார்க்கலாமா?"

"வா!"

இருவரும் நடந்தார்கள்.

"ஐயாம் சாரி மோசஸ்... என் முயற்சிகள் நல்ல திசைல தொடங்கும்னுதான் நான் பத்திரிக்கையை அணுகினேன்!"

"பரவாயில்லை கமல். கொஞ்சம் போராட்டமோ அதன் மூலம் சிந்தப்படற ரத்தமோ தவறில்லை. ஆனா அந்த அப்பாவியோட உயிருக்கு யாரோ கெடு வச்சாச்சு!"

இருவரும் அறைக்குள் நுழைய மிரண்டு திரும்பினான் முஸ்தபா. "நான்தான்!" பரிதாபமாகப் பார்த்தான். அருகில் வந்து அவனை அணைத்துக் கொண்டான் கமல்.

"பயப்படாதே. உன் மதிப்பு கூடியிருக்கு. இப்ப தேடி வந்து உன்னைக் கொலை பண்ற அளவுக்கு

விளம்பரம் தாக்கத்தை உண்டாக்கியிருக்கு. இது நல்ல பலன் இல்லையா?'' அவன் பார்வையில் கெஞ்சல். என்னைக் காப்பாற்றுங்கள் என்ற கோரிக்கை.

''உனக்கு ஒரு ஆபத்தும் வராது முஸ்தபா. நாங்க இன்னும் கூடுதல் எச்சரிக்கையா இருப்போம்!''

இருவரும் வெளியே வந்தார்கள்.

''நாளைக்குக் கப்பல் புறப்படணும்!''

''ம்! இனிமே நேரடி முயற்சில இறங்கினாத்தான் நல்லது!''

''என்ன செய்யப் போறே?''

''கலெக்டரைச் சந்திக்கப் போறேன்!''

''சந்திச்சு? கஸ்டம்ஸ் கலெக்ட்ரைத்தானே?''

''ஆமாம்!''

''என்ன செய்வே?''

''ஒரு இடைக்கால உத்தரவு வாங்கறது!''

''புரியலை!''

''கஸ்டம்ஸ் ஆக்ட் 314 சொல்லுது படிச்சிட்டேன். அவன் யார்னு தெரிஞ்சுக்க முடியலையானாலும் இடைக்கால உத்தரவின் பேரில் அவனைக் கோர்ட்ல சப்மிட் பண்ண முடியும்.''

''தேங்க்யூ கமல் நீ சட்டம் பேசினாத்தான் இங்கே வேலை நடக்கும்.''

''செய்!''

''நமக்கு அவகாசமே இல்லை. நான் நேரா கஸ்டம்ஸ் கலெக்டரைத்தான் சந்திக்கப் போறேன்!''

''நல்லது!'' கமல் வெளியே வந்து விட்டான்,



கலெக்டர் அலுவலகத்துக்கு வந்துவிட்டான். அவரைப் பார்க்க ஒரு கூட்டம் இருந்தது. ஒரு துண்டு காகிததநில் தன் பெயரை எழுதி விவரங்களும் சுருக்கமாகத் தந்து உள்ளே அனுப்பினான். பத்தே நிமிடங்களில் அழைப்பு வந்தது.

நுழைந்தான்.

''வாங்க மிஸ்டர் கமலேஷ், உங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கேன். நம்பர் ஒன் கிரிமினல் லாயர். குட்! சந்திப்புல சந்தோஷம், உட்காருங்க!'' எதிரே உட்கார்ந்தான்.

''சொல்லுங்க''

கமலேஷ் எல்லாம் விவரமாகச் சொன்னான். ''என் வெறி இப்ப அதிகமாக காரணம் பத்திரிகைச் செய்தி வெளியானதும் நாலு பேர் முஸ்தபாவைக் கொல்ல முயற்சி செஞ்சிருக்காங்க. யாரந்த நாலு பேர்? தெரியலை. பிடிபடலை. ஆனா முஸ்தபா இந்த மண்ணைச் சேர்ந்தவன்னு தெளிவாகப் புரிஞ்சு போச்சு!''

''ஒரு வேளை அவன் யாருக்காவது பாதகம் பண்ணிட்டு கப்பல்ல வந்த பதுங்கியிருந்தா?''

''நெவர் கலெக்டர். அப்படிப்பட்டவன் இல்லை முஸ்தபா. ஒருமுறை நீங்க பார்த்தா, உங்களுக்கே புரியும்!''

''சரி நான் என்ன செய்யணும்!''

''அவன் ஒரு அப்பாவி இந்தியன். ஒரு இடைக்கால உத்தரவு பிறப்பிக்க, அவனை வெளியே கொண்டு வரணும்!''

''அது முடியாதே!''

''ஆக்ட் 314 இருக்கே கலெக்டர்!''

அவர் ஆடிப் போனார். ''யாரும் உங்களைக் கேள்வி கேட்க முடியாது. சட்டம் இருக்கு. நீங்க உயர் அதிகாரி, யார் உத்தரவு வேணும் உங்களுக்கு?''

"இதுல அரசியல் இருக்குமா கமல்?"

"இருக்கலாம் ஆனா வெளிப்படலை. அதுக்குள்ள முந்திக்கலாம் ப்ளீஸ் சார் ஒரு அப்பாவியை அம்போனு விடறது முறையில்லை அவனோட சொந்த மண்ல இறக்க அவனுக்கே அனுமதி மறுக்கப்பட்டா, இங்கே சட்டமும், சமூக அமைப்பும் கேலிக்கிடமாயிடும்."

"சரி நான் உடனடியா ஆர்டர் போடறேன். நாளைக்கு..."

"போதாது சார் கப்பல் புறப்பட்டுடும். அந்த ஆர்டரை இன்னிக்கே இப்பவே நீங்க போட்டாக் கூட தப்பில்லை. இவனை வெளியே கொண்டு வந்திரலாம் ப்ளீஸ்!"

"நீங்க கொஞ்சம் வெளியில இருங்க நான் கூப்பிடுறேன்!" கமல் ரிசப்ஷனில் வந்து உட்கார, கலெக்டர் அதற்கான சில சட்ட புத்தகங்களை உருவி, சட்டங்களை அலசத் தொடங்கினார்.

கமல் எமன்!

"புட்டுப்புட்டு வைக்கிறான். நாளை நான் தயங்கினால் என்மேல கூட வழக்கு தொடருவான். விடக்கூடாது!"

'ஒரு அப்பாவி இந்தியனை ரட்சிக்க நான் காட்டும் தயக்கம், நாளை என் பதவிக்கே குழி பறிக்கலாம்!'

'நமக்கென்ன நஷ்டம்!'

'ஒரு நியாயமான கோரிக்கைக்குச் செவி சாய்ப்பதில் தவறே இல்லை!'

ஸ்டெனோவை அழைத்தார். கடிதம் டிக்டேட் செய்தார் தயாராகி விட்டது.

"உடனே டைப் பண்ணிக் கொண்டு வா, மிஸ்டர் கமலேஷை உள்ளே அனுப்பு!"



கமல் வந்தான்.

"ஆர்டர் ரெடியாயிடும். இருந்து வாங்கிட்டுப் போயிடுங்க!"

"தேக்யூ சார். நீங்க மட்டும் இல்லைன்னா பாவம் அந்த அப்பாவிக்கு ஒரு விடி மோட்சமே இல்லாம போயிருக்கும்!"

"என் கடமை கமல்!"

ஆர்டர் வந்து விட்டது. அதைப் படித்துவிட்டு கையெழுத்துப் போட பேனாவை எடுத்தார் கலெக்டர். டெலிபோன் அழைத்தது.

எடுத்தார். "யெஸ்!"

"நான் உள்முறை அமைச்சர் வெள்ளைச்சாமி பேசறேன்!"

"சொல்லுங்க சார்!" கலெக்டர் பவ்யமானார்.

"அந்த முஸ்தபாவை வெளில கொண்டு வரக்கூடிய எந்த முயற்சிக்கும் நீங்க உதவக் கூடாது."

"சார். ஒரு இடைக்கால...!"

"நோ... இது என் உத்தரவு, நீங்க நேர்ல வந்தா சந்தோஷப்படுவேன். முடியுமா உடனடியா!"

"வர்றேன் சார்!"

ரிசீவரை வைத்தார். "அமைச்சர் அவசரமாக அழைக்கிறார். நான் புறப்படணும் கமல்."

"சார்! அதுக்கு முன்னால இதுல ஒரு கையெழுத்து?"

"பிரச்சனையே இதுதான். இடைக்கால உத்தரவு போடக்கூடாதுனு அவர் சொல்றார். எங்கிட்ட நேர்ல பேசணுமாம்."

"நானும் வரட்டுமா?"

"நீங்க அழைக்கப்படலையே!"

"தேவலை. அங்கே வந்து சந்திச்சா போச்சு. யார் முயற்சி இதுன்னு கேட்டா, தைரியமா என் பேரைச் சொல்லுங்கள்! போகலாமா?"

"ம்."

இருவரும் தலைமைச் செயலகத்தை அடையும் போது அப்போதுதான் சட்டப்பேரவை முடிந்து அறைக்கு அமைச்சர்கள் திரும்பிக் கொண்டிருந் தார்கள். கமல் வெளியே நிற்க கலெக்டர் மட்டும் போனார். உள்ளே,

சிவதாசனும், வெள்ளைச்சாமியும்.

"வணக்கம்."

"ஓ... நீதான் கஸ்டம்ஸ் கலெக்டரா?"

"தாஸ்! கொஞ்சம் மரியாதையாப் பேசுங்க. அவர் ஒரு பொறுப்பான அதிகாரி." அமைச்சர் எச்சரித்தார்.

"முகம் தெரியாத ஒருத்தனை கப்பலை விட்டு இறக்கச் சொல்ற அதிகாரி பொறுப்பானவரா!"

"என்ன பதில் சொல்றீங்க கலெக்டர்? யார் உங்களைத் தூண்டி விட்டது?"

"அட்வகேட் கமல்."

"அதானே பார்த்தேன். அந்த நாய் திரும்பவும் நம்ம வட்டத்துள்ள முகத்தை நீட்டுதா?"

"தாஸ்."

"கமல் வந்திருக்கார் இங்கே. வெளில நிக்கறார். சார் என்னை மன்னிச்சிடுங்க. உரிய சட்டத்தைக் காண்பிச்சா, நான் மறுக்கவா முடியும்? இதுல என் பங்கு எதுவும் இல்லை."

"நல்லது! எந்த இடைக்கால உத்தரவும் வேண்டாம். புரியுதா?"

"நீங்க போய் அந்த அட்வகேட்டை அனுப்புங்க."

அவர் வெளியேற,



"அந்த வக்கீலை உள்ளே தள்ள வழியுண்டானு பாருங்க வெள்ளைச்சாமி."

"அவர் மேலே உனக்கென்ன இத்தனை பகை தாஸ்?"

"எ... எனக்கென்ன? பொறுப்பான பதவில இருக்கற நீயும், நானும் அராஜகம் உள்ளே வர அனுமதிக்கலாமா?"

"நான் வரலாமா சார்?"

"யெஸ்."

கமல் நுழைய, "அராஜகம் உள்ளே வந்தாச்சு!"

வெள்ளைச்சாமி, சிவதாசனை முறைத்து விட்டு, "வாங்க அட்வகேட்! உட்காருங்க."

"இருக்கட்டும் சார்."

"விடுங்க சட்டத்தை மட்டுமே கையில புடிச்சிட்டுப் பேசறது முறையில்லை. இவன் இந்தியனா இருக்கலாம்; உத்தமனாக்கூட இருக்கலாம். இவன் மூலம் ஒரு தப்புக்கு கதவு திறந்து விடறோம் நாம்."

"சார்."

"இவனைப்போல அடுத்த கப்பல்ல வரலாம். இன்னும் ரெண்டு பேர். அவங்களை இறக்கினா ஆபத்து. இறக்கலைன்னா, அவனை மட்டும் எந்தக் க்ரௌண்ட்ல இறக்கினேனு கோர்ட் வரைக்கும் போக வாய்ப்புண்டு. அதுமட்டுமில்லை, இவனே எந்த ஆதாரமும் இல்லாம வந்திருக்கான். அயல்நாட்டு ஒற்றனா இருந்து, நாலு பேர் நாற்பது பேரானா, திரும்பவும் இந்தியா தன் சுதந்திரத்தை இழக்கற நிலைகூட வரலாம்."

கமல் சிரித்தான்,

"ஏன் சிரிக்கிறீங்க?"

"இது அதிக கற்பனை சார். அவன் அப்படிப் பட்டவன் இல்லை, இந்த மண்ல யாருக்கும்

அவனைத் தெரியாதுன்னு சொல்ல முடியாது. விளம்பரம் வந்த உடனே, அவனைக் கொலை செய்ய முயற்சி நடந்திருக்கு டாக் யார்ட்ல! அப்ப டீன்னா, தரை தொட்டு ஏதோ ஒரு உண்மை அவன் மூலம் வெளிப்படுமானா, யாருக்கோ இங்கே இடிக்குது. யாருக்கு?''

''மிஸ்டர் கமல்.''

''ப்ளீஸ் சார். தடுக்க வேண்டாம் அவனை. வெளில உலவவிட வேண்டாம். போலீஸ் கஸ்டடில வைங்க.''

''காரணம்?''

''ஹும் ஒருத்தனை உள்ளே தள்ள இங்கே காரணமா வேணும்? போலீஸ் அப்படியா செயல்படுது?''

''ஒரு அமைச்சர் எதிர்ல அரசாங்கத்தை மறைமுகமா நீ தாக்கறது குற்றம்.''

சிவதாசன் குறுக்கிட்டார்.

''இவர் எம்.எல்ஏ இல்லையா? எந்த மாவட்டம்? எதுவானா என்ன? இவருக்கு முஸ்தபா வெளில வர்றதால பாதிப்பு உண்டா?''

சிவதாசனின் முகம் கடுமையாக இருண்டது.

''என்ன சார் சொல்றீங்க?''

''ஸாரி கமல். அவன் வெளியே வரக்கூடாது. ஓர் அயல்நாட்டு ஒற்றனாத்தான் அவனை நாங்க கருதறோம்.''

''சார்.''

''ப்ளீஸ்... இதோட இந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைப்போம். நீங்க போகலாம்.''

அவன் திரும்ப, சிவதாசன் குரல் முதுகில் மோதியது. ''வந்துடுவானுங்க, கறுப்புக் கோட்டைக் கையில் தூக்கிப் புடிச்சிட்டு, சட்டம் என்ன வெங்காயமா? அரசியல்வாதி கையில் இருக்கற பொருள் அது.'' திரும்பினான் கமல்.



அருகில் வந்தான்.

''நிஜம்தான். நீங்க சொல்றது. வாக்கியத் தோட முடிவுல ஒரு சின்ன மாற்றம். கசாப்புக் கடைக்காரன் கையில கத்தி இருக்கற மாதிரி உங்க கையில சட்டம். வெட்டித் தள்ளறது மக்களோட வாழ்க்கையை.''

''இங்கே நீ முறை கேடா நடந்துக்கிட்ட துக்காக உன்னை உள்ளே தள்ள எங்களால முடியாதா?''

சிரித்தான் கமல்.

''ஏன் முடியாது? கொஞ்சநாள்ள வெளில உள்ளவங்க எல்லாரும் உள்ளே வந்துருவாங்க. தப்பில்லை. உள்ளே இருக்க வேண்டிய குற்றவாளி களை உயர்ந்த பதவி கொடுத்து வெளில நடமாட விட்ட தண்டனைக்கு இங்குள்ள மக்கள் அனுபவிக்கத்தான் வேணும்.''

''மிஸ்டர் கமல்.''

''ஸாரி ஸார். நான் வர்றேன்.''

''எங்களை ஜெயிக்க முடியுமா?''

கமல் நின்றான். சிரித்தான். சிவதாசனைப் பார்த்து சட்டென விரலை உயர்த்தி விட்டான்.

''நிச்சயமா ஜெயிக்க முடியும். தர்மத்தின் வாழ்க்கையை சூது கவ்வும். பின் ஒருநாள் தர்மம் வெல்லும்'னு பாரதம் சொல்லியிருக்கு. சூது எங்கே தொடங்குன்னு தெரிஞ்சு போச்சு. வர்றேன்.''

அவன் வெளியேற—

''பார்த்தியா வெள்ளை?''

''நீ வாங்கிக் கட்டிக்கிட்டா அதுக்கு நானா பொறுப்பு?'' அமைச்சர் வெறுப்புடன் உள்ளே போனார்.

34228
5168583
கொளத்தூர், சென்னை

## 8

வீட்டுக்குள் நுழைந்தான் கமல்.

அனு இருந்தாள்.

''ஹலோ? எப்ப வந்திங்க? அன்னிக்கே வந்து காத்துட்டு இருந்ததா சொன்னா தங்கை. என்ன விஷயம்?''

''இன்னிக்கும் ஒரு மணி நேரமா காத்திருக்கேன்''

''என்ன விஷயம்?''

''ஏன்? விஷயம் இல்லாம வரக் கூடாதா?''

''அ... அப்படியில்லை. இருந்தாலும் எந்தச் சந்திப்புக்கும் ஒரு காரணம் வேணுமில்லையா?''

''அம்மா டீ கொண்டு வா. அஜந்தா இல்லையா?''

''வெளில போயிருக்காப்பா. நான் டீ போட்டு எடுத்துட்டு வர்றேன் நீ அனுகிட்ட பேசிட்டு இரு.''

''சொல்லுங்க, காரணம் வேண்டாமா?''

''வேண்டாம். அது காதல் சந்திப்பா இருந்தா!''

''நினைச்சேன். அன்னிக்கு அஜந்தா சொன்னப்பவே நினைச்சேன். சரியாப் போச்சு. பார்த்த உடனே உங்களுக்கெல்லாம் எப்டீங்க காதல் வருது? டூயட் பாடினீங்களா கனவுல?''

''போதும் நல்ல கிண்டல்.''

அவள் மெல்லச் சிணுங்கினாள்,



அம்மா டீயோடு வந்தாள். ''இந்தாம்மா. அவன் கிண்டலை நீ பொருட்படுத்தாதே!''

''சரிம்மா.''

டெலிபோன் அழைக்க, கமல் போய் எடுத்தான்.

''ஸாரி மோசஸ். அமைச்சர் வெள்ளைச்சாமி உள்ளே புகுந்து இடைக்கால உத்தரவைத் தடுத்துட்டார். நிச்சயமா இதுல அரசியல் இருக்கு. அவனுக்குக் கடுமையான எதிரிகள் இருக்காங்க. ஒரு சமயம் பார்த்தா, அவன் தரை இறங்கறதை விட கப்பல்ல தன் வாழ்நாளைக் கழிக்கிறது பாதுகாப்போ?''

''அது எத்தனை நாள் கமல். இனி இல்லை.''

''ஏன் அப்படிச் சொல்ற?''

''அவன் மேல கண் வச்சாச்சு. ஒரு மீனவ லான்ச்ல வந்தாவது கப்பல்ல புகுந்து அவனைக் கொல்ல முடியாதா? எத்தனை நாளைக்கு நான் பாதுகாக்க முடியும்?''

''நிஜம் தான்!''

''நாளைக்குக் காலைல கப்பல் புறப்படுது. கடவுள் விட்ட வழி.'' மறுமுனையில் துக்கத்துடன் ரிசீவரை கேப்டன் மோசஸ் வைப்பது தெரிந்தது.

''அப்புறம்?''

அனு கேட்க, ''நீங்க புறப்படுங்க அனு!''

''போகச் சொல்லிட்டா, போயிடுவேனா?''

''மிஸ் அனு! எனக்கு நிறைய வேலை இருக்கு. என்னையாரும் தொந்தரவு பண்றதை விரும்பலை. நீங்க போகலாம்.'' கடுமையான அவன் வார்த்தைகள் அனுவைக் காயப்படுத்த அடிப்பட்ட கண்களோடு அகன்றாள். கமல் தன் அறைக்குள் நுழைந்து குறுக்கும் நெடுக்குமாக நடக்கத் தொடங்கினான்.

'மோசஸ் சொல்றது நிஜம்தான்.'

'முஸ்தபாவுக்கு இனி கப்பலிலும் நிச்சயமாக பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை.''

'ஏன்? நீ யாரை என்ன செய்தாய்?'

'உன்னால பாதிக்கப்பட்டது யார்?'

'கேள்வி மேல் கேள்வி புறப்பட்டது.'

'உன்னை எப்படி நாங்கள் காப்பாற்றப் போகிறோம்?'] தொலைபேசி அழைத்தது.

வெறுப்பாகப் போய் எடுத்தான்.

''கோர்ட்ல லாயரை அடிச்சிட்டான் சார் மருது.''

''எதுக்காக?''

''காரணம் தெரியலை. மருதுவுக்கு மனநோயா இருக்குமா சார்? நீங்க உடனடியா வர முடியுமா?''

''டாக்டர் பராமரிப்புல விடுங்க. சரி நான் வந்து பார்க்கிறேன்!'' மருது அவன் க்ளையண்ட்.

அதனால் போக வேண்டிய கட்டாயம்.

'மனநோயுள்ள ஒரு மனிதன் யாரையாவது அடித்துவிட்டால், அதை வழக்காக்க முடியுமா?'

'இது எந்தச் சட்டத்தின் கீழ் வருகிறது?'

பைக்கை ஸ்டார்ட் செய்தவன், சட்டென நின்றான். முகம் பளிச்சென வெளிச்சம் போட்டது.

'ஆ... இப்படி செய்தால், நிச்சயம் முஸ்தபாவை வெளியே கொண்டு வந்துவிடலாம்!''

தன் பாதையை மாற்றிக் கொண்டான். நேராக துறை முகத்துக்குள் நுழைந்தான்,

மோசஸ் தன் அறையில் இருந்தான்.



கமல் அவனை ஏற இறங்கப் பார்த்து விட்டு, படபடவென மோசஸ் இருந்த அறையைத் தாறு மாறாக கலைக்கத் தொடங்கினான். ''கமல் என்னாச்சி உனக்கு?''

''இரு.'' டைப்ரைட்டரை கவிழ்த்து வைத்தான் பத்தே நிமிடங்களில் அந்த அறை ஒரு போர்க்களம் போல இருந்தது.

''ஒரு சண்டை நடந்தமாதிரி இருக்கா இங்கே?''

''ம்!''

''போதாது! இன்னும் கொஞ்சம் பாக்கி யிருக்கு'' மோசஸை நெருங்கியவன் 'டர்'ரென அவன் சட்டையை மார்புப் பகுதியில் கிழித்தான் பெரிதாக. ''கமல்!''

''கொஞ்சம் ரத்தம் இருந்தா தேவலை?''

''ரத்தமா?''

அவனே எதிர்பாராத நிமிடம் அவன் முகத்தில் கமல் ஓங்கிக் குத்த, மோசஸின் மூக்கிலும், உதட்டி லும் ரத்தம் வழியத் தொடங்கிவிட்டது. மோசஸ் ஆவேசமானான. ''என்ன நினைச்சிட்டு இருக்கே கமல் நீ?''

''இடைக்கால உத்தரவு வந்ததும் வெளில போகலாம்னு நீ முஸ்தபாகிட்டே சொன்னே இல்லையா? முஸ்தபா அதுக்காகத் தன்னைத் தயார் படுத்திட்டு காத்துட்டு இருக்கான். இப்ப உத்தரவு கிடைக்கல மறுக்கப்பட்டாச்சு. தான் தரையிறங்க வழியில்லை. அந்த ஏமாற்றம் அவனை ஆவேசப்படுத்த, படிப்படியா வெறியாகி, இங்கே நுழைஞ்சிட்டான். கடுமையான தாக்குதல். சரி தானா?'' மோசஸ் குழப்பத்துடன் கமலைப் பார்க்க—

"ஒருத்தன் தாக்கப்பட்டா என்னடா செய்வான்?"

"திருப்பித் தாக்குவான்!"

"தட்ஸ் குட்! இப்பத்தான் விஷயத்துக்கு வர்றே நீ. உடனே புகார் குடு."

"அதனால?"

"ஒரு மன நோயாளிக்குக் கொலை வெறி உண்டாகியிருக்கு. நீ கப்பல்ல வெச்சுக்கணும்னு இல்லை. அது மட்டுமில்லை, அவனைக் கைது செய்ய வேண்டியது போலீஸ் கடமை!"

"கைதா! பாவம் அவன்!"

"புரிஞ்சுக்கோ மோசஸ். அவனை இந்த வழியால வெளில கொண்டு வர்றதைத் தவிர எனக்கு வேற வழி தெரியல!"

"கமல்." மோசஸ், தன் கண்களை விரித்தான் ஆச்சரித்தால். "வெரிகுட். அந்த முஸ்தபா ரட்சிக்கப்பட, இன்னமும் ரத்தம் சிந்தக்கூட நான் தயார் கமல்"

"நேரமில்லை. சீக்கிரம் போலீசுக்குத் தகவல் குடு!"

மோசஸ் டெலிபோன் நோக்கி ஓடினான்.

## 9

"எங்கே போயிட்டு வர்றே?"

"உங்களுக்கு விவரம் தெரியுமா டாடி? அந்த முஸ்தபா எத்தனை சாதுர்யமா வெளில கொண்டு வந்துட்டார் பார்த்தீங்களா கமல்?"

"எந்த முஸ்தபா" கொட்டாவி விட்டார் மாருதி.



"சரிதான். எதுவுமே தெரியாதா உங்களுக்கு?"

"போம்மா! என் பிஸினெஸ் பார்க்கவே எனக்கு 24 மணி நேரம் போறதில்லை இதுல யாரைப் பற்றியோ நான் தெரிஞ்சிட்டு என்ன ஆகணும்"

"நான் சொல்லட்டுமா?"

"ம்!"

மோசஸ்—கேப்டனின்—பராமரிப்பில் இருக்கும் முஸ்தபா பற்றித் தொடங்கி, சமீபத்தில் போலீஸ் வந்து கதறக் கதற முஸ்தபாவை இழுத்துக் கொண்டு போனது வரை சொன்னாள்.

"ஏன் அவன் வெளில வர்றதால யாருக்குக் கஷ்டம்?"

"தெரியல. கொலை முயற்சி நடந்திருக்கு. அரசியல் வட்டாரத்துல. அவன் தறையிறங்கறது தடுக்கப்படுது. ஏன் டாடீ."

"யாரந்த அரசியல்வாதி?"

"வெள்ளைச்சாமி—சிவதாசன்!"

"இதையெல்லாம் உனக்குச் சொன்னது யாரு"

"கமல்!"

"எப்ப அவரைச் சந்திச்சே"

"சமீப காலமா. டாடி அவரை நான் விரும்பறேன். அவரும் என்னை நேசிக்கிறார் அதனால தான் இத்தனை கதையும் எனக்கு கமல் சொன்னார் கேஸ் முடிஞ்சு வந்த பின்னால தான் கல்யாணம் டாடி. கமல் ஜென்டில்மேன், வேணும்னா விசாரிச்சுத் தெரிஞ்சுக்குங்க!"

"எனக்கு யோசிக்க அவகாசம் வேணும்."

"சரி டாடி!"

"இப்ப முஸ்தபா எந்த போலீஸ் ஸ்டேஷன்ல வைக்கப்பட்டிருக்கான்னு தெரியுமா?"

''ஏன் டாடி? இன்ஸ்பெக்டர் அலெக்ஸ் பாதுகாப்புல!''

''நீ சொல்ற மாதிரி இதுல அரசியல் இருக்கு. அது கமலுக்குப் புரிஞ்சும் இப்படி ஏற்பாட்டை செஞ்சது முட்டாள்தனம் இல்லையா''

''புரியலை.''

''ஒரு கஸ்டம்ஸ் கலெக்டரையே கைக்குள்ள வச்சிருக்கற மந்திரியால, ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரை வச்சுக்கிறதா கஷ்டம்?''

''அப்படீன்னா''

''லாக்கப்புல்ல வச்சு முஸ்தபா கொல்லப் பட்டா ஆச்சரியமில்லையா''

''டாடி''

''ஆமாம்மா. அதுதான் பரவலா இன்னிக்கு நடக்குது. இப்பல்லாம் குற்றங்களோட வேர் போலீஸ்காரனுங்க கிட்டதான் இருக்கு. நான் அரசியல்வாதிகளால் ரொம்பவும் தாக்குதலுக்கு உள்ளானவன். அப்படியும் தெய்வம் என் பக்கம் இருந்ததால் தப்பித்தேன். கமலை நீ மறந்துடு''

''டாடி!''

''ப்ளீஸ்மா. அவன் ஒரு க்ரிமினல்லாயர். தேவையில்லாம இது மாதிரி அடாவடிகள்ள நுழையறது எனக்குப் பிடிக்கலை!''

''அது அவர் தொழில் டாடி?''

''எது தொழில் எவனையோ வெளியே கொண்டுவர்றது தொழிலா வக்கீல்னுகூட பார்க்காம, இவனைத் தீர்த்துக் கட்டுவாங்க. காலம் முழுக்க நீ கண்ணீர் விடவா உன்னை நான் ஆளாக்கினேன்.''



''அப்பா''

''விட்டுடும்மா இந்தப் பேச்சை. வேலை நிறைய இருக்கு எனக்கு'' அவர் போய்விட, அனு குழம்பிப் போனாள்.

## 10

இன்ஸ்பெக்டர் அலெக்ஸ் எதிரே கமலேஷ் இருந்தான். மோசஸ் போன் செய்த சற்று நேரத்துக்கெல்லாம் போலீஸ் வந்துவிட, பதுங்கிக் கொண்டான் கமல். மோசஸ் விவரம் சொல்ல, அலெக்ஸ் உடனடியாக முஸ்தபாவின் கேபினுக்குள் நுழைய, முஸ்தபா வெலவெலத்துப் போனான்.

மோசஸ் ஓடிவந்து, ''இன்ஸ்பெக்டர் வன்முறை வேண்டாம். அவன் உடம்பு தாங்காது.''

''எனக்குத் தெரியும்!''

முஸ்தபா கைது செய்யப்பட, கதறிக் கொண்டே போலீசுடன் போனான். அவர்கள் ஜீப்பில் ஏறி அது மறைந்ததும் வெளிப்பட்டான் கமல்.

''தேங்க்யூ மோசஸ். உன் உதவிகளை நான் மறக்க மாட்டேன்.''

மோசஸின் கண்களில் ஊற்று.

''நீ அழறியா மோசஸ்''

''இ...இல்லை கமல்''

''புரியுது எனக்கு. முகம் தெரியாத அவன்கிட்ட முழுமையாய் பாசம் வச்சிட்டே நீ. அதனால அவனை விட்டுப் பிரிய முடியல''

''ஆமாம். ஒரு அப்பாவி ! இளைஞன் தன்னைத் தானே உணர்ந்துக்க இப்பவும் முடியல அதனால. அவனை நீ ஜாக்ரதையா பராமரி கமல் ஸாரி, உனக்கு நான் சொல்லித்தர வேண்டாம்.'' இதோ போலீஸ் இன்ஸ்பெக்டர் அலெக்ஸ் எதிரில் கமல். அலெக்ஸ் கமலுக்கு நல்ல நண்பன் தான்.

''எப்படியிருக்கான் முஸ்தபா.''

''வழக்கம் போல மௌனம்.''

''ஜாக்ரதை அலெக்ஸ் இவனை நல்லபடியா குணப்படுத்தணும் முதல்ல.''

''முடியுமா.''

''முடியும். அதுக்கப்புறம் கோர்ட்லப்ரொட்யுஸ் பண்ணினா, நிச்சயமா இவன் யாருன்னு கண்டு பிடிச்சிரலாம்.''

''நிஜம் தான்!''

''அதுவரைக்கும் அலெக்ஸ், இவனைப் பத்திரமா நீதான் காப்பாற்றணும்!''

''ஏன் லாக்கப்புலதானே இருக்கான்.''

''நான் எப்படி உனக்கு ''

சிரித்தான் அலெக்ஸ். ''அரசியல்வாதிகள் யாரும் குறுக்கிடலாம்னு சொல்ல வர்றே!''

''நிச்சயமா...''

''இந்த அலெக்ஸ் அத்தனை சுலபமா விலை போக மாட்டான்னு உனக்குத் தெரியும் கமல்!''

''அந்த நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு.''

''அதனாலதானே ஒரு அடிதடி மாதிரி செட்டப் பண்ணி இவனை இங்கே கொண்டு வந்தே! நாளைக்குக் கப்பல் கிளம்புது. நீ சாதிச்சிட்டே!''



''அலெக்ஸ்?''

''எனக்கு உன்னைத் தெரியாதா கமல்?''

கமல் எழுந்து விட்டான்

''தேங்க் யூ அலெக்ஸ் நீ என்னைத் தெளிவாப் புரிஞ்சிகிட்ட ஒரு காவல் அதிகாரி. இனிமே கவலையை நான் விட்ரலாம். நான் வரட்டுமா?''

''செய் கமல், இவனை நான் பார்த்துக்கறேன்!''

கமல் போனதும், அலெக்ஸ் லாக்கப் வந்தான்.

''முஸ்தபா!''

மிரண்டு திரும்பினான் முஸ்தபா.

''எதுக்குப் பயப்படறே! நானும் கமல் போல உனக்கு நல்ல நண்பன் தான். உன்னை நான் பாதுகாக்கறேன். சாப்பாடு அனுப்பட்டுமா?''

தலையசைத்தான் முஸ்தபா.

தொலைபேசி அழைத்தது. அலெக்ஸ் போய் எடுத்தான்.

''நான் போலீஸ் கமிஷனர் பேசறேன்.''

''யெஸ் ஸார்.''

''நீங்க உடனடியா வரணும். நான் உங்களுக்காகக் காத்துட்டு இருக்கேன். விஷயம் முக்கியம்.''

''சரி சார்.''

தன் சொந்தப் பூட்டு ஒன்றை ஜெயில் பூட்டுக்கு மேல் பூட்டி விட்டு வெளியே நடந்தான் அலெக்ஸ்.

## 11

அந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி அதிகாரி ரகோத்தமன் தன் வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு அப்போதுதான் திரும்பியிருந்தார். அலுவலகத்தில் நுழைந்தார்.

அவசரக் கடிதங்களைப் பார்வையிட்டு, அழைப்புகளை முறைப்படுத்தி விட்டு சாய்ந்து உட்கார்ந்தார்.

அன்றைய நாளிதழ் ஆங்கிலத்தில் தன்னை அறிவித்துக் கொண்டிருக்க' கையில் எடுத்தார்.

புரட்டத் தொடங்கினார்.

நாலாம் பக்கம் அந்தப் புகைப்படம் வெளியாகியிருந்தது. மனநிலை பாதிக்கப்பட்ட முஸ்தபா கப்பலில் கேப்டனைத் தாக்க, கைது செய்யப் பட்டார். ஊர் பேர் தெரியாத இந்த மனிதரது பிரச்சனை பெரிதாகிறது.

மேலும் அந்தப் பழைய விவரங்கள், கொலை முயற்சி எல்லாம் போடப்பட்டிருந்தது.

ரகோத்தமன் அவசரமாக எழுந்து போய் குறிப்பிட்ட அந்த ஃபைலை வெளியே எடுத்தார். பிரித்தார் மளமளவென காகிதங்களைப் புரட்டிக் கொண்டே வந்தார். அவர் முகம் இறுகியது.

தொலைபேசி எடுத்து எண்களைச் சுழற்றினார். முஸ்தபாவை கைது செய்தது இன்ஸ்பெக்டர் அலெக்ஸ் என்பது குறிப்பிடப்பட்டிருந்தது. அது அவருக்கு சுலபமாக, அலெக்ஸ் வேலை பார்க்கும நிலையம் எது என்பது தெரிந்து விட்டது. பத்தே நிமிடங்களில் எழுந்தார்.



'உடனே முஸ்தபாவை நான் பார்த்தாக வேண்டும்!'

'மனநிலை பாதிக்கப்பட்ட முஸ்தபா!"

அந்த வரிகள் அவரைக் குடைந்தது.

'அப்படியானால் பழைய சம்பவங்கள் எதுவுமே அவனுக்கு நினைவு இருக்காதா?'

'இல்லாவிட்டால், அவனை நான் சந்தித்து என்ன லாபம்?'

'ஒரே சாட்சி - உயிருடன் இருக்கும் சாட்சி - அவன் தானே? அவனைத் தவிர உண்மையை யாரால் சொல்ல முடியும்?'

'அதனால்தான் உண்மை பேசப் போகிற நிலை வரக்கூடாது என்று, கொலை முயற்சியா?'

'யார் முயற்சி இது?'

'இங்கு நின்று யோசிப்பதில் லாபமில்லை. உடனே நான் முஸ்தபாவைச் சந்திக்க வேண்டும் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் அவசியமானால் விவரம் சொல்லலாம்.'

வேகமாகப் புறப்பட்டார் ரகோத்தமன்.

அதே நேரம் கமிஷனரின் எதிரே இருந்தான் அலெக்ஸ் சல்யூட் வைத்துவிட்டு உட்கார்ந்தான்.

''உங்க கஸ்டடிலதான் இருக்கானா முஸ்தபா?''

''ஆமாம் சார்!''

''அவனை வேற ஜெயிலுக்கு மாத்திடுங்க.''

''ஏன் சார்?''

ஏற்கனவே ஒரு கொலை முயற்சி நடந்திருக்கு கப்பல்ல, அது இனி மேலும் தொடராதுன்னு என்ன நிச்சயம்''

''என் லாக்கப்ல அவன் பத்திரமா இருப்பான் சார். அதனால என்னை மீறி எதுவும் நடந்துராது.''

''ஓவர் கான்பிடன்ஸ் வேண்டாம் அலெக்ஸ்!''

''இல்லை சார்.''

''மாத்திடுங்க முஸ்தபாவை.''

''ஸாரி ஸார்! மாத்தறதா இல்லை நான்!''

கமிஷனர் சட்டென எழுந்து விட்டார்.

''நான் உங்களுக்கு உயர் அதிகாரி அலெக்ஸ். உத்தரவிட உரிமை உண்டு எனக்கு!''

''அதை நான் மறுக்கலை சார்.''

''பின்ன?''

''உத்தரவு உங்க சுய உத்தரவா இருந்தா, நான் மதிச்சு நிச்சயமா செயல்படுவேன்.''

''அலெக்ஸ்?''

''மேல் மட்டத்துல உங்க குடுமியை யாரோ பிடிச்சிக்கிட்டாங்க. அதனால அவங்க விருப்பத்துக்குத் தலையாட்ட வேண்டிய நிர்பந்தம் உங்களுக்கு.''

''அதிகம் பேசறீங்க உங்களை எப்படி வேணும்னாலும் கையாள என்னால முடியும்.''

''நான் இந்தப் பதவில இருக்கற வரைக்கும்!''

''அலெக்ஸ்!''

''ஸார் இப்ப காக்கிச் சட்டையை மறந்துட்டு ஒரு நண்பனா உங்ககிட்ட நான் பேசறேன். இதை யாசகமா நினைச்சாலும் தப்பில்லை!''

''என்னா?''

''இந்த அப்பாவியால யாரோ பாதிக்கப் பட்டது தான் நிஜம் அதனால விளையாட்டு தொடங்கியாச்சு. வேண்டாம் சார். ஜனங்களுக்கு காவல், சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்தற கடமை ரெண்டும் நமக்கு உண்டு.''

''எனக்கு சொல்லித் தர்றீங்களா?''

''இல்லை சார், ஞாபகப்படுத்தறேன். அரசியல் வாதிகளோட கைப் பொம்மையா ஆடமாட்டோம்னு போலீஸ் தன் பதவிப் பிரமாண



சமயத்துல ஒரு உறுதிமொழி எடுத்துகிட்டா, இந்த மண்ல நிச்சயம் குற்றங்கள் குறையும். அரசாங்கம்னா என்னா சார்? மக்களால தேர்ந்தெடுக்கப்படற பிரதிநிதிகளைக் கொண்டது. அரசாங்க கஜானால ஏது சார் பணம்? மக்களோட வரிப் பணம். இது மக்கள் ஆட்சி. நமக்குச் சம்பளம் தரக்கூடிய எஜமானர்கள் மக்கள் அவங்ககிட்ட சம்பளம் வாங்கிட்டு அரசியல்வாதிகளுக்காக நாம உழைச்சா, அது நியாயமா சார்?''

கமிஷனரின் காது மடல் சிவந்தது.

எழுந்து விட்டார்.

''வெல் நான் சொல்றதைச் சொல்லிட்டேன் அலெக்ஸ். அப்படியும் நீங்க கட்டுப்படலைனா, விளைவுகளைச் சந்திக்கத் தயார இருங்க சரிதானா?'' அலெக்ஸ் எழுந்தான்.

''சாரி சார்! அந்த உடையைப் போட்ட நிமிடமே, கறைபடியாம உழைக்கறதா, சபதம் பண்ணியிருக்கேன். நிச்சயம் அதைச் சாதிப்பேன்.''

அலெக்ஸ் தன் பைக்கில் ஏறி வேகம் பிடிக்க,

அலறும் தொலைபேசியை ஆவேசத்துடன் போய் எடுத்தார் கமிஷனர்.

''ம், நான்தான் சொல்லுங்க சார்!''

எதிர்முனையில் எம். எல். ஏ. சிவதாசன்.

''அந்த முஸ்தபாவை உன் கஸ்டடில கொண்டு வந்துடு.''

''முடியாது சார்.''

''என்ன சொல்றீங்க கமிஷனர்?''

''அந்த அலெக்ஸ் கண்டிப்பான போலீஸ். அவனுக்குத் துணை அட்வகேட் கமல். நீங்க

நினைக்கற மாதிரி இவங்க ரெண்டு பேரையும் அத்தனைச் சுலபமாக கடந்து முஸ்தபாவை நெருங்க முடியாது!''

''வெக்கமாயில்லை உங்களுக்கு. நீங்க உயர் போலீஸ் அதிகாரி!''

''இருக்கலாம் சார். நாளைக்கு கோர்ட்டுக்கு வழக்கு வந்துட்டா, சுப்ரீம் கோர்ட் தீர்மானங்களை வச்சிட்டுப் பேசுவான். என்னை மன்னிச்சிடுங்க சார். அலெக்ஸ் கேட்ட கேள்விக்கு இன்னொரு அதிகாரியா இருந்தா செத்திருப்பான்!''

''கமிஷனர்! நீங்க இங்கே வர்றீங்க இது அமைச்சர் வெள்ளைச்சாமி உத்தரவு!''

''சரி சார்!''

போனை வைத்துவிட்ட கமிஷனர் முகம், சுட்ட கத்திரிக்காய் போல சுருங்கிப் போயிருந்தது.

போலீஸ் உத்யோகத்தைவிட சிக்கலான ஒன்று இந்த பூமியில் இல்லையென்று அப்போதுதான் தோன்றியது.

புறப்பட்டார் அமைச்சருக்கு வால் பிடிக்க,

## 12

அலெக்ஸ் ஸ்டேஷனில் இருந்தான்.

கான்ஸ்டபிள் வந்து சல்யூட் அடித்தான்.

''என்னா?''

''உங்களைப் பார்க்க ரெண்டு பேர் வந்திருக்காங்க!''

''ம்! அனுப்பு.''

அந்த நிமிடத்தின் முடிவில் இரண்டு இளைஞர்கள் வெளிப்பட்டார்கள்.



தோற்றத்தில் முஸ்லீம் இளைஞர்கள் என்று தெரிந்தது.

''நீங்க யாரு?''

''என் பேரு பஷீர், இவன் கறீம். நாங்க உட்காரலாமா?''

''ம்...''

இருவரும் எதிரே அமர்ந்தார்கள்.

''சொல்லுங்க.''

''நாங்க வேலை விஷயமா துபாய் போயிருந்தோம். நேற்றுத்தான் வந்தோம். இந்தப் பேப்பரைப் பார்த்தோம்.''

''ம்...!''

''முஸ்தபா உங்க பராமரிப்புல இருக்கான்னு தெரிஞ்சு ரொம் சந்தோஷம் அவனோட உறவுக்காரர்கள் நாங்க, முஸ்தபாவை அழைச்சிட்டுப் போகலாமா?''

''பத்திரிகைல ஒரு விளம்பரம் மட்டும் நீங்க தரலைனா முஸ்தபாவை நாங்க இழக்க நேர்ந்திருக்கும். நன்றி உங்களுக்கு.''

நிமிர்ந்து உட்கார்ந்தான் அலெக்ஸ்

''முஸ்தபா உங்க உறவுனு ஆதாரம் ஏதாவது இருக்கா உங்ககிட்ட.''

''அவனைப் பிரிஞ்சு வருஷங்கள் ஆச்சு''

''பல வருஷங்கள்னா?''

''அது இருக்கும் பத்துப் பனிரெண்டு வருஷங்கள்.''

''அவனை நீங்க பிரியும்போது இதே மாதிரி தாடி, தலையோட இருந்தானா முஸ்தபா?''

''ஏன் சார் கிண்டல்?''

''கிண்டல் இல்லை சார். முஸ்தபாவை உங்க உறவுனு சொல்ல முறையான ஆதாரம் காட்டுங்க. நானே அனுப்பி வைக்கறேன்.''

''இப்படி சொன்னா என்னா நியாயம்?''

''நீங்க போகலாம்.''

இருவரும் எழுந்து நின்றார்கள். நாலடி நடக்க ஒருவன் மற்றவனைப் பார்த்துப் படக்கென கண்ணடித்தான். திரும்பினார்கள்.

''முஸ்தபாவுக்கு எங்களை பார்த்ததும் அடையாளம் தெரிஞ்சா?''

''ஸாரி... மனநிலை சரியில்லை முஸ்தபாவுக்கு?'

''காரணம் தன் மனிதர்களைப் பிரிந்து பல வருஷங்கள் இருந்ததால, எங்களைப் பார்த்த உணர்ச்சிகரமான நொடிகள்ல முஸ்தபா பழைய நிலைக்குத் திரும்பினா!''

அலெக்ஸ் யோசித்தான்.

''ப்ளீஸ் இன்ஸ்பெக்டர். அவன் இருக்கல இடத்துக்கு எங்களைக் கூட்டிட்டுப் போங்க.''

''யெஸ். அதையும் பார்த்துரலாம்.''

அலெக்ஸ் முன்னால நடக்க, பின்னால் வந்த இருவரும் சைகையால் பேசிக் கொண்டார்கள்.

அந்த லாக்கப்பை நெருங்கியதும்,

''முஸ்தபா!''

அவன் சடாரெனத் திரும்பினான்.

''உன் உறவுக்காரங்க ரெண்டு பேர் வந்திருக்காங்க. ரெண்டு பேரும் உங்க முஸ்தபாவைப் பாருங்க சார்.''

அவர்கள் நெருங்கிவிட ஒருவன் ''முஸ்தபா! நான் பஷீர்! என்னைத் தெரியலையா?''



''உன்கூட ஒண்ணா சாப்பிட்டு வளர்ந்த கரீம்டா முஸ்தபா.''

அவன் இவர்களைப் பார்த்து திருதிருவென விழிக்க, வந்திருந்து பஷீர் இடுப்பில் இருந்த ரிவால்வரை சடாரென உருவி விட்டான்.

அடுத்த நொடியே அவன் கையில் ஒரு மின்னல் தெரிந்தது துப்பாக்கி உயரே எகிறி கீழே வந்த போது அலெக்ஸின் கையில் இருந்தது.

''நில்லுங்கடா ரெண்டு பேரும்! அசைஞ்சா பிணமாயிடுவீங்க!'' அவர்கள் பீதியுடன் நிற்க.

''நீங்க இப்பப் பார்த்தது முஸ்தபா இல்லை. அவன் வேற லாக்கப்ல இருக்கான். நீங்க மோசடிப் பேர் வழிகன்னு எனக்குத் தெரியும். அவனைப் பார்க்க வர்றதா சொல்லிட்டு உள்ளே வந்ததும் அவனைச் சுட்ரலாம்னு திட்டம். நான் போலீஸ்காரன்டா யாருடா உங்களை அனுப்பினது!''

அவர்கள் மூச்சைப் பிடித்துக் கொண்டு நிற்க,

டெலிபோன் ஒலித்தது.

ஒரு நொடிக்கும் குறைவான நேரம்தான். ஆனால் அந்த மணித்துளியில் அலெக்ஸின் கவனம் மெலிதாகச் சிதற, பஷீர் குபீரெனப் பாய்ந்து விட்டான் வெளியே. அலெக்ஸ் இன்னும் பதற, கையில் கிடைத்த பூ ஜாடியை எடுத்து கரீம் வீச, அலெக்ஸ் நிமிர்வதற்குள் இருவரும் பைக்கில். தாவி விட்டார்கள்.

எதிரே வந்த கார் மேல ஏறத்தாழ உரசிக் கொண்டு அவர்கள் திரும்ப, அலெக்ஸ் செயலிழந்து நின்றான்.

காரை நிறுத்திவிட்டு ரகோத்தமன் இறங்கினார்.

''இன்ஸ்பெக்டர் அலெக்ஸ்!''

''நான்தான்'' அவர்களை தவறவிட்ட எரிச்சலில் தன் மேலேயே கோபப்பட்ட அலெக்ஸ், சற்று சிடுசிடுப்பாக, ''யார் சார் நீங்க!''

''என் பேரு ரகோத்தமன், பெட்ரோ இன்ஷூரன்ஸ் கம்பெனி அதிகாரி நான்''

தொலைபேசி தொடர்ந்து ஒலிக்க, அலெக்ஸ் போய் எடுத்தான்.

''நான்தான் கமல்''

''சொல்லு கமல்''

''உடனடியா நீ வரணும். உன்கிட்ட நான் விவாதிக்கணும். ப்ளீஸ்''

''நீ எங்கே இருப்பே'' அலெக்ஸ் இடம் கேட்க, கமல் பதில் சொன்னான்.

''வந்துட்டே இருக்கேன்.''

தொப்பியை மாட்டிக் கொண்டான் அலெக்ஸ், பைக் சாவியை எடுத்துக் கொள்ள,

''இன்ஸ்பெக்டர், உங்ககிட்ட முக்கியமான ஒரு விஷயமா பேசணும்.''

''ஸாரி எனக்கிப்ப அவசர வேலை இருக்கு, நாளைக்கு வாங்களேன். காலைல இருப்பேன்''

''இல்லை, இப்பவே பேசணும்.''

அலெக்ஸ் அதைப் பொருட்படுத்தாமல் பைக்கில் ஏறி உதைத்தான்.

சரேலென பைக் புழுதிகிளப்பிப் புள்ளியானது.

கான்ஸ்டபிள் எதிரே வந்தான்.

''என்ன சார் வேணும் உங்களுக்கு?''

''அந்த முஸ்தபா இங்கேதான் இருக்கானா''

''ஆமாம்!''



''அவனை நான் பார்க்கலாமா?''

''இல்லை சார், இன்ஸ்பெக்டர் தன் பொறுப்புல வச்சிருக்கார். நான் அனுமதிக்கக் கூடாது.''

''ஒரு முக்கியமான விவரத்தைச் சொல்லத்தான் நான் இங்கு வந்தேன்.''

''நாளைக்கு வாங்க சார். கண்டிப்பா அவர் இருப்பார். உங்க விலாசம் குடுங்களேன். இன்ஸ்பெக்டர் வந்து பார்க்கட்டும்.''

''அதுவும் சரிதான்'' என்று தன் வீட்டு விலாசம் மட்டுமே இருந்த அட்டையை அவனிடம் தந்தார்.

''ரொம்ப முக்கியம்னு சொல்லுங்க.''

''சரி சார்''

ரகோத்தமன் காரில் ஏறிய நேரம், கமல் வீட்டின் வாசலில் பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே வந்தான் அலெக்ஸ்.

''வா தம்பி!''

''கமல் உள்ளே இருக்கானா?''

''இல்லைப்பா! இப்பத்தான் வெளியே போனான். அவசரமா ஒரு கேஸ் வந்திருக்கு. நீ காத்திருப்பியா?''

''இருககேன்மா'' அலெக்ஸ் உட்கார்ந்தான்.

அரைமணி நேரம் பார்த்தும் கமல் வராமல் போக, அலெக்ஸ் எழுந்து விட்டான்.

''நான் நீதிமன்றத்துல அவனைச் சந்திக்கறேன்மா'' அலெக்ஸ் புறப்பட்ட நேரம்—

அங்கே கான்ஸ்டபிள் தொலைபேசியை அணுகி சுற்றிலும் ஒருமுறை பார்த்துவிட்டு எண்களை சுழற்றினான். எதிர்முனை உயிர்த்தது.

"என்ன நம்ப பசங்க வந்தாங்களா?"

"ம்! அவங்க யார்னு தெரிஞ்சு போச்சு இன்ஸ்பெக்டருக்கு"

"என்னய்யா உளர்ற?"

"அனுப்பினது நீங்கனு தெரியலை. ஆனா மோசடிப் பேர்வழிகள்னு தெரிஞ்சு போச்சு."

"ப்பாடா! அப்புறம்?"

"தப்பிச்சிட்டாங்க ரெண்டு பேரும். ஆனா ஒரு புதுத் தலைவலி வந்திருக்கு"

"என்ன?"

"ரகோத்தமன்னு ஒரு ஆள் முஸ்தபாவை தேடி வந்தார். இன்ஷியூரன்ஸ் கம்பெனி அதிகாரியாம்."

"மெட்ரோவா?"

"ஆமாம், இன்ஸ்பெக்டர் அவரை சந்திக்காம புறப்பட்டுப் போயிட்டார்."

"நல்ல காலம்."

"அவரோட விலாசத்தை வாங்கி வச்சிக்கேன்."

"போன்லயே படி"

கான்ஸ்டபிள் குரலைத் தாழ்த்திக்கொண்டு விலாசத்தைப் படிக்க, எதிர்முனை குறித்துக் கொண்டது.

"நல்லதுய்யா! வச்சுடு"

"முதலாளி! உபயோகமான தகவல்னா, இந்த ஏழை போலீஸைக் கொஞ்சம் செமத்தியா கவனிக்கணும்."

"ராத்திரி எட்டரைக்கு 'தனியான' இடத்துல என்னை வந்து பாரு, கவனிக்கறேன்."

"சரிங்க" வைத்துவிட்டான்.

'இது மாதிரி தகவல் மையமா' இருந்தாத்தான் நாலு காசு சம்பாதிக்க முடியும். அரசாங்கமும், அரசியல்வாதிகளும் வேறவேறயா இருந்தாத்தான் என்னை மாதிரி ஆசாமிகளுக்குப் பிழைப்பு."



சற்று நேரத்தில் அலெக்ஸும் வந்துவிட்டான். உயர்நீதிமன்றத்திலும் கமலேஷைக் காணவில்லை.

கமல் வீட்டில் டெலிபோன் ஒலித்தது.

அஜந்தா எடுத்தாள். "யார் பேசறது?"

"நீங்க யார்மா பேசறது?"

"நான் அட்வகேட் கமலேஷின் தங்கை. நீங்க யார்னு சொல்லலையே!"

"என் பேரு வொய். ஆங்கில வொய்"

"இப்படி ஒரு பேரா" ஆச்சரியப்பட்டாள்.

"நான் சொல்றதைத் தெளிவாகக் கேட்டுக்க. சிறைல இருக்கற அந்த முஸ்தபாவைத் தீர்த்துக் கட்ட எல்லா வேலைகளும் நடக்குது. போலீஸ் கமிஷனரே இதுக்கு உடந்தை. ஏதாவது செஞ்சு கமல்கிட்டே சொல்லி, அங்கிருந்து முஸ்தபாவை அகற்றணும்."

"நீங்க?"

"நான் வொய்! என்னைத் தேடி காலநேரத்தை வீணாக்க வேண்டாம். செயல்படச் சொல்லு உங்க அண்ணனை.

எதிர்முனை இறந்தது. அஜந்தா லேசான வியர்வையுடன் ரிசீவரை வைத்தாள்.

"என்னடீ... யாரது போன்ல? மூஞ்சி ஒரு மாதிரி இருக்கு"

"ஒண்ணுமில்லைமா, என் தோழியோட அப்பா இறந்துட்டாங்கனு செய்தி."

''நீ போகப் போறியா'' என்றாள்.

''வழி தெரியாது. அனுதாபத்தைக் கடிதம் மூலமா தெரிவிக்கக்கறேன்.''

அம்மா உள்ளே போய்விட்டாள்

'அண்ணனிடம் இந்தக் தகவலைச் சொன்னால் எடுபடுமா? பேர் சொல்லாத கடிதம், அழைப்பு இதற்கெல்லாம் அண்ணனிடம் என்றுமே மரியாதை இருந்ததில்லை.'

'இதையும் அந்தப் பட்டியலில் சேர்ப்பாரா? கேட்டுவிட வேண்டும்.'

'முஸ்தபா காக்க கமல் போராடுவதைப் பார்த்து முகம் தெரியாத அந்த முஸ்தபா மேல் ஒரு காதலே உண்டாகி விட்டது அஜந்தாவுக்கு. அவன் உயிருக்கு ஆபத்து என்றதும் மனம் சஞ்சலப் படுகிறது. அண்ணன் விடமாட்டார். கட்டாயம் காப்பாற்றி விடுவார்.'

## 13

மறுநாள் பதில் சொல்கிறேன் என்ற அப்பா மேலும் இரண்டு நாட்களாகியும் அதுபற்றிப் பேச வில்லை.

அனுவுக்கு எரிச்சலாக இருந்தது.

கமலும் அலைந்து கொண்டிருந்ததால், அவனையும் சந்திப்பது சுலபமாக இல்லை.

'இன்று அப்பாவைப் பிடித்துவிட வேண்டும். காத்திருந்தாள் அனு.

நாலு மணிக்கு அப்பாவின் காரில் வேறொரு பெரிய மனிதரும் வந்து இறங்கினார்.



''வாம்மா அனு!''

அனு அருகில் வந்தாள்.

''இவர் மிஸ்டர் மந்திரமூர்த்தி. நமக்குச் சமமான இன்னொரு செல்வந்தர் இந்த ஊர்ல. இவர் பிள்ளை இப்ப ஸ்டேட்ஸ்ல இருக்கான். இந்த மாசக் கடைசியில் வர்றான்.''

அனுவுக்குப் புருவம் சுருங்கியது.

''அவன் ஜாதகம் உனக்குப் பிரமாதமா பொருந்தது. நீ தொடர்ந்து லண்டன்ல படிக்கறதைப் பற்றி மூர்த்திக்கு ஆட்சேபனை இல்லை. அவனும் ஸ்டேட்ஸ்லேருந்து வர ஒரு வருஷம் ஆகும். நிச்சயம் பண்ணி வச்சிரலாம். கல்யாணம் ஒரு வருஷம் கழிச்சு.''

''எதுக்கு மாருதி? கல்யாணத்தை முடிச்சிட்டே போயிரட்டுமே! வாழ்க்கையை அப்புறமா தொடங் கட்டும்.''

அனுவால் தாள முடியவில்லை.

''ஸ்டாப் இட் டாடி.''

''அனு...''

ஸாரி அங்கிள், நான் இனிமேலும் பேசலைனா என் வாழ்க்கை நாசமாயிடும். நான் அட்வகேட் கமலேஷை விரும்புறேன் அவரும் என்னை நேசிக்கறார். அவரைத் தவிர யாரும் என் வாழ்க்கைத் துணைவராக முடியாது. என்னை மன்னிச்சிருங்க.''

மந்திரமூர்த்தி எழுந்துவிட்டார்.

''ஸாரிமா? நான் வர்றேன் மாருதி!''

அவர் புறப்பட்டுப் போனதும் மாருதி ஆவேச மாக உள்ளே நுழைந்தார்.

''என்ன நினைப்பு உன் மனசுல?''

''கமலேஷ் நினைப்பு.''

"மந்திரமூர்த்தி முன்னால என்னை நீ அவமானப்படுத்திட்டே..."

"என் விருப்பம் தெரிஞ்சும், இந்த வரனை நீங்க பேசறது அநாகரீகம் டாடி."

"அஹா..." அவர் கூச்சலிட்டார்.

"டாடி! அயல் நாட்டுக்குப் போய் ஒரு பெண் தனியா படிக்கற அளவுக்கு சுதந்திரம் தந்த நீங்க, என் விருப்பத்துக்குச் சம்பந்தப்பட்ட ஒருத்தரை நிராகரிக்கறது முறையில்லை. எனக்கு உங்க போக்கு புரியலை!"

"நீ வாழணும்னு நினைக்கிறேன் நான்."

"நான் மட்டும் எதுக்காக உங்ககிட்ட இத்தனை தர்க்கம் பண்றேன்?"

"இல்லைமா! கமல் போக்கு சரியில்லை, அவனோட சமீபத்திய செய்கைகள் எனக்குப் பிடிக்கலை."

"காரணம்?"

"அரசியல் பகைக்கு ரொம்ப வேகமாக அவன் ஆளாயிட்டு வர்றான். இது ஒருநாள் அவன் உயிருக்கே ஆபத்தா முடியக்கூடும். உன் வாழ்க்கை என்னம்மா ஆகும்?"

"அப்பா!"

"உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன் விட்டுடு! அந்த எம்.எல்.ஏ. சிவதாசன், மந்திரி வெள்ளைச்சாமி ரெண்டு பேரும் கொலை பாதகத்துக்கும் அஞ்சாதவங்க, அடிப்பட்டவன் நான். இப்ப திமிர்ந்துட்டேன், என்னை நெருங்க முடியலை!"

"அதனால?"

"உனக்கு கமலேஷ்தான் வேணும்னா, இந்த விவகாரத்துலேருந்து கமலை வெளியே வரச் சொல்லு. அரசியல் ரீதியான வழக்குகள்ள ஆஜராகறதில்லைனு சத்தியம் வாங்கு நானே நடத்தி வைக்கறேன் கல்யாணத்தை!"



"ப்பூ! இவ்வளோதானா டாடி? இதை முன்னமே சொல்லியிருக்கக் கூடாதா?"

"நீ என்னை பேசவிட்டாத்தானே."

"நான் சொன்னா, கமல் கேட்பார்."

டெலிபோன் அழைத்தது, போய் எடுத்தாள்.

"ஆயுசு நூறு கமல் உங்களுக்கு!"

"ஏன்?"

"அப்பாகிட்டே உங்களைப் பத்திப் பேசிட்டு இருக்கேன்!"

"ஒப்புக்கிட்டாரா?"

"ஒரே ஒரு நிபந்தனையின் பேரில்!"

"என்ன அது?"

"நேர்ல சொல்றேன், எங்கே சந்திக்கலாம்!"

"நம்ம வழக்கமான இடத்துல."

"இப்பவே புறப்பட்டு வர்றேன், வந்துடுங்க."

ரிசீவரை வைத்துவிட்டு, "டாடி! நிபந்தனைக்கு அவர் ஒப்புக்கிட்டா, உங்க சம்மதம் உறுதிதானே?"

"இந்த மாதிரி சொன்னா வார்த்தை ஒரு நாளும் மாறாது."

"தேங்க் யு டாடி!" அவள் உடனே புறப்பட்டாள். குறித்த இடத்திற்கு முன்னதாகவே வந்து கமலேஷ் காத்திருந்தான்.

"சரி! உங்கப்பா நிபந்தனை என்ன? சீக்கிரம் சொல்லு."

"சொன்னா கோபப்படக் கூடாது."

"சொல்லு."

"தன் மாப்பிள்ளையா வர்றவருக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது. ஜெஞ்சியா இருக்கணும் அவர்னு ஒரு மாமனார் ஆசைப்படக் கூடாதா?"

"பீடிகை எதுக்கு? விஷயத்துக்கு வா!"

"எங்கப்பா அரசியல் வாதிகளால ரொம்ப அடி வாங்கினவர். அதனால அவங்க மேல வெறுப்பு."

"குட்."

"உங்களுக்கு அரசியல் வேண்டாம்னு சொல்றார்."

"நல்லது தானே? விட்டுட்டாப் போச்சு."

"நிஜமாத்தான் சொல்றீங்களா கமல்?" குரலில் பரவசம் காட்டிக் கேட்டாள் அனு.

"இதுல பொய் என்ன இருக்கு? நல்லதை யார் சொன்னாலும் கேக்கறது தப்பில்லையே!"

"அப்படியானா அப்பாவுக்கு ஏற்ற மாப்பிள்ளைதான் நீங்க. முதல் வேலையா அந்த முஸ்தபாவைத் தொலைச்சு தலை முழுகுங்க."

"என்ன சொல்றே நீ!"

"முஸ்தபா காரணமா அரசியல் தொல்லைகள் அதிகமாகும் உங்களுக்கு."

"ஓ... அதுவா அதைப்பற்றி நான் கவலைப் படல. அரசியல்வாதி நட்பு எனக்கு வேண்டாம்னா ஓக்கே! ஒரு நல்லவனைக் காக்க சில அரசியல் எதிரிகள் உருவாகணும்னு இருந்தா, அதுல எனக்குச் சந்தோஷம்தான்!"

"அய்யோ, என்ன கமல் நீங்க. அப்பா பயப்படறதே முஸ்தபா சங்கதியில்தான்."

"அவர் தொழிலதிபர். பயப்படணும். எனக்கென்ன பயம்?"

"தன் மகள் மாங்கல்யத்தோட வாழணும்னு ஒவ்வொரு தகப்பனும் நினைச்சா அதுல என்னப்பா தப்பு."

"தப்புன்னு நான் சொல்லலையே!"

"அப்படீன்னா, நான் வேணும்னா, முஸ்தபா விஷயத்தை நீங்க கைவிடணும்."



"உளராதே அனு. கஷ்டப்பட்டு இந்திய மண்ல அவனை இறக்கியாச்சு. அவன் யார்னு தெரிஞ்சு, உரியவங்ககிட்ட ஒப்படைச்சிட்டா, எடுத்துக்கிட்ட பணில ஒரு முழுமை இருக்கும்."

சடாரென எழுந்தாள் அனு "அப்படீன்னா, என்னை நீங்க இழக்க வேண்டி வரும்."

"ஏன்? உன்னை நான் அடைய முஸ்தபா எந்த விதத்துல தடை?"

"எங்க அப்பா பயப்படறாரு"

"உங்கப்பா பயம் அனாவசியம்னு நான் சொன்னதா சொல்லு"

"நானா.. முஸ்தபாவா? முடிவு பண்ணிங்க."

"நில்லும்மா" திரும்பினாள்.

"ரெண்டு பேரும் வேணும்னு விரும்பறவன் நான்!"

"கிடைக்கலைனா" என்றாள் அனு.

"ஸாரி அனு. முஸ்தபாவை நான் விடறதா இல்லை."

அனு நிலைகுலைந்து நின்றாள்.

## 14

கமல் வீடு திரும்பியதும் அஜந்தா ஓடி வந்தாள்.

"அண்ணா! உனக்கு இன்ஸ்பெக்டர் அலெக்ஸ் கிட்டேயிருந்து சேதி."

"என்ன சேதி!"

"சகோத்தமன்னு ஒருத்தரை அவர் வீட்ல வச்சு கொலை செய்யப்பட்டிருக்காராம்."

''எ...என்னது? ரகோத்தமனா''

''ஆமாம்!''

கமல் வந்த வேகத்தில் பைக்கை உதைத்து, அலெக்ஸ் இருந்த காவல் நிலையத்துக்கு வந்து விட்டான்.

''சார் ரகோத்தமன் கொலை தொடர்பா''

''தெரியும். எந்த இடம் அது?''

கான்ஸ்டபிள் சொல்ல, மனதில் வாங்கிக் கொண்டு, கமல் வண்டியைத் திருப்பினான்.

நேற்று மாலைதான் காவல் நிலையத்தில் நடந்த எல்லா சம்பவங்களையும் அலெக்ஸ் சொல்லியிருந்தான். அந்த இரண்டுபேரின் கொலை முயற்சி, ரகோத்தமன் வரவு இப்படி எல்லாம். மறுநாள் காலை ரகோத்தமன் இருவரும் சந்திப்ப தாக ஏற்பாடு. அதற்குள் கொலையா?

ரகோத்தமன் வீட்டை சுற்றிப் போடப்பட்டி ருந்தது போலீஸ் டாரா.

கமல் ஊடுருவி உள்ளே வந்தான். அலெக்ஸ் நின்று கொண்டிருந்தான்.

''வா கமல்! அவரை யாரோ சுட்டுக் கொன்னி ருக்காங்க.''

''எ...எப்ப?''

''ஜஸ்ட், ஒரு மணி முன்னாலதான்''

கை ரேகை நிபுணர்கள், நாய் என்று சகல கேந்திரங்களும் தங்கள் செயல்பாட்டில் இருக்க, அலெக்ஸ் தனியாக வந்தான்.

''நான் தப்பு பண்ணிட்டேன்.''

''என்ன தப்பு பண்ணே?''

''என்னைத் தேடி வந்தப்ப, உட்கார வச்சுப் பேசியிருந்தா, பல உண்மைகள் தெரிஞ்சிருக்கும். நான் விட்டுட்டேன். ரகோத்தமன் என்னைத் தேடி வந்ததைக் கொலைகாரன் மோப்பம் புடிச் சிட்டான். முடிஞ்சு போச்சு கதை.''



''என்ன தகவல் இருக்க முடியும் இவர்கிட்ட?''

''தெரியல! இன்ஷுரன்ஸ் கம்பெனி அதிகாரி.''

''ஆயுள் காப்பீடா''

''இல்லை, இது ஜெனரல் இன்ஷுரன்ஸ் பெட்ரோ கிளையோட பேரு''

''தனிமனித ஆயுள் காப்பீடன்னா, நம்ம முஸ்தபாவுக்கு சம்பந்தம் இருக்கும். இதுல எப்படி அடுத்த அதிகாரியைத் தேடி புடிச்சு அவங்க நிர்வாகம் தொடர்பா விசாரிக்கணும்.''

ஏறத்தாழ எல்லாம் முடிய, மார்ச்சுவரி வேன் வந்துவிட்டது. ரகோத்தமனின் உடல் ஏற்றப் பட்டது. உறவுப் பெண்கள் ஒப்பாரி வைக்க—

''வீட்ல அந்த நேரம் யாரும் இல்லையா?''

''இல்லையே! மகன், மகளுக்குத் தகவல் தந்தி ருக்கோம். அவங்க கொச்சில இருக்காங்க''

''இவர் மட்டும் இங்கே ஏன்?''

''அங்கே சொந்த வீடு. அவங்க தங்கிட்டாங்க. இவர் போய் பார்த்துப்பார் அப்பப்ப! அழறவங்க உள்ளூர் உறவுகள்''

அந்த வீடு காவலின் வசம் வர, ஜீப்பை அனுப்பி விட்டு அலெக்ஸ், கமலின் வண்டியில் ஏறினான்.

''இனிமே ஏதாவது செஞ்சு நாமும் செயல்பட் டாகணும் கமல்''

''சொல்லு''

''புகார் தந்தார் கேப்டன். கைது பண்ணிட் டோம். முஸ்தபாவை எத்தனை நாள் காவல்ல வச்சிருக்க முடியும்''

''அது நம்ம வசதிபோலச் செய்யலாம். ஆனா ஆபத்து லாக்கப் வரைக்கும் வந்தாச்சு''

''நீ உங்க வீட்டுக்குப் போ கமல். அங்கே உட்கார்ந்து பேசலாம்.''

இருவரும் கமலின் வீடு வந்து, தனியறைக்குள் நுழைந்தார்கள்.

''பிரச்சனை என்னானா, கமிஷனரைக் கூப்பிட்டு சிவதாசன் மிரட்டியாச்சு.''

''என்னானு?''

''முஸ்தபாவை என் கஸ்டடிலேருந்து மாற்றச் சொல்லி''

''ம்!''

''நான் உயர் அதிகாரினுகூடப் பார்க்காம மறுத்தாச்சு, ஆனா கமிஷனரோட வாய்ச் சொல்லை நான் மறுக்கலாம் ஆனா அதுவே அரசாங்க உத்தரவா வந்துட்டா, அடி பணிஞ்சு தான் ஆகணும். உத்தரவு இந்நேரம் தயாரா இருக்கும்.''

''சரிதான்.''

''ஆனா கமிஷனர் வசம் முஸ்தபா ஒப்படைக்கப்பட்டா, நிச்சயமா அவனை உயிரோட விட மாட்டாங்க. அவனைப் பற்றின ஃபைல்கள் உட்பட தீக்குச்சிக்குத் தீனியாகும்.''

''ம்!''

''இந்த நிலைல என்ன செய்யமுடியும் சொல்லு இன்னும் கொஞ்ச நேரத்துல முடிவெடுக்கணும் கமல்!''

''எனக்கொரு சந்தேகம் அலெக்ஸ்!''

''சொல்லு கமல்''

''மந்திரி வெள்ளைச்சாமியும் எம்.எல்.ஏ. சிவதாசனும் ஒரே கையா''



''பாக்கறவங்க மத்தில சிவதாசன் அப்படியொரு பிரமையை உண்டாக்கி வச்சிருக்கான்.''

''ஒரு மந்திரி எம்.எல்.ஏவைப் பயப்படணுமா?'',

''பின்ன? சிவதாசன் கையில தொண்ணூறு எம்.எல்.ஏக்கள். வெள்ளைச்சாமிக்கு 'ஹோம்' கிடைக்கவே மறை முகக் காரணம் சிவதாசன் தான்.''

''சிவதாசன் ஏன் மந்திரியாகலை?''

''மக்கள் ஒப்புக்க மாட்டாங்க. கட்சி மாறி பல முறை களங்கப்பட்டவன் சிவதாசன். சாராயம் கள்ள நோட்டுனு ஆதிகாலத்துப் பேட்டைரௌடி. போன முறை எம்.எல்.ஏவா இருந்தப் போ எட்டு கொலைகளைச் செஞ்சிருக்கான். எல்லாம் பகிரங்கமா இருந்தும் சட்டத்துல உள்ள ஓட்டைல புகுந்து வெளில வந்துட்டான். அதனால தேர்தல்னு வந்தா இவனால மக்களைச் சந்திக்க முடியாது. காரித் துப்புவாங்க.''

''அதனால வெள்ளைச்சாமி?''

''ம்! வெள்ளைச்சாமிக்குப் பதவி ஆசை. ஆனா டம்மி மந்திரி. சிவதாசன்தான் கயிறைப் புடிச்சிருக்கான். பம்பரம் வெள்ளைச்சாமி புரியுதா?''

''ஓ... அப்படியா!''

''இதுல முஸ்தபாவுக்கும், சிவதாசனுக்கும் என்னவோ லிங்க் இருக்கு. அதான் மேற்படி கொலைகள்.''

''சரி! நம்ம விஷயத்துக்கு இனி வரலாம். நீ சொல்ற மாதிரி அரசாங்க உத்தரவு வந்துட்டா, தெரிஞ்சும் முஸ்தபாவைப் பலி கொடுக்க வேண்டி வரும் ஏதாவது செய்யணும்!''

''நீயே சொல்லு கமல்.''

''முஸ்தபா மன நோயாளி!''

''சரி''

''அவன் முன்பொரு முறை கேப்டன்கிட்ட கலாட்டா பண்ணின காரணமாகத்தான் கைது செய்யப்பட்டு இங்கே கொண்டு வரப்பட்டான். இல்லையா?''

''அது நீ உருவாக்கின கதை!''

''அதோட இரண்டாம் பாகம் இன்னும் கொஞ்ச நேரத்துல''

''எப்படி?''

''திரும்பவும் கலாட்டா பண்ணினான். அதனால மருத்துவமனைல சேர்க்க வேண்டிய கட்டாயம்.''

''அதுல இன்னும் ரிஸ்க் கமல்.''

''ஏன்?''

''போலீஸ் டாக்டர்கள் கமிஷனரோட கைக் கூலிகள்.''

''வேண்டாம். போலீஸ் டாக்டர் எதுக்கு?''

''என்ன நீ. அரசாங்க விருந்தாளி அவன். அங்கீகாரம் பெற்ற மன நல மருத்துவமனைல தான் சேர்க்கணும். இது சட்டம்.''

''சி.ஆர்.பி.சில ஒரு க்ளாஸ் இருக்கு.''

''என்னா?''

''சம்பந்தப்பட்ட அதிகாரியோட உத்தரவா தம் இருந்தா, தனியார்கிட்டக் கூட அந்த நோயாளி சிகிச்சை எடுத்துக்கலாம்.''

''அப்படியா சொல்ற''

''புறப்படு''

''இப்பவா கமல்?''

''எனக்குத் தெரிஞ்ச சைக்யாட்ரிஸ்ட் ஒருத்தர் உண்டு. மேத்தானு. அவர்கிட்ட பதிவு பண்ணிட்டு கையோட முஸ்தபாவைச் சேர்த்துரலாம்.''

''அதுவும் நியாயம்தான்.''



''இனி பேச நேரமில்லை. முஸ்தபாவை டாக்டர்கிட்ட ஒப்படைச்சிட்டு, ரகோத்தமன் கம்பெனியைக் கிளறணும்.''

''போகலாம்'' என்று இருவரும் புறப்படும் அதே நேரம், சிவதாசனின் எதிரே காளி இருந் தான். நன்றாகக் குடித்த காரணமாக அவன் கண் கள் சிவந்து ஒரு பல்பு போல காணப்பட்டது.

''நான் என்னடா சொன்னேன்?''

''என்னா''

''அந்த ரகோத்தமனைக் கடத்திட்டு வரச் சொன்னேன்.''

''நானும் அதுக்குத்தானே போனேன்''

''போன இடத்துல கொன்னுட்டியாக்கும்.''

''அப்பா.. நான ரகோத்தமனைக் கொல்லலை அவன் ஏற்கனவே கொல்லப்பட்டிருந்தான். நான் தப்பிச்சா, பிழைச்சாப் போதும்னு வந்துட்டேன்''

''அந்த அனுவைக் கவர் பண்ணச் சொன்னேன. அந்த வக்கீல் வந்து கொத்திட்டுப் போயிட்டான்.''

''இல்லை நைனா, பெரிசுக்கு இஷ்டமில்லை''

''மாருதிக்கா''

''ம்!''

''சரி! நீ ஒண்ணு பண்ணு! வக்கீல் உயிரோட இருந்தாத்தான் அப்பனுக்கும், மகளுக்கும் யுத்தம். அவன் கதையை முடிச்சிடு.''

''எப்ப நைனா''

''இன்னும் ஒரு மணிநேரத்துல நடத்தினாலும் சரி. போ சீக்கிரம்.''

காசி வெளியே வந்தான் உள்ளே தொலைபேசி அழைத்தது. காசி சற்று மறைந்து நின்று கொண் டான் மெள்ள,

சிவதாசன் ரிசீவரை எடுத்தான். ''ம்..சொல்லு! அப்படியா.. கேள்விப்பட்டேன். நம்ம பயல் தாமதமாப் போய் கோட்டை விட்டுட்டான். பரவாயில்லை. அந்த வக்கீல் பய இருந்ததாதானே வாலாட்டுவான். முடிச்சிரச் சொல்லிட்டேன்.''

''. . . . .''

''ம்! ஆர்டர் ரெடி. அந்த அலெக்ஸ் வந்ததும் தந்துர வேண்டியதுதான். ரெண்டு ஆர்டர்''

''என்ன!''

''முஸ்தபாவை ஒப்படைக்கும்படி ஒரு உத்தரவு இன்ஸ்பெக்டர் அலெக்ஸுக்கு தற்காலிக வேலை நீக்கம். அடுத்தது..''

''. . . .''

''வச்சிரட்டுமா. முஸ்தபா நம்ம கைக்கு வந்ததும் உடனே தீர்த்துக் கட்டிரலாம். வக்கீல் கரப்பான். தப்பிக்க வாய்ப்பிருக்கு.''

எதிர்முனையில், ''ரகோத்தமன் ஆபீஸ் தீப் பிடிச்சு எரியட்டும் இன்னிக்கு ராததிரி. மின்சாரக் கோளாறுன்னு சொல்லிரலாம். ஏதாவது பத்திரங்கள் வக்கீல்கிட்ட மாட்டின, கந்தலாயிடும் காரியம்.''

''சரி ஏற்பாடு செஞ்சிர்றன்'' ரிசீவரை வைத்தான் சிவதாஸ்.

வாசலில் ஜீப் வந்து நின்றது. கமிஷனர் இறங்கி மூச்சிரைக்க ஓடி வந்தார்.

''என்னாச்சு''

''லாக்கப்புல முஸ்தபா இல்லை, ஸ்டேஷன்ல அலெக்ஸும் இல்லை. ஏமாந்துட்டம் சார்''

சிவதாசனின் தாடை தரம்புகள் இறுகின.



## 15

''அந்த மனோ தத்துவ டாக்டரின் முன் இருந்தார்கள் கமலும் அலெக்ஸும். அவர்களுடன் முஸ்தபா.

''சொல்லுங்க.''

''இவனுக்கு நிச்சயமா பைத்தியமில்லை. ஆனா மனசுக்குள்ள ஏதோ ஒரு குழப்பம் இருக்கு உள்ளே கனமான போராட்டம் நடக்குது. இவனைப் பேச வைக்கணும். இவன் பேசிட்டா இவனுக்கும தெளிவு. பல உண்மைகள் வெளியே வரவும், வாய்ப்பு. முடியுமா டாக்டர்?''

''இது வரைக்கும் என்ன பேசியிருக்கான்?''

''தன் பேரு முஸ்தபாங்கற ஒரே ஒரு செய்தி மட்டும்தான் இவனால சொல்லப்பட்டிருக்கு!''

''சரி! முயற்சிக்கலாம். கூட்டிட்டு வாங்க!''

முஸ்தபா அதே ரக வழக்கமான மிரட்சியோடு அவர்களைப் பின்பற்றினான்.

தனியறையில் நிக்க வைக்கப்பட்டான். அவன் பார்வையில் கலவரம் மண்டிக் கிடந்தது. ஊசி ஒன்று போடப்பட்டு, டாக்டர் அவன் அருகில் வந்தார். மல்லாந்து படுக்க வைக்கப்பட்டிருந்தான்.

ஒற்றை விரலை அவன் கண்களுக்கு நேராகப் பிடித்து அதை மெல்ல மிக மெல்ல கீழ் நோக்கி இறக்கத் தொடங்கினார்.

'இப்ப உன் உடம்பு மனசு எல்லாம் தளரட்டும். கொஞ்சம் கொஞ்சமா..கொஞ்சம் கொஞ்சம்.'

அவர் குரலில் முறையான இடைவெளி விட்டு மெலிதான ஒரு சங்கித அதிர்வுகள் தெறிக்க, முஸ்தபா மெல்ல மெல்ல ஆழ்நிலை உறக்கத்துக்குள் போய் கொண்டே இருந்தான்.

டாக்டர் விடுபட்டார். "மிஸ்டர் கமல்! இப்ப பதமா இருக்கான் முஸ்தபா,இனி அவனை சுலபமா பேச வைக்கலாம் தொடங்குங்க!"

கமல் அருகில் வந்து உட்கார்ந்தான். தலை மாட்டில் அலெக்ஸ். அந்த அறையின் வெளிச்சம், சூழ்நிலை எல்லாமே ஒரு மயக்கும் விதத்தில் இருந்தன.

"உன் பேரென்ன?"

"முஸ்தபா!"

"உனக்கு இந்த உலகத்துல யாரை ரொம்பப் பிடிக்கும்?"

"உம்மாவை, அப்புறம் கதீஜாவை!"

"யாரு கதீஜா?"

"என் ஒரே தங்கை!"

"உனக்கு நண்பர்கள் யாரும் இல்லையா?"

உண்டு."

"யாரு?"

"அஜயன்"

"ரொம்ப நெருக்கமா? சுமார் நண்பனா?"

"ரொம்ப நெருக்கம்!"

"அஜயன் இப்ப எங்கே இருக்கான்?"

"தெரியலை!"

"நீ எங்கே வேலை பார்த்தே?"

"கொச்சி துறைமுகத்துல!"

"அங்கே உனக்கு எதிரி யாரும் இருந்ததுண்டா?"



கொஞ்சம் சலனத்துடன் கூடிய தலையசைப்பு, பிறகு. "உண்டு"

"பேரென்னா?"

"தெரியலை!"

"உன்னைக் கொல்ற அளவுக்கு யாராவது முயற்சி செஞ்சதுண்டா?"

"உ... உண்டு உண்டு! என்னை ஒருத்தன் கொலையே செஞ்சுட்டான். கப்பலை வாங்க வந்த அந்த வெள்ளை முதலாளி!"

"பேரு?"

"தெரியலை"

"அடையாளம்!"

"தாடைல கண்டு விரல் பருமனுக்குத் தழும்பு இருக்கும்."

ஊசி மருந்தின் தீவிரம் அடங்க, மெல்ல மெல்ல அவனது ஆழ்நிலை உறக்கம் விடுபடத் தொடங்கியது. கமல் கேள்விகளை நிறுத்திக் கொண்டான். மூவரும் வெளியே வந்தார்கள்.

"டாக்டர், இங்கே இவன் இருக்கறது யாருக்கும் தெரியாது. இவனை நாலஞ்சு நாளைக்கு நீங்க பத்திரமாகக் காப்பாற்ற முடியுமா? நானும், அலெக்ஸும் கொச்சித் துறைமுகம் போகணும்."

"நீங்க என்னை தாராளமா நம்பலாம் கமல். உங்க அரசியல் வியாபாரங்களுக்கு நான் படிய மாட்டேன். மேலும் இவனுக்குத் தொடர் சிகிச்சைகள் தந்து ரொம்ப சீக்கிரமாகவே இவனை மன உளைச்சல்களிலிருந்து மீட்ரலாம்."

"தேங்க் யூ டாக்டர்!"

"நீங்க தைரியமாப் புறப்படுங்க."

இருவரும் மருத்துவமனையைவிட்டு வெளியே வர, ''கமல்!''

''சொல்லு அலெக்ஸ்!''

''லாக்கப்ல முஸ்தபா இல்லைங்கற விவரம் இந்த நேரம் மேலிடத்துக்குப் போலிருக்கும்.''

''அதனால?''

''நம்மையும் தேடி ஒரு கூட்டம் அலைபாஞ்சிட்டு இருக்கும். நம்மைக் கைது செய்யக்கூட வாரண்ட் தயாராக இருந்தா ஆச்சரியமில்லை.''

''ம்! நானும் அதை யூகிச்சாச்சு.''

''ரெண்டு பேரும் கொஞ்சம் உருவத்தை மாற்றிட்டுத் தான் கொச்சினுக்கு ரயில் ஏறணும்.''

''எப்படி?''

''நம்ம நாகரத்னம் இருக்கான். நாடக குரூப் வச்சிருக்கான். மேக்கப் ஜோராப் போடுவான் வா''

இருவரும் ஆட்டோவில் ஏறி நாகரத்னம் இருப்பிடத்தை அடைய, அவன் வரவேற்றான்.

கமல் ஒரு சாய்பு வேடத்திலும், அலெக்ஸ் கிழவனாகவும் நொடியில் மாற்றப்பட, இருவரும் நன்றி சொல்லி வெளிப்பட்டார்கள்.

கொச்சி செல்லும் ஆலப்புழை எக்ஸ்பிரஸில் ரிசர்வேஷன் இல்லாத பெட்டியில் இருவரும் நெருக்கியடித்து விடிய பயணம் செய்தார்கள்.

''காலை எர்ணா குளத்தில் இறங்கியதும் மேக்கப் அவசியமாக இருக்கவில்லை. கலைத்துவிட்டு, லாட்ஜ் போட்டார்கள். குளித்து, உடை மாற்றி உடனே புறப்பட்டார்கள். கொஞ்சி துறைமுகத்தை அடைந்து அலெக்ஸ் தன் அடையாள அட்டை காண்பிக்க, இருவரும் அனுமதிக்கப்பட்டார்கள்.



''இங்கே டாக்யார்ட்ல வேலை பாக்கற அஜய் என்கிற தொழிலாளி உடனே எங்களுக்கு வேணும்'

''ரெண்டு அஜயன் உண்டு. யாரு?''

'ரெண்டு பேரையும் வரவழைங்க எங்களுக்குத் தேவையான அஜயனை நாங்க வரவழைப்போம்''

சற்று நேரத்தில் இளைஞனாக ஒருவனும், மத்தியதர வயதில் ஒருவனுமாக வந்தார்கள்.

''முஸ்தபா உயிரோட இருக்கான்.''

''எங்கே சார்?'' அந்த இளைஞன் பதறிக்கொண்டு வர,

''நீ மட்டும் இரு! அவர் போகட்டும்.''

அவன் போனதும், ''நீ சொல்ற முஸ்தபா இது தானா?'' புகைப்படம் காண்பித்தான் கமல்.

அந்த அஜயன் அதை வாங்கிய நொடியில் அழுதுவிட்டான்.

''சார்! இவன் எங்கே இருக்கான்''

''சொல்றேன்! அதுக்கு முன்னால எங்க கேள்விகளுக்கு நீ பதில் சொல்லணும்.''

''சொல்றேன் சார்''

''இவன் இறந்துட்டதா நீ நினைக்கறியா!''

''ஆமாம்.''

''எப்படி''

''இதே கொச்சிலதான் இவன் வேலைக்குச் சேர்க்கப்பட்டான். தனியார் கப்பல் கம்பெனி முதலாளி ஒருத்தரால!''

''சரி, மேலே சொல்லு.''

''அவங்க ஏதோ புதுக்கப்பல் வாங்கணும்னு பம்பாய் துறைமுகத்துக்கு இவனைக் கூட்டிட்டுப் போனாங்க.''

''ம்! அப்புறம்''

''போன இடத்துல கால் தவறி, கடல்ல விழுந்தவன், சுறா மீன்களுக்கு பலியாயிட்டான்னு செய்தி வந்ததுங்க!''

''அப்படியா?''

''எத்தனை நல்லவன் தெரியுமா? அப்பாவி, யார் வம்புக்கும் போக மாட்டான்.''

''இவனோட உம்மாவும், கதீஜாவும்''

''இதே கொட்டுசிலதான் இருக்காங்க. தினசரி வாழ்க்கைல அவங்க நடத்தற போராட்டம் கொஞ்சமில்லை. என்னால முடிஞ்ச உதவிகளை நான் செய்யறேன்.''

''எங்கே இருக்காங்க?''

''மீன்'குப்பத்துல. நான் இப்பவே அனுமதி வாங்கிட்டு வர்றேன். உங்களைக் கூட்டிட்டுப் போறேன்.''

இருவரும் தயாராக இருந்தார்கள். உடனே அவன் வந்து விட்டான். கடலோரமாக இருபது நிமிடங்கள் நடக்க, அந்த மீன் குப்பம் வந்து விட்டது.

அஜயன் குடிசைகளின் ஊடே நடந்து மத்தியில் இருந்த குடிசை ஒன்றை நெருங்கினான்.

''உம்மா.''

''......!''

''தங்கச்சி...''

கதீஜா எட்டிப் பார்த்தாள். இவனுக்குப் பின்னால் இருவர் நிற்பதைப் பார்த்துக் கொஞ்சமாக பயந்து, ''உம்மாவுக்கு உடம்புக்கு சுகமில்லை!''

இவங்க முக்கிய விவரம் கொண்டு வந்திருக்காங்க. முஸ்தபா உயிரோட இவங்க பாதுகாப்புல இருக்கான்.''

''எ. என்னது? என் மகன் உயிரோட இருக்கானா?'' உம்மா பயந்து கொண்டு வெளியே வந்தாள்.



''உம்மா.. உன்னால முடியாம...''

''எனக்கு எல்லாம் சரியாப் போச்சு. எங்கேய்யா என் குழந்தை? அவனை இப்பவே நான் பார்க்கணும்.''

''நிச்சயமா பார்க்கலாம்மா! உங்கள் முஸ்தபா கிட்டே கூட்டிட்டுப் போகத்தான் நாங்க வந்திருக்கோம்.''

''எல்லாம் சொல்றோம். நீங்களும் கதிஜாவும் உடனடியா புறப்படுங்க எங்க கூட!''

''என்னாச்சு என் பிள்ளைக்கு இத்தனை காலம் எங்கே இருந்தான் சொல்லுங்க.''

''நீங்க...?''

''பயப்பட வேண்டாம்மா. இவர் தமிழ்நாட்ல போலீஸ் அதிகாரி. நான் வக்கீல். இதோ எங்க அடையாள அட்டைகள்.''

''மன்னிச்சிடுங்க! நான் சந்தேகப்படலை. வயசுப் புள்ளையை வச்சிட்டு வாழறதால யாரையும் சுலபத்துல நம்ப முடியலை.''

''புறப்படுங்க!''

அஜயன் அருகில் வந்தான்.

''அய்யா நானும் முஸ்தபாவைப் பாக்கணும். ஆனா இவங்க லீவு தரமாட்டாங்க. எல்லா பிரச்னைகளும் சரியானதும் அவனை இங்கே அனுப்பி வைங்க.''

''கண்டுப்பா நீ மட்டும் இல்லைனா, இத்தனை விவரங்கள் எங்களுக்குத் தெரிஞ்சிருக்காது. நன்றி அஜய்.''

கை கூப்பி விட்டு இருவரும் புறப்பட கக்கத்தில் துணி மூட்டை சகிதம் உம்மாவும், கதீஜாவும் குடிசைப் பகுதியில் ஒரு சிலரிடம் சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

''போகலாமா?''

''சரிய்யா?''

## 16

அதே நேரம் கமல் வீட்டில் போலீஸ் கமிஷனர் ஒரு பெரும்படையை நிறுத்தியிருந்தார். கமல், அலெக்ஸ் இருவரையும் கைது செய்ய வாரண்ட் தயாராக இருந்தது.

தொலைபேசி அழைத்தது.

அஜந்தா போய் எடுத்தாள்.

''நான்தான் கமல். அங்கே நிலவரம் எப்படிம்மா இருக்கு?''

தூரத்தில் கமிஷனர் இருந்தார்.

''இல்லைடி! நான் வரும்படியான சூழ்நிலை இல்லை. வீட்டைச் சுற்றி விருந்தாளிகள்.''

''போலீஸா அஜந்தா, எங்களைக் கைது செய்யவா?''

''ம்!''

''சரி! நான் பார்த்துக்கறேன்.''

ரிசீவரை கமல் வைத்துவிட்டான். அஜந்தா அம்மாவைப் பார்க்க, திரும்பவும் டெலிபோன்!

எடுத்தாள்.

''நான் வொய் பேசறேன். நீங்க யாரு?''

''தங்கச்சி!''

''ஓ... கமல் தங்கச்சியா? கமல் வீடு திரும்பியாச்சா?''

''இல்லை!''

''வர வேண்டாம் தற்சமயம் அவனும், அலெக்ஸும் கைதாகக் கூடாது முஸ்தபாவை எப்படியாவது கோர்ட்ல சப்மிட் பண்ணிடணும் பாதுகாப்பா. ஒரு முன் ஜாமீன் ரெண்டு பேரும் எடுத்துட்டா, யாரும் அசைக்க முடியாது வச்சிரட்டுமா,''



''யாரிந்த வொய்? இத்தனை அக்கறை காட்டும் இவர் அரசியல்வாதிகளுக்குநிச்சயம் எதிரி தான். தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல் உதவிகள் செய்கிறார்.

அனு உள்ளே நுழைந்தாள். கமிஷனர் எதிர் பட்டார்.

''யாரம்மா நீ.''

''தொழிலபதிபர் மாருதியோட மகள்!''

''ஓ... அது நீதானா இந்த வீட்ல உனக்கென்ன வேலை.''

''அஜந்தா என் தோழி.''

''சார்! கொஞ்சம் முன்னால இவதான் எனக்கு போன் பண்ணினா உள்ள வாடி அனு!''

அனுவுக்கு ஒன்றுமே புரியாவிட்டாலும் அஜந்தாவைப் பின் தொடர்ந்தாள் வேகமாக!

## 17

ஆஸ்பத்திரியில் முஸ்தபாவைக் கண்டதும் உம்மா கதறிவிட்டாள். கதீஜாவும்தான்.

முஸ்தபாவும் தாளமாட்டாமல் வெடித்து அழத் தொடங்கினான்.

''அவங்க அழட்டும், நாம வெளில இருக்கலாம் டாக்டர்!'' மூவரும் வெளியே வந்தார்கள்.

''எப்படி டாக்டர் இருக்கான் முஸ்தபா.''

''தேவலை, ஓரளவு தெளிஞ்சாச்சு ஹிபன் டைஸ் முடிஞ்ச பின்னால உம்மாவும் தங்கையும் முழுக்கத் தெளிய வச்சிடுவாங்க. இனிமே நீங்க எதிர்பார்த்த முழுமையான முஸ்தபா உங்களுக்குக் கிடைக்கக்கூடும்.''

''தேங்க் யூ டாக்டர்.''

''இவங்க மூணு பேரையும் எங்கே தங்க வைக்கறது கமல்.''

''டாக்டர் இன்னும் ரெண்டு நாளைக்கு இந்த மூணு பேரும் இங்கே இருக்கலாமா?''

''தாராளமா!''

''வா அலெக்ஸ் போகலாம்!''

கமல் வந்ததுமே தங்கையின் மூலம் தெரிந்து கொண்டு, லாயர் ஜனனியின் உதவியால் முன் ஜாமீனுக்கு விண்ணப்பித்து விட்டான். மறுநாள் காலை அது கைக்கு வர, இருவரும் துணிச்சலாக வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

''அண்ணா போலீஸ்?''

''எங்களை இனிமே ஒண்ணும் செய்ய முடியாது ஆனா ஒரு சிக்கல் அலெக்ஸ்!''

''என்னா?''

''முஸ்தபாவை மறைச்சுவைச்சம்னு ஒரு குற்றச் சாட்டு நம்ம மேல இருக்கு. இதுக்கு முறையான விளக்கங்களையும் சொல்ல வேண்டிய கடமை நமக்குண்டு.''

''அதனால?''

''முஸ்தபாவை எப்படி கோர்ட்ல சப்மிட் பண்றதுன்னு தெரியலை.''

''ஏன் அதுல என்ன கஷ்டம்?''

''பிரச்சனை பெரிசு. ஒரு பென்ச் ஏற்பாடு பண்ணி கான்ஃபிடன்ஷியலா ரெண்டு நீதிபதிகள் விசாரிக்கணும் முஸ்தபாவை எப்படி சாதிக்கப் போறோம். முதல்ல பெட்டிஷன்போடணும். எந்த ரூபத்துல பெட்டிஷன் இறக்கலாம்னு புரியில எனக்கு! தொலைபேசி அழைத்தது. எடுத்தாள் சுஜந்தா.



''நான் வொய் பேசறேன். அண்ணன் வந்தாச்சா? உடனடியா உம்மா மூலம் உங்கண்ணன் மேல ஹேபியஸ் கார்டஸ் ரிட் ஒண்ணு போடச் சொல்லு!''

''நீங்க?''

''சொன்னா அவனுக்குப் புரியும். தாமதிக்காதே! உடனே செய்!''

''யாரம்மா?''

''மிஸ்டர் வொய்!''

''யாரந்த நாய்? செருப்பால அடி!''

''இருண்ணா! ஆத்திரப்படாதே. உபயோககரமா, உதவியா இருக்கார் அந்த வொய்.''

''என்ன சொன்னான்.''

''முஸ்தபாவை கோர்ட்ல ஒப்படைக்க வழி இருக்கு. உம்மாவை விட்டு உங்க மேலே ஹேபியஸ் கார்டஸ் போடச் சொல்லணுமாம்.''

''ஹேபியஸ் கார்டஸ்?''

''அப்படீன்னா?''

''என் பிள்ளையை போலீஸ் அல்லது வக்கீல் மறைச்சு வச்சிருக்கு. உடனே விடுவிக்கணும்னு அரசாங்கத்து மேல தனிமனிதர் வழக்கு.''

''வெரிகுட் ஐடியா கமல்!''

''ஆமாம்! எனக்கிது தோணலை. யாரந்த வொய்? இத்தனை 'நறுக்'குனு நமக்கு யோசனை தர்றது எப்படி?''

''அதை அப்புறம் ஆராயலாம் மேல். நீ ஏற்பாடு செய் உடனடியா!'' அடுத்த அரைமணி நேரத்தில் உம்மாவுடன் நீதிமன்றத்தில் இருந்தான் கமல்.

ஹேபியஸ் கார்டஸ் ரிப்போர்ட் போடப் பட்டது. அது அத்தனை சுலபமாக எல்லோரும் போடக்கூடிய மனு அல்ல.

அரசாங்கத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் வழக்குக்கு துணிச்சல் வேண்டும்.

அதை முடித்துவிட்டு நேராக மருத்துவமனை வந்தார்கள். முஸ்தபா பெருமளவுக்குத் தெளிந்திருந்தான்.

''இப்ப நல்லா இருக்கியா முஸ்தபா?''

பவ்யமாகத் தலையசைத்தான்.

''உன் வாழ்க்கைல என்ன நடந்தது? எதனால உன்னை நீயே மறக்க நேரிட்டதுன்னு புரிஞ்சுதா இப்ப?''

''ம்! அதையெல்லாம் விவரமா சொல்லத்தான் உங்களுக்காகக் காத்துட்டு இருக்கேன்.''

''இப்ப வேண்டாம்.''

''கமல்! ஏன் வேண்டாம்னு சொல்றே?''

''அலெக்ஸ், சுவருக்குக் கூட காது இருக்கும். முஸ்தபாவோட வாக்குமூலம் நமக்கு பாதகமாக வாய்ப்புண்டு. கூடாது, பென்ச்-ரெண்டு நீதிபதிகள் கொண்ட மன்றம் ஏற்பாடாயாச்சு நாளைக்கே வழக்கு வரப்போகுது. முஸ்தபா அங்கே சொல்லட்டும். நீ இனிமே எதுக்கும் கவலைப்பட வேண்டாம் நாளைக்கு அங்கே நீ தைரியமா பேசறதை வச்சுத்தான் உண்மைகள் உடைபடப் போகுது. ஒரு சில முகத்திரைகள் கிழியப் போகுது. என்னைத் தவிர யார் கூடவும், உயிரே போனாலும் நீ வெளியே வரக்கூடாது. உன்னை நீதிமன்றத்துக்கு நான்தான் கூட்டிட்டுப் போவேன்.''

''சரி!'' என்று தலையசைத்தான்.

''நாளைக்குக் காலைல தயாரா இரு. உம்மா நீங்களும்தான்.'' இருவரும் புறப்பட்டார்கள்.



''ஏன் அப்படி சொன்னே கமல்''

''புரியலையா அலெக்ஸ்? நாளைக்கு ஒரு பெரிய வேட்டை நடக்கப் போகுது.''

''வேட்டை?''

''ம்! கோர்ட்ல முஸ்தபா ஏறிட்டா, கடவுளால கூட அதைத் தடுக்க முடியாது உண்மைகள் பெருவெள்ளமா வந்துடும். அணை போட முடியாது. அதனால முஸ்தபாவை கோர்ட்டுக்கே வரவிடாம செய்ய முயற்சிகள் இப்பவே தொடங்கியிருக்கும்.''

''தடுத்தா பிரச்னைகள் பெரிசாகுமே''

''யார் மேலா, உம்மா கொடுத்த வழக்கு நம்ம மேல. அதனால எந்தப் பின் விளைவுகளுக்கும் பழி சுமக்கப் போறது நீயும், நானும் முஸ்தபா கொலை செய்யப்பட்டாக்கூட பழி நமக்குத்தான். ஒரே சமயத்துல ரெட்டை எதிரிகள் ஒழிப்பு, எப்படி?''

''கமல்!''

''சமாளிக்கலாம். யோசனை வச்சிருக்கேன். இப்ப என் வீட்டுக்குப் போகலாம்'' இருவரும் அங்கே வர, கமிஷனர் காத்திருந்தார்.

''வாங்க சார்''

''லுக் கமல், நீ ஆடின நாடகம் போதும். உடனடியா முஸ்தபா எங்கிட்ட ஒப்படை.''

''உம்மா போட்ட ஹேபியஸ் கார்ப்பஸ் நியாயம், நீங்க யாரு சார் அவனைக் கேட்க?''

''கமல்! முஸ்தபா உன் பராமரிப்புலதான் இருக்கான்..''

''இருக்கட்டும்''

''நாளைக்கு அவன் கோர்ட்டுக்கு வரப் போறானா''

''தெரியல!''

அருகில் நெருங்கினார் கமிஷனர். ''விளையாட றியா. நாளைக்கு அவன் நீதிபதிகள் முன்னால வந்து நிக்கற வரைக்கும் உயிரோட இருப்பான்னு நினைக்கறே''

''கமிஷனர்''

''அப்படி நின்னுட்டா என் பதவி போகும். என்னைக் காப்பாத்திக்க எதையும் நான் செய்வேன். இது பகிரங்கச் சவால். முஸ்தபாவை முடிஞ்சா நீ காப்பாற்று.''

கமல் சிரித்தான். ''சந்தோஷம் கமிஷனர். சவால்னா எனக்கு ரொம்ப பிடிக்கும் அதுவும் உங்க கூட சவால் விடறது தனியான ஒரு குஷி தான். புறப்படுங்க.''

கமிஷனரின் முகம் சிவந்து கிடந்தது. அவனை முறைத்துவிட்டு அவர் வெளியேற, கமல் அலெக்ஸை அருகில் அழைத்து காதோடு வெகு நேரம் என்னவோ சொன்னான்.

''இது நல்ல ஐடியா கமல்''

''ஜாக்ரதையா செயல்படுத்தணும்.''

## 18

கமல் வீட்டு வாசலிலிருந்து பல முனைகளில் போலீஸ் காவலை ஏற்பாடு செய்திருந்தார் கமிஷனர்.

விடிந்துவிட்டது. பத்து மணிக்கு நீதிமன்றம் பெஞ்ச் தயாராகிவிடும். கமல் அதிகாலையில் எழுந்துவிட்டான். பின் வழியாக முழு ஒப்பனையுடன் வெளிப்பட்டான். கூடவே அலெக்ஸ்.

''நி போய் கோர்ட்ல எல்லாம் ரெடி பண்ணு அலெக்ஸ் நான் முஸ்தபாவோட வந்துடறேன்.''



உடை, ஒப்பனை மாறியிருந்ததால் கமலை யாரும்பின் தொடரவில்லை. மருத்துவமனைக்கு வர, அங்கே கான்ஸ்டபிள் உடையில் முஸ்தபா நின்றான்.

''குட்! உனக்கு நல்லா பொருந்தது! நான் சொல்லித் தந்த விவரங்கள் டயலாக் எல்லாம் மனப்பாடமா இருக்கா!''

''ம்... இருக்கு.''

'தைரியமா பேசு ஜட்ஜ்கிட்ட வா போகலாம்!''

இருவரும் ஒன்பதரைக்குத்தான் புறப்பட்டார்கள் கமல் போலீஸ் இன்ஸ்பெக்டர் உடையில் இருந்தான். கான்ஸ்டபிளாக முஸ்தபா. பைக்கில் இருவரும் புறப்பட்டார்கள். நீதிமன்ற வாசலை இருவரும் அடைய, யாரும் பொருட்படுத்தவில்லை. சேம்பருக்குள் அவசரமாக நுழைந்து இருவரும் உடை மாற்றி பின்புற படிக்கட்டுகளில் பாய்ந்து, நீதிமன்றத்தில் பிரவேசிக்க, அப்போது தான் இரண்டு நீதிபதிகளும் வந்து உட்கார்ந்திருந்தார்கள்.

மூச்சிரைக்க வந்து நின்றான் கமல்.

''இதோ முஸ்தபா இவன்தான் மை லார்ட்!''

இரண்டு நீதிபதிகளும் ஏதோ பேசிக் கொண்டார்கள் தங்களுக்குள் அதன்பின் நிமிர்ந்து முஸ்தபாவை ஒருமுறை பார்த்தார்கள் ஆழமாக.

''தயவு செஞ்சு வக்கீல்கள் எல்லாம் வெளியே இருக்கணும். நாங்க விசாரணை தொடங்கணும்.''

அத்தனை பேரும்—கமல் உட்பட விலக, தனித்து விடப்பட்டான் முஸ்தபா.

''கதவுகளை சாத்திட்டு வா!'' சாத்திவிட்டு வந்தான். அவனிடம் இப்போதுகூட ஒரு பீதி இருந்தது.

''நீ யாருக்கும் எதற்கும், பயப்பட வேண்டாம். இது ஆண்டவன் சந்நிதி மாதிரி. எல்லா உண்மைகளையும் நீ சொல்லலாம்.'' முஸ்தபா தொடங்கினான்.

''அந்தக் கப்பல் கம்பெனி முதலாளிதான் என்னை கொச்சி துறைமுகத்துல வேலைக்குச் சேர்த்தது. அவரோட சிவதாசன்னு ஒரு தமிழ்நாட்டு எம். எல். ஏ.வுக்கு நெருங்கின பழக்கம். ஒருநாள் தான் வேலை மும்மரத்துல இருக்கும் போது சிவதாசனும், முதலாளியும் பேசறதைக் கேட்டேன். அந்த பெரிய சரக்குக் கப்பலை கடல்ல மூழ்கிட்டதா அறிவிக்க, அதை அயல்நாட்டுக்கு நல்ல விலைக்கு விற்றுடலாம். அது மூழ்கிட்டதா சொல்லி இன்சூரன்ஸ் கம்பெனில பணம் வாங்கிரலாம்னு திட்டம்.''

''அப்புறம்!''

அந்த இன்சூரன்ஸ் அதிகாரி ரகோத்தமனை அடிக்கடி நான் பார்த்திருக்கேன். இந்த விபரங்களை மறைஞ்சு நின்று நாலு பேர் கேட்டோம். அதை ஒருத்தன் பார்த்துட்டு உள்ளே வத்தி வச்சது எங்களுக்குத் தெரியாது. மறுநாள் காலை ஆளை வச்சு அடிச்சாங்க எங்க நாலு பேரையும். மூணு பேர் நிஜமாவே செத்துட்டாங்க. நான் உயிரோட நினைவில்லாம கிடந்தேன் என்னைக் கடல்ல செத்ததா நினைச்சு தூக்கி வீசிட்டாங்க. மீனவர்களால காப்பாற்றப்பட்டு, அந்தக் கப்பல்ல நுழைஞ்சிட்டேன் எப்படியோ, அப்புறம் தான் உங்களுக்குத் தெரியுமே.''

''அப்படியா?''

''ஆமாம்... அப்புறமா கப்பல் மூழ்கிட்டதாச் சொல்லி இன்சூரன்ஸ் கம்பெனில பணம் வாங்கினாங்க. ரெண்டு பேருக்கும் கோடிக்கணக்கா சொத்துக்கள்.



''சிவதாசன்கூட கூட்டு சேர்ந்து இத்தனை அக்ரமம் பண்ணின அந்தக் கப்பல் முதலாளி பேரு என்ன?''

''மாருதி!''

34228
5168583

## 19

மாருதியும் சிவதாசனும் கைது செய்யப்பட்ட விவரம் மறுநாள் காலை செய்தித்தாளில் முதல் பக்கத்தில் புகைப்படத்துடன் வந்துவிட்டது.

கமல் மாருதி வீட்டை அடையும்போது விலங்கிடப்பட்டு அவர் காரில் ஏற்றப்பட்டார்.

அனு அவரை ஒரு புழுவைப்போல் பார்த்துக் கொண்டு கண்களில் வெறுப்பு கூத்தாட நின்றாள்.

கமல் அவள் தோளில் கை போட்டான்.

சட்டென அவன் மார்பில் சரிந்து அழத் தொடங்கினாள். ''ஷ்! ஏன் அழற?''

''ஊர்ல உத்தம வேஷம் போட்ட அப்பா, இத்தனை மோசமான ஒரு கிரிமினல்னு தெரியாம போச்சே எனக்கு!''

''நான் ஓரளவு யூகிச்சிட்டேன் அனு. எப்ப அவர் என்னை மாப்பிள்ளையாக்கிக்க விரும்பலையோ, அப்பவே எனக்கு சந்தேகம் வந்தாச்சு. இப்ப நிரூபணமாயாச்சு. போகலாம் வா!''

''நம்ம வீட்டுக்குத் தானே?''

''ஆமாம்... அதுக்கு முன்னால ஒருத்தருக்கு நன்றி சொல்லணும் நான்.''

''யாருக்கு?''

''எனக்கு தகவல் மையமா இருந்து அப்பப்ப 'வொய்'னு பேர் வச்சிட்டு போன் பண்ணி உதவினதுக்கு.''

''யாரது?''

''வா! ஆச்சர்யப்படுவே.''

இருவரும் அங்கே நுழைய, அமைச்சர் வெள்ளைச்சாமி வரவேற்றார்.

''வெல்டன் கமல். ஜெயிச்சிட்டீங்க.''

''தேங் யூ மிஸ்டர் வொய்!''

''கமல்.''

''அந்த இன்ஃபார்மர் நீங்கதான்னு எனக்குத் தெரியும்.''

''ஏன் சார்! நீங்க ஒரு அமைச்சர் குற்றவாளிகள் சிவதாசனும், மாருதியும் தெரிஞ்சா நேரடியா நடவடிக்கைகள் எடுத்திருக்க முடியாதா?''

''கஷ்டமா... ஆதாரங்கள் அதிகம் இல்லை!''

''அது மட்டுமில்லை அனு. இவரால சிவதாசனை முறைச்சுக்க முடியாது. அவன் கையில் 90 அவனோட அசாகறத்துக்கு இவர் பலியாக நேரும், கட்சி எம்.எல்.ஏ.க்கள் பகைச்சிட்டா ஆட்சி கவுந்துடும். உடையக்கூடாது. நாயும் சாகணும். அதான் தகவல் மையம்.''

''ஸாரி கமல்.''

''பதவி ஆசை யாரை சார் விட்டது?''

''கமல்... மந்திரிகள்ள நல்லவங்களும் இருக்கோம் ஆனா எங்களை நல்ல விதமா செயல்பட விடறதிலலை நாங்க முறைச்சிட்டு வெளியே வந்துட்டா, எங்க கருத்துகள் மக்கள் மன்றத்தை அடைய முடியாம செஞ்சிடுவாங்க. பக்குவமா நான் நடந்ததால் சிவதாசனை ஒழிக்க முடிஞ்சது. மாருதி வேஷம் கலைஞ்சது, எப்படியோ பெருமை கமலுக்குத்தான்!.



''நன்றி சொல்லி விட்டு இருவரும் வீடு திரும்ப முஸ்தபா குடும்பத்துடன் அலெக்ஸ் அங்கே இருந்தான்.

''நாங்க புறப்படறோம்.'' முஸ்தபா கை கூப்பினான்.

''எங்கே? நீங்க போக முடியாது. கொச்சிக்கு நாங்க வந்த முதலே உங்க தங்கச்சி கதீஜாவை நினைச்சிட்டு இருக்கான் அலெக்ஸ். அவனுக்கு அவளைக் கட்டி வச்சிட்டுப் போப்பா!''

''சார்! நாங்க முஸ்லீம், அலெக்ஸ் கிறித்தவர்!''

''ஓ . மதபேதமா சரி நீ முஸ்லீம். என் தங்கச்சி அஜந்தா இந்துப் பெண்தானே? என்னம்மா முஸ்தபாவைக் கட்டிக்கறியா ''

''ச்சீ, போண்ணா.''

''மோசமான மனிதர்களை அம்பலப்படுத்தியாச்சு. மதபேதத்தையும் ஒழிச்சிடுவோம், என்ன உம்மா?''

கமலை நெருங்கிற உம்மா,

''எனக்குப் பூரண சம்மதம் ராசா. ஒரே நேரத்துல என் மகளையும், மகனையும் வாழ வைக்கற உனக்கு நான் எப்படி நன்றிசொல்வேன்.''

கண்ணீரில் குரல் இடற, கலங்கி நின்ற உம்மாவின் கைகளைப் பாசத்துடன் பிடித்துக் கொண்டான் கமல்.

★

# ரோஜாக்களில் பன்னீர் துளிகள்

## 1

''அம்மா! நான் வரேன்!'' என்று அமிர்தா டிபன் பாக்ஸை எடுத்துக் கொண்டாள். ஹாண்ட் பாகில் பேனா, புத்தகங்கள் இருக்கின்றதா என்று பார்த்துக் கொண்டாள். வார இதழ்கள்.

செருப்பு மாட்டப் போனபோது சேலை தடுக்கி கால் வாசல் படியில் இடித்து, கட்டைவிரல் நகத்தில் ரத்த சிகப்பு. வலி உயிர் போயிற்று.

''அம்மா... உஷ்ஷ்... அப்பா'' என்று பிடித்துக் கொண்டு அப்படியே திண்ணையில் அமர்ந்தாள். அதற்குள் அம்மா எண்ணெய் பசையுடனும் சிக்கு தலையுடனும் ஓடிவந்து, ''அச்ச்சசோ,... இடிச்சு கிட்டாயா... கொஞ்ச நேரம் உள்ளே வந்து உட்கார்ந்திருந்துட்டு, தண்ணி ஒரு வாய் குடிச்சிட்டுப் போ!''

''அம்மா ஸ்கூலுக்கு நேரமாச்சு.''

''பரவாயில்லை. உள்ளே வந்து உட்கார்'' என்று இழுத்துப் போய் அமர வைத்தாள். ''வெளியே புறப்படும் போதே சகுனம் சரியில்லை. இந்தா தண்ணி!''



''தண்ணி குடிச்சா வலி ஆறிடுமா... ஏதாச்சும் மருந்து தடவி விடும்மா.''

அம்மா அலமாரியில் ஆயின்மெண்ட் தேடி, கிடைக்காமல் போக, பழுப்பும் கருப்புமான சமையல்கட்டு அலமாரியிலிருந்து வெண்ணெய் எடுத்து வந்து விரலில் தடவிவிட்டாள். அது என்ன மருத்துவமோ தெரியவில்லை. வலி கொஞ்சம் அடங்கின மாதிரி இருந்தது. எரிச்சல் குறைந்திருந்தது. எழுந்து ரசம் போன கண்ணாடி முன்னால் நின்று சேலையை சரிபண்ணிக் கொண்டாள். ஓட்டடைச் சுவற்றில் தொங்கின அப்பாவின் படத்திற்கு மானசீகமாய் ஒரு கும்பிடு.

திரும்ப வெளியே வந்தபோது, ''பார்த்துடி. நிலைபடியில் இடித்துக் கொள்ளாதே. குனிந்து போ!''

''ஐயோ.. அம்மா! எனக்குத் தெரியாதா இன்று நேற்றா இந்த வீட்டில் இருக்கிறோம்.''

''அதுக்கில்லைடி... நெடுநெடுன்னு வளர்ந்திருக்கிறாய்'' அம்ரிதா முறைப்பதை கவனித்து. ''ஸ்கூலுக்கு நேரமாச்சு. கிளம்பு'' என்று நகர்ந்தாள்.

அப்பா போனதோடு அந்த வீட்டின் ஐஸ்வர்யம் போயிற்று. அவர் இருந்தபோது ஐஸ்வர்யம் அங்கே பொங்கிற்று என்றும் சொல்ல முடியாது. ஏதோ சாப்பாட்டு பிரச்னையின்றி ஓடிற்று.

அங்கேயிங்கே கடன் வாங்கி இந்த பழைய வீட்டை வாங்கியிருந்தார். வாங்கியதைவிட மராமத்திற்கு அதிக செலவாயிற்று. மிஞ்சியது அம்மாவின் கழுத்திலிருந்த நகைகள் மட்டுமே.

அதுவும்கூட அப்பா போன பின்பு அவளுக்கு உபயோகம் இல்லை என்பதாலோ என்னவோ

அம்ரிதாவிற்கு டீச்சர் வேலை வாங்கி தரேன் என்று முன்வந்த எம். எல். ஏ. மதிவாணனுக்கு மொய் வைக்க ஆயிற்று

அவள் டிகிரி முடித்து டீச்சர் டிரெயினிங் படித்த படிப்பை விட நகையின் அம்பதாயிரம் ஸ்கூலில் சேர்த்துவிட மிகவும் உதவிற்று.

சம்பளம் அதன் வட்டி அளவிற்கு வருமா என்பது சந்தேகமே. ஆனால் வேலை என்பது ஒரு கௌரம். பாதுகாப்பு. மனதை ஒருமுகப்படுத்தும் சந்தோஷம் தரும் அட்சய பாத்திரம்.

நகை எப்போது வேண்டுமானாலும் வாங்கலாம். வேலை அப்படியா?

ஒன்பது மணிக்கெல்லாம் வெயில் எரித்தது. அம்ரிதா குடை விரித்துக் கொண்டு நடந்தபோது கார் ஒன்று அவளுக்கு அருகாமையில் ஓரங்கட்டி, ஹாரன் அடித்து அழைத்தது. அவள் திரும்பிப் பார்க்க எம். எல். ஏ மதிவாணன்.

''டீச்சர் ஸ்கூலுக்கு தானே'' என்று வெளியே தலையை நீட்டிக் கேட்டான்.

''ஆமாம்.''

''நானும் ஒருவேளையா ஸ்கூலுக்குத்தான் போகிறேன். வாங்களேன் டிராப் பண்ணிடறேன்'' அவனது கண்களில் ஆர்வமும் விஷயமும் பளிச்சிட்டன. ஆகா.. என்ன ஒரு கரிசனம் அந்த உதவிலய அவளால் ஸ்வீகரிக்க முடியவில்லை.

''தாங்க்ஸ் நான் நடந்திடறேன்'' என்று ஆரம்பித்தாள். மதிவாணன் இளைஞன் திருமணமாகாதவன் தான். கவர்ச்சியான முகமும் வசீகர பேச்சும் கொண்டவன். இருந்தாலும் கூட அவன் பேரில் அவளுக்கு ஈடுபாடும் இல்லை. நல்ல அபிப்ராயமும் இல்லை,



அதற்கு காரணம் அவனது அரசியல் பிரவேசமாயிருக்கலாம் நல்லவர்களுக்கு அரசியலில் இடமில்லை. அல்லது நல்லவர்களும் அங்குப் போனதும் திசை திருப்பப்படுகின்றனர். வெளியே இனிப்பு பேச்சு. உள்ளுக்குள் விஷம். வேஷம்.

எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியிலும் அர்த்தம் இருக்கும். ஆதாயம் இருக்கும். சுயநலத்திற்கு வேண்டி பொது நலத்தையும் விலை பேசுவர்.

மதிவாணன் அம்பதாயிரம் வாங்கியது அவனுக்காக இல்லை மந்திரிக்கா என்று அவளுக்கு தெரியாது. அதற்காக அவள் வருத்தப்படவும் இல்லை வாங்கினவனை மட்டும் குறை சொல்வதில் அர்த்தமில்லை. வாங்கியது 'குற்றமென்றால் கொடுத்ததும் குற்றம். பணம் கொடுத்து வேலை பெற்றதும் குற்றம். அதற்காக அவனை அவள் ஒதுக்கவில்லை.

பணம் கொடுத்தோம். வேலை வாங்கி தந்தாய் அத்தோடு போக வேண்டியதுதானே! அத்தோடு நம் பிசினஸ் ஓவர். அதற்கப்புறம் ஏன் தொடர்ந்து கொண்டேயிருக்க வேண்டும்.

வேலை வாங்கிக் கொடுத்துவிட்டு அதற்காக வேறு பலதும் எதிர்பார்த்து பின்னால் சுற்றுவது எந்த விதத்தில் நியாயம்?

அம்ரிதா அவனை வெறுப்பதற்கு அது மட்டுமே காரணம் என்று சொல்லிவிட முடியாது.

சுகேசன்! அவனும் அந்த ஸ்கூலின் வாத்தியார். எப்போதும் கலகலப்பாயிருப்பவன். முப்பது வயது. தங்கைகளை 'கரை சேர்த்து விட்டு இப்போதுதான் தன் எதிர்காலம் பற்றி நினைக்க ஆரம்பித்திருப்பவன்.

அம்ரிதாவின் நினைவு அவன் மேல் ஓடிக் கொண்டிருந்தது. வேலைக்கு சேர்ந்தது முதலே அவன் பேரில் ஒரு ஈடுபாடு தன் தகுதிக்கு ஏற்றவன் அவன் தான் என்கிற கணிப்பு அது அவன்பால் ஈர்த்துக்கொண்டே போயிற்று. அப்போது—

பின்னால் மொஃபட்டின் கரகரப்பு கேட்க, அவளது உடல் சிலிர்த்தது. அவர்தான் சுகேசனை நினைத்தால் உடலில் சிலிர்ப்பு. நடையை தளர்த்தினாள். இதோ வந்துவிட்டார்.

''ஹலோ.. டீச்சர் குட்மார்னிங்''

''குட்மார்னிங்'' என்று பதிலுக்கு மரியாதை தெரிவித்தபோது அவளது முகம் சிவந்து போயிற்று. நாணம், நாணம் கலந்த நெகிழ்ச்சி. மகிழ்ச்சி மகிழ்ச்சி கலந்த மறுமலர்ச்சி.

''ஒன்பதாயிட்டுது போலிருக்கே.. வண்டியில் வர்றீங்களா?''

''இல்லை எட்டே முக்கால்தானாகிறது.''

''நன்றாக பாருங்கள்.. ஒன்பது! பிரேயர் ஆரம்பித்திருப்பார்கள் அப்புறம் ஃபாதர் பெர்னான்டன் கடிப்பார்.''

அவள் இப்போதான் நின்று போயிருந்த தன் வாட்ச்சை கவனித்தாள். சனியன் பிடித்த வாட்ச் நேரம் காலம் தெரியாமல் கழுத்தறுக்கிறது. அதை கழற்றி ஆட்ட, முள் முயல் மாதிரி ஓடிற்று. அடுத்த சம்பளத்தில் இதை மாற்றியாக வேண்டும்.

''வர்றீங்களா''

அவளுக்கும் அவன் பின்னால் அமர்ந்து போக வேண்டும் என்று தானிருந்தது. அதை நினைக்கும்



போதே உடலில் உஷ்ணம் ஏறிற்று. மெல்ல திரும்பிப் பார்க்க—மதிவாணனின் கார் இன்னமும் அங்கு நிற்பது தெரிந்தது.

''வேண்டாம் சார். நீங்க போங்க. நான் பின்னால் வரேன்'' என்று நடக்க ஆரம்பித்தாள்.

ஆசைக்கு அளவில்லை. அது அலையும், தாவும், பறக்கும், படரும். அதை நாம்தான் கட்டுப்படுத்தியாக வேண்டும். இப்போது நேரமாயிற்று என்று பைக்கில் ஏறினால் ஊர் பேசும். ஏசும். பசங்கள் கார்டூன் வரைந்து வைப்பார்கள்.

அப்புறம் பாதிரியாரின் தீக் கண்கள்.

இரண்டு பேருக்குமிடையே உள்ள நெருக்கம் அரசல் புரசலாய் வெளியே தெரியாமலில்லை. அதற்காக எல்லை மீறக் கூடாது. திருமணம் நடக்கட்டும். அப்புறம் மொஃபட்டில் அவருக்கு பின்னால் என்ன—நானே அவரை அமர வைத்து ஓட்டிச் செல்லலாம். அப்போது அது தவறாக பேசப்படாது.

பொறுமை... பொறுமை

அதற்கு ஒரு நேரம் வரும். அதுவரைக் காத்திருப்போம். ஸ்கூலை நெருங்க நெருங்க அவளது படபடப்பு அதிகமாயிற்று பசங்கள் மாதா கோவிலின முன்னால் வரிசைப் பிடித்து ஜெபம் சொல்லிக் கொண்டிருந்தனர்.

## 2

''ஏய்.. விக்டர்! நீ இன்னும் ஸ்கூலுக்குப் போகலியா'' மேரி கேட்டபடி வந்தாள்.

அங்கு யூனிஃபாரத்துடனும் பையுடனும் அமர்ந்திருந்த விக்டர் எனும் ஐந்தாம் கிளாஸ் மகன் ''இல்லை'' என்று மாங்கன்றின் இலையைப் பறித்து எறிந்தான்.

''ஏன்?''

''பிக்னிக் போறதுக்கு காசு கொடுத்தால்தான் போவேன்.''

''நானே சர்க்கரை வாங்க காசில்லைன்னு காபி குடிக்காமக்கூட ஒப்பேததுவேன். உனக்குப் பிக்னிக் ஒரு கேடா?'' அவனது பிடரியில் ஒரு குத்து விழுந்தது.

''இருபத்தைஞ்சு ரூபா இல்லாமல் நான் இங்கிருந்து நகரமாட்டேன்.''

''பாழாப் போறவனே! அதுக்கு அந்த மாங்கன்று என்ன பாவம் பண்ணித்து? அதையேன் பிய்த்தெறிகிறாய்?'' மறுபடியும் ஒரு இடி.

''உங்கப்பா லாரியிலிருந்து இறங்கி வரட்டும் கேட்டுப் பார்க்கறேன்.''

''அவர் வரதுக்குள்ளே பிக்னிக் முடிஞ்சிடும்.''

''பிக்னிக் எப்போ?''

''வர ஞாயிற்றுக்கிழமை. பசங்களெல்லாம் போறாங்க.''



''எங்கே?''

''தாமரைக்குளம். பச்சைமலை! என்ன சொல்கிறாய்? எல்லாரும் போகும்போது நான் மட்டும் என்ன பாவம் பண்ணினேன்.''

''ஆமாம் எல்லாத்தையும் போலதான் நீ இருக்கியா? குசும்பு, கை காலை வெச்சுகிட்டு சும்மா இருக்ககிறதில்லை. மரமேறுவாய் இளநி பறித்து யாருடைய தலையிலாவது போடுவாய். கள் சட்டியை ஒட்டைப் போடுவாய்.''

''இல்லேம்மா. அதெல்லாம் செய்யமாட்டேன். சத்தியம்! நல்ல பையன்னு பேரெடுப்பேன்.''

''சரி.. சரி கிளம்பு! பிரேயர் முடிஞ்சு போச்சுன்னு தோணுது.''

''காசு...''

''முடிந்தா வெச்சிருக்கேன்? நாளைக்கு தரேன்'

விகடர் உடன் குழைவாகி பஸ் ஓட்டிக்கொண்டு ரோடில் இறங்கினான்

அவன் விஷமம் செய்வதில் வல்லவன். எப்போது என்ன செய்வான் என்று சொல்ல முடியாது. நாய்களின் வால்களைக் கட்டிவிட்டு அவைகளைத் தெருவில் விரட்டுவான்.

அம்மா திட்டினால் அவளுக்குத் தெரியாமல் சாம்பாரில் நாலுபிடி உப்பைப் போட்டு, அப்பாவிடம் திட்டு வாங்கி வைப்பான்.

பிரேயர் சமயத்தில் இருமுவான். வாத்தியார் அடிக்க வந்தால் மயங்கி விழுவான் பசங்களைச் சேர்த்துக் கொண்டு வகுப்பிற்குப் போகாமல் காடு மேடு என சுற்றுவான் சீட்டாட்டம், பீடி குளத்தில் இறங்கி கும்மாளம்.

இப்போது அவன் பள்ளியை நோக்கிப் போகவில்லை.

பிரேயர் முடிந்து பசங்களெல்லாம் வகுப்பிற்குப் போய் விட்டனர். இனி போனால் முதுகில் பிரம்பு பழுக்கும்.

அல்லது தோட்டத்து செடிகளுக்கெல்லாம் வெயிலில் களைபறிக்க வேண்டியிருக்கும். தண்ணீர் அடித்துக் கொடுக்க வேண்டியிருக்கும்.

அவன் மாந்தோப்பை நோக்கி திரும்பினபோது "ஏ... விக்டர்!" என ஒரு அதட்டல். இந்த தோப்பு ஸ்கூலுக்குச் சொந்தமானது.

அந்த குரலின் பரிட்சயத்தை உணர்ந்து பயந்து திரும்பினான். அவன் பயந்தது போலவே, அங்கு மாமர நிழலில் சைக்கிளுடன் கணக்கு வாத்தியார் நின்றிருந்தார்.

மரத்திற்கு அந்தப் பக்கம் சேலை ஒன்று காற்றில் அலைவது தெரியவே செய்தது. கணக்கு .. கணக்கு!

ஓகோ . !

வாத்தியார் கணக்கு பண்ணுவதில் புலி! அவர் வகுப்புக்கு வருவதை அபூர்வம். எப்போதும் மாந்தோப்பு, நிர்வாகிக்கு வேண்டியவர் என்பதால் ஜமாய்த்துக் கொண்டிருந்தார்.

"ஸ்கூலுக்குப் போகலியா நீ..."

"போகணும் சார்!" என்று மரத்தின் பின்னால் கொலுசு கால்கள் தெரிகின்றனவா என்று எட்டிப் பார்த்தான்.

"இந்தா இந்தப் பழங்களைப் பாதிரியாரிடம் கொடுத்து விடு. யாரோ வி.ஐ.பி. வராங்களாம்!" என்று பை ஒன்றை நீட்டினார்.

அவனால் அதை மறுக்க முடியவில்லை. அதற்காகவாவது ஸ்கூல் போயாக வேண்டும்.



இனி தைரியமாய் போகலாம். ஏன் லேட்டு என்று கேட்டால் கணக்கு வாத்தியார் மாந்தோப்பு! சமாளிக்கலாம்!...

பையை வாங்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

❀ ❀ ❀

அம்ரிதா ஆபீஸ் ரூமிற்குள் நுழையும்போதே கிளர்க், "டீச்சர், உங்களைப் பாதிரியார் வரச் சொன்னார்" என்று பிஸியில் மூழ்கிப் போனார்.

"ரிஜிஸ்தர்...?"

"அவர் ரூமில் இருக்கு."

இன்று நன்றாக வாங்கிக் கட்டிக்கொள்ளப் போகிறோம் என்று பாதிரியாரின் அறையை நோக்கி நடக்கலானாள்.

பாதிரியார் ரொம்ப கறார். தயவு தாட்சண்யம் பார்க்காமல் தவறுகளைத் தண்டிப்பார். அவருக்கு எப்போதுமே டிசிப்ளின் முக்கியம். பசங்கள் தவறு செய்தாலும் பொறுப்பார். ஆசிரியர்களிடம் தவறு கண்டால் பொறுக்கவே மாட்டார், வெடிப்பார்.

"மே ஐ கமின் ஃபாதர்."

"யெஸ்."

அம்ரிதா அரை மடங்கு கதவை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள். இங்கே மதிவாணன் அமர்ந்து அவளை ஏளனமாய் பார்ப்பது போலிருந்தது.

பாதிரியார் அவன் அமர்ந்திருப்பதாலோ என்னவோ அவளைத் திட்டாமல், "டீச்சர்! இன்று ரத்தப் பரிசோதனைக்கு சுகாதார அதிகாரிகள் வருகிறார்களா."

"யெஸ் ஃபாதர்."

"அவர்களுடன் இருந்து வேண்டிய ஒத்தாசை செய்யுங்கள். பசங்களை வரிசைப்படுத்துங்கள்."

''ஓக்கே ஃபாதர்! ரிஜிஸ்தர்?''

அவர் எடுத்து நீட்ட, ''தாங்யூ'' என்று வாங்கிக் கொண்டு வெளியேறினாள். அதற்குள் அவளுக்கு வியர்த்திருந்தது. தன் வகுப்பிற்குள் அவள் நுழையப் போக—

''ஏய் பசங்களா சத்தம் போடாமல் படிங்க. இதோ வந்துட்டேன்'' என்று சுகேசன் வெளியே வந்தான். ''டீச்சர்! கடி பலமோ?''

''இல்லையில்லை.''

''அப்புறம்?''

''சுகாதார அதிகாரிகள் பசங்களின் ரத்தப் பரிசோதனைக்கு வருகிறார்களாம்.''

''எதுக்கோ...?''

''ஊரில் காலராப் பரவுகிறதே... அதற்காக இருக்கலாம்.''

''அப்போ இன்று பாடம் நடத்த வேண்டிய தில்லை.''

''நடத்தாமல்..?''

''பார்த்துக் கொண்டேயிருக்கலாம்'' என்று கண்ணடித்தான்.

அவள் புன்னகையுடன் தன் வகுப்பிற்குப் போனாள். வருகை பதிவு வகுப்புக்களைப் பிரிக்கும் சுவராக இங்கே தட்டிகள்தான் இருந்தன. அவற்றில் இடையிடை ஓட்டைகள், விரிசல்கள்.

அம்ரிதா போர்டு பக்கம் திரும்பி எழுதப் போனபோது ''ஷ்... ஷ்...'' என அழைப்பு திரும்பிப் பார்க்க தட்டிக்கு அந்த பக்கம் சுகேசன், வா என சைகைக் காட்டினான்.

''ம் கூம்'' —என மறுத்தாள்.

''வா... ஒரு விஷயம்!''



''பசங்கள்! பசங்கள்! பார்க்குதுகள்!''

''பார்த்தால் என்னவாம் .. கமான்!ஒரு ஜோக்''

அவளுக்கும் அவனை மீறிக்கொண்டு போர்டில் எழுத முடியவில்லை.

மெல்லத் தட்டியை நோக்கி நடக்க, அந்த பக்கம் விக்டர், ''சார். ஃபாதர் வரார்'' என்ற இசுகிசுப்பது கேட்டது. உடன் உஷாராகி நகர்ந் தாள்.

சுகேசனுக்கு கடுப்பாயிற்று.

வெராண்டாவில் எட்டிப் பார்த்துப் பாதிரியார் வராமல் போகவே,

''ஏய்... விக்டர் இங்கே வா'' என்று கத்தினான்.

அவன் மிரட்சியுடனும் ஏளனப் பார்வை யுடனும் எழுந்து வர, ''வர... வர உனக்குத் திமிர் ஜாஸ்தியாப் போச்சு! வாத்தியாரிடமே விளை யாடுகிறாயா...?''

சுகேசனின் பிரம்பு அவனது மண்டை, தோள் பட்டை என விளையாட ஆரம்பித்தது.

அவன் அதற்காக அஞ்சவில்லை. அழவில்லை. இது மாதிரி எத்தனைப் பிரம்புகளைப் பார்த் திருப்பேன்.

பள்ளியில் வந்து லவ்ஸ்.

டீச்சரைச் சைட்.

அவருடன் கெஞ்சல். இது தவறில்லை—நான் பொய் சொன்னதுதான் தவறா?

ஏய்... வாத்தி. இரு உன்னைக் கவனித்துக் கொள்கிறேன். உனக்கு வினை வைக்கிறேன். என்று முறைத்தான்.

''என்னடா முறைக்கிறே... போய் உட்கார்.''

அவன் பதில் பேசாமல் அமைதியாய் போய் அமர்ந்தான்.

ஆனால் விக்டரின் மனது அமைதியாயில்லை. உள்ளுக்குள் அவருக்கு எதிராய் சிந்தனை பண்ணிக் கொண்டிருந்தது.

இவரை எந்த வழியிலாவது—எப்படியாவது சிக்கலில் மாட்டி வைக்க வேண்டும்...

## 3

பதினோரு மணிக்கு பள்ளிக்குள் ஜீப் ஒன்றும் ஆம்புலன்ஸ் ஒன்றும் பிரவேசித்தது. ஆம்புலன்ஸின் தலை விளக்கு எரியவில்லை. சைரனும் ஒலிக்க வில்லை, ஊர் அரன்று விடும் என்று நிறுத்தியிருந்த வரே இல்லை பழுதோ தெரியவில்லை

ஜீப் ஆசாமி முதலில் இறங்கி ஃபாதர்பெர்னான் டஸின் அறையைத் தேடினார். அவருடன் கைக்குலுக்கல்!

''எல்லோரும் ரெடியா ஃபாதர்?''

''ஓ .. யெஸ். நீங்கள் டெஸ்டிற்கு ஏற்பாடு பண்ணுங்கள்.''

''வகுப்பு வாரியாய் பசங்களை அனுப்புகிறோம் என்ன சாப்பிடறீங்க?''

''எனிதிங்.''

பியூன் தயாராய் வ்ாங்கி வைத்திருந்த பெப்ஸி பாட்டில்களை நீட்டினான். நீட்டிவிட்டுப் போய் அம்ரிதாவை அழைத்து வந்தான்.

பாதிரியார் அவளிடம் உத்தரவு கொடுக்க—உடன் வகுப்பிற்கு ஓடினாள்.

ஆம்புலன்ஸை பார்த்ததும் பசங்களுக்கு வயிறு கலங்கிற்று. ஒரு விரலையும் இரண்டு விரலையும்



காட்டி நழுவ பார்த்தவர்களை ஆசிரியர்கள் பிடித்து அடைத்து வைத்தனர்.

விஷயம் முன்பே தெரிந்து விட்டால் அவர்கள் பயந்து பள்ளிக் கூடத்திற்கே வரமாட்டார்கள் என்று அதுவரை பால்ரியார் ரத்தப் பரிசோதனை விபரத்தை வெளியே சொல்லாமல் வைத்திருந் தார்.

ஒரு நொடி போதும். விரலில் சின்னதாய் ஊசி முனைகுத்து இதற்குப் போய் பயப்படலாமா? கிராமம் என்றால் அப்படிதான்.

பசங்களாவது போகட்டும் என விட்டு விடலாம். இந்தப் பெரிசுகள் பண்ணுகிற ஆர்ப் பாட்டம் இருக்கிறதே. சொல்லி மாளாது

அரிவாள் கொடுவாள். எடுத்துக் கொண்டு வெட்டுவார்கள். மரம் பிளப்பார்கள். ஆடு மாட்டை அரிவார்கள். ஆனால் ஊசி குத்துவதற்கு இல்லாத ஆர்ப்பாட்டம்!

நல்லதிற்குத்தானே ரத்தப் பரிசோதனை என்று நினைப்பதில்லை கிராமங்களில் சுத்தம் போதாது. கொசு வளர்கிறது. நோய் தொற்று கிறது. சாப்பாட்டிலும் சுத்தமில்லாததால் நோய் கிருமிகள் எளிதாய் வயிற்றில் ஊடுருவி, அப்புறம் காலரா! மலேரியா! வாந்தி பேதி! கடைசியில் ஒப்பாரி!

பாதிரியாரும் சுத்தம் சுகாதாரத்தின் அவசியத் தைப் பற்றி ஊருக்குள் பாடம் நடத்தாத குறை. கேட்டால் தானே, வீட்டுல வேலையிருக்கு என்று ஓடிப் போனவர்களை என்ன செய்ய முடியும்?

வகுப்பிலிருந்து பசங்கள் விளக்கெண்ணெய் குடித்த மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு கியூவில் நின்றிருந்தனர், நழுவி ஓடுவதற்கு சான்ஸ் கிடைக்குமா என்று பார்த்தனர்.

ஆனால் வாத்தியார்கள் கையில் பிரம்புகளுடன் திரியுவே தப்பிக்க முடியும் என்று தோன்றவில்லை.

மாணவர்களுக்கு முன்னுதாரணமாய் இருக்க வேண்டும் என்பதற்காக முதலில் பாதிரியாரும், ஆசிரியர்களும் ரத்தப் பரிசோதனைக்கு உட்பட்டனர்.

பசங்களுக்கு சந்தோஷம் தரவேண்டி அதிகாரி சாக்லேட்கள் வழங்கிக் கொண்டிருந்தார். சமர்த்தாய் காட்டியவர்களுக்கு சாக்லெட்.

விக்டர் பரிதோதனைக்கு அஞ்சவில்லை. பரிசோதித்து, சாக்லெட் பெற்று, அதிகாரி அசந்த நேரத்தில் ஒரு கொத்து அள்ளிக் கொண்டு நழுவினான்.

மேற்கொண்டு சாக்லெட்கள் ஜீப்பின் பின்புறம் இருப்பதாக அவனது மூக்கு தகவல் தர—யாரும் கவனிக்காமல் ஒதுங்கினான். பின்னால் போய் ஏறி பிளாஸ்டிக் பாக்கட்களை விலக்க, ஏமாற்றம்.

அவைகள் சாக்லெட்கள் இல்லை ஏதோ கெமிக்கல் பவுடர்கள். அவனுக்கு வெறுப்பாயிற்று. ஏமாற்றுக்கு மாற்றாக ஏதாவது செய்தாக வேண்டும் என்று கை துறுதுறுத்தது.

அக்கம் பக்கம் பார்த்தான். ஆணி ஒன்று தெரிந்தது. அழைத்தது. எடுத்தான். டயரில் குத்தி மூச்சிழக்க செய்வோமா...?

மெல்ல பதுங்கினான். டயரிடம் போகப் போனபோது அந்தப் பக்கம் 'கணக்கு' வருவது தெரிய—அப்படியே குறுக்கிக்கொண்டு அமர்ந்தான்.

புது பெயிண்ட் கண்களை உறித்திற்று. கையில் ஆணி இருக்கிறது அதை வைத்துக் கொண்டு எப்படி சும்மா இருக்க முடியும்?



முடியவில்லை. ரத்த பரிசோதனை ஒழிக—என எழுதுவோமா...?

சுரண்ட ஆரம்பித்தான். அதற்குள் அதிகாரி ஒருவர் வருவது தெரியவே ஆணியை போட்டு விட்டுஓட முயன்றவனை கணக்கு தாவி பிடித்தார்.

அப்போது—

''என்னை விட்டிருங்க. நான் வரலே.. என்று ஒரு அழுகுரல் கேட்டது அந்த குரலுக்கு சொந்தக்காரி மஞ்சு எனும் சிறுமி, அவள் ஆறாம் கிளாஸ்! வெள்ளை சட்டை பச்சை பாவாடை! இரட்டை சடை!

அவளது கையை அம்ரிதா பிடித்தபடி பரிசோதனை அறைக்கு அழைததுப்போகும் வழியில்தான் இந்த அழுகுரல்.

''ச்சு! சொன்னாக் கேளு.''

''ம்கூம், நான் மாட்டேன், வலிக்கும்.''

''வலிக்காதுடி. கண்மூடு கண் திறப்பதற்குள்...''

''எனக்கு வேணா! ஐயோ... அ.. ம்...மா!''

அம்ரிதா பொறுமையிழந்து அவளுக்கு ரெண்டு கொடுத்து, ''இப்போ ஒழுங்காய் வரப்போறியா இல்லியா நீ...''

''ம்கூம்'' என்று தரையில் விழுந்து மஞ்சு புரள ஆரம்பித்தாள்.

''மஞ்சு! இங்கே பார்... அப்புறம் எப்படி பரிசோதிப்பதாம்? ஊரில் காலரா பரவியிருக்கு. அது உனக்கும் வந்திடும்.

''வந்தால் வரட்டும்.''

''அப்புறம் செத்துப் போவாய்.''

''செத்தால் செத்துட்டுப் போறேன். எனக்கு ஊசி வேணாம்.'' அதற்குள் அதிகாரி தன் கையில் குண்டூசியை மறைத்து வந்து—

''ஊசி வேணாம்னா விட்டிருங்க டீச்சர் இந்தாம்மா சாக்லெட்? வாங்கிட்டுப் போ.'' என்று நீட்டினார். அது தயக்கமாய் நிற்க, சட்டென கையை வாங்கி சாக்லெட்டை கொடுத்து விரல் நுனியில் ஒரு பஞ்ச். கண்ணாடி சில்லில் அதை தேய்த்து எடுத்துக் கொண்டு, ''இவ்ளோதாம்மா. இதுக்குப்போய் இத்தனை ஆர்ப்பாட்டமா. .'' என்று அடுத்த குழந்தையிடம் போனார்.

அவளுக்கும் உடன் தன் தவறு புரிந்திருக்க வேண்டும். இதற்குப்போயா இத்தனை அடி வாங்கினேன். குனிந்து பாவாடையால் மூக்கை துடைத்துக் கொண்டு கியூவில் நின்று பலிப்பு காட்டினவனை ''போடா தெரியும்.'' என்று கையை ஓங்கிவிட்டு நடக்க ஆரம்பித்தாள்.

## 4

விக்டர் அன்று பகலெல்லாம் பசங்களுடன் ஜாலியாய் சுற்றினான். ரத்த பரிசோதனைக்குப் பின் பள்ளிக்கு விடுமுறை விட்டிருந்தார்கள்.

மாலை வீட்டுக்கு வந்தபோது வீட்டின் முகப்பிலேயே அப்பா செரியான் வந்திருப்பது தெரிந்து போயிற்று. அவரது செருப்புக்கள் கிடந்தன. காக்கி யூனிபாரங்கள் கொடியில் காய்ந்தன.

காலையிலேயே வந்திருக்க வேண்டும். அவன் எப்போது லோடிற்கு போவான். எப்போது வருவான் என்று சொல்ல முடியாது. கோபக்காரன் குடிகாரன். ஆனால் வரும்போதெல்லாம் தின்பண்டங்கள் நிறைய வாங்கி வருவான்.

இன்னும் ஏதாவது கிடைக்கும்!



ஆவலுடன் விக்டர் உள்ளே நுழையப் போன போது மேரி பின்பக்கம் பாத்திரம் கழுவிக் கொண்டு வந்தவள், 'ஏய்...'' என்றாள் கிசுகிசுப்புடன்.

''அப்பா வந்திருக்காரம்மா?''

''ஆமாம். கோபமாயிருக்கார்.''

''ஏன்?''

''நீ ஸ்கூலில்...''

அதற்குள் உள்ளேயிருந்து செரியான் ஜன்னல் வழி எட்டிப்பார்த்து.

''விக்டர்!'' என்று கத்தினான்.

''அப்பா...'' என்று அவன் தயக்கத்துடன் உள்ளே போக, ''ஏண்டா... நல்ல பெயரே எடுக்க மாட்டாயா நீ?'' என்று சாராயவாடை வீசிற்று.

''நான் என்னப்பா பண்ணினேன்?''

''பள்ளிக்கூடத்துல ஜீப் டயரை பஞ்சராக்கினாயாமே...''

''ஆக்கலேப்பா!''

''ஆக்கப் பார்த்தாய் அப்புறம் ஒழிகன்னு எழுதினாயா இல்லியா...?'' சொல்லிக் கொண்டிருக்கும் போதே விக்டரின் கன்னத்தில் பளாரென்று அறைந்தார். அது சற்று பலம். உடன் அவன் சுருண்டு விழுந்தான்.

பள்ளிக்கூடத்தில் நடந்தது அதற்குள் இவருக்கு எப்படி. .?

'கணக்கு' சொல்லியிருக்க வேண்டும். அப்பாவுக்கு அவர் நெருக்கம். ரெண்டுமே சாராய கேஸ்,

அப்பாவின் வரவு இப்படி கெட்ட வரவாக இருக்கும் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. தின்பண்ட ஆசையெல்லாம் அந்த நொடியில் ஓடிப் போயிற்று.

மேரி பதறிக் கொண்டு ஓடிவந்து, ''ஐயோ! அவன் அப்படி என்ன தப்பு பண்ணிட்டான்னு...''

''நகருடி! வக்காலத்துக்கு வந்தாய் என்றால் தெரியும் சேதி வீட்டுக்கு வந்தால் நிம்மதி இருக்கா எப்போ வந்தாலும் ஏதாவது புகார் ஒழுங்காய் கண்டிச்சு வளர்க்கிறாயா நீ...?''

அவளைப் பிடித்து ஒதுக்கி விட்டு, லுங்கியை தாறுமாறாய் மடித்துக் கொண்டு செரியான் வெளியேற, மேரி, மகனை அள்ளி மடியில் அரவணைத்துக் கொண்டாள்.

''ஏண்டா இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாய்...?'' அப்பாவோட கோபம்தான் தெரியுமில்லே...?''

அவன் அதற்கு பதில் எதுவும் சொல்லவில்லை. அடி விழுந்தாலும்கூட உள்ளுக்குள் ஒரு சந்தோஷம். தாய்க்கு இப்போது தன் மேல் அனுதாபம் ஏற்பட்டிருக்கிறது.

அனுதாப அலை நாட்டில் மட்டுமில்லை. வீட்டிலும்கூட வெற்றியைத் தேடித் தருவது வழக்கம். ஐயோ மகன் அடிபட்டு விட்டானே... என்கிற அனுதாபத்தில் அம்மா கேட்பதைக் கொடுத்து விடுவாள். இதுதான் தருணம் எடு ஆயுதம்.

எடுத்தான்.

''அம்மா...! பிக்னிக் பத்தி அப்பாகிட்ட கேட்டாயா...?''

''இல்லை. அதுபத்தி நீ கவலைப்படாதே நான் பணம் தரேன்.''

போதும். இதுபோதும். அப்பாவின் கோபம் வெற்றி தேடித் தந்திருக்கிறது.



## 5

ஞாயிறு.

பள்ளியின் அந்த பஸ் தன் முகத்தில் 'ஸ்கூல் பிக்னிக்' என்கிற பேனருடன், ஏசுநாதரின் படத்துடனும், கண்ணாடியில் சாக்பீஸ் சிலுவையுடனும் பச்சை மலை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது

''பசங்களா, யாராச்சும் ஒரு பாட்டு பாடுங்க!''

பாதிரியார் சொல்ல மிரியன் என்கிற ஒருவன் எழுந்து பவ்யத்துடன்,

''அருள் நிறைந்த மரியே வாழ்க...'' என ஆரம்பிக்க, பாதிரியார் சிரித்து ''ஆமாம்டா! ஜெபம் சொல்லச் சொல்லும்போது சினிமா பாட்டு பாடுவீங்க, இங்கே வந்து ஜெபமாம் உட்காருடா.''

உடன் பசங்கள் சுதந்திரம் பெற்ற உணர்வுடன் குதூகலிக்க ஆரம்பித்தனர். அதன்பிறகு லூட்டி தான் பிஸ்கட் மிச்சர் கோதுமை கேசரி மஞ்சு எழுந்து நாட்டிய அபிநயம் பிடித்தாள்.

ஒரு மணி நேரத்தில் பச்சை மலை வந்திருந்தது.

அது தன் பெயரை இழந்து சற்று பொட்டலாக்கிக் கொண்டிருந்தது. தொடர்ந்து மரங்களை காலி பண்ணிக் கொண்டிருந்ததால் அப்புறம் பச்சை எப்படியிருக்குமாம்?

ஆனாலும்கூட பார்க்க ரம்யமாயிருந்தது. அடுக்கடுக்காய் வானத்து நீலத்தைத் தொட்டபடி, தழுவியபடி, ரம்யம் சுற்றிலும் நெல்வயல்கள், கடல்போல ஏரி ஒன்று நீலம் பூசி, அலை அலையாய் நெளிந்து கொண்டிருந்தது. அங்கே முதலை உண்டாம். திமிங்கலம்கூட இருக்கிறதாம்.

பசங்கள் பேசிக்கொண்டு பஸ் விட்டு இறங்கினர். அணி அணியாய் பிரிந்தனர். ஓடினர். தாவினர். பச்சை மலையின் ஒற்றையடி பாதையில் ஏறினர்.

பலாபழம் மாங்காய் பப்பாளி சந்தனமரம் என நினைத்து பட்டை உரித்தனர். மஞ்சு பரதம் ஆடினாள். பாடினாள். எல்லோரையும் கவர்ந்தாள்.

மதியம் ஒரு மணிக்கு சாப்பாடு. தொடர்ந்து உல்லாசம் ஏரியில் குளியல்.

அம்ரிதாவிற்கு அலுப்பாயிந்தது. வாரம் ஒரு நாள் தான் விடுமுறை. அன்று மட்டும்தான் சற்று ஓய்வு கிடைக்கும், துணி துவைக்கலாம். டி.வி. எண்ணெய் ஸ்நானம்.

சலவை. இன்று எல்லாம் போச்.

அலுப்புடன் மர நிழலில் அமர்ந்தாள். கண்கள் சொக்கிற்று.

''பசங்களா! சீக்கிரம் குளிச்சிட்டு வாங்க!''

குத்துகாலிட்டு அமர்ந்தவளை ''அம்ரி!'' என்கிற குரல் உசுப்பிற்று.

சுகேசன்!

அவளைப் பார்த்ததும் அலும்பு ஓடிப் போயிற்று. புத்துணர்ச்சி.

அவன், ''இங்கே வாயேன்!'' என்று பூச்செடிகளில் அருகே அழைத்தான் கண்களால்.

என்னவாம்? என்றாள் சைகையால், அதன் பிறகு சைகை பாஷை.

சும்மா வாயேன்.

எதற்காம்?

சும்மாதான்.

சும்மா யாராச்சும் அழைப்பார்களா?



சரி, சும்மா இல்லை. ஒன்று தருகிறேன் வா!

ஆசை ஆசை அவர்கள் மெய்மறந்து கண்ணில் கவிதை பூண்டு அமர்ந்திருந்தனர்.

அதற்குள் விசில் ஊதப்பட்டது. அவர்களின் காவிய கனவுக்கு தடை.

''டீச்சர் நீங்க வரலே ..?'' சக டீச்சர் அழைக்க சட்டென எழுந்தாள். ஏரி பக்கம் திரும்பி, ''ஏய் பசங்களா எல்லோரும்.''

''ஏற்கனவே பஸ்ஸிற்குப் போயிட்டாங்க''

அவள் சட்டென தன் தவறு உணர்ந்து ''ஸாரி! நான் கவனிக்கலே'' என்று வெட்கப்பட்டாள்.

''எப்படி முடியும்... உங்க கவனம் பசங்கமேல் இருந்தால்தானே...''

இருவரும் பஸ்ஸை நோக்கி நடந்தனர். பஸ்ஸில் பிள்ளைகள் ஈரத் தலையுடன் எட்டிப் பார்த்தன. சட்டை ஜன்னலில் தொங்க விட்டிருந்தன.

பாரதிரியார், சக டீச்சரிடம், ''எல்லோரும் வந்தாச்சா.. ஏரியில் யாரும் இல்லியே. ?'' என்றார்.

''இல்லைங்க ஃபாதர்''

''அப்போ போகலாமா..?''

''போலாம் ரைட்!.. என்று உள்ளுக்குள்ளிருந்து ஒருவன் கத்தி விசிலடித்து விட்டு பாதிரியார் முறைக்கவே, சீட்டின் பின்பக்கம் மறைந்து கொண்டான்.

''எல்லோரும் ஜெபம் சொல்லுங்க.''

''அருள் நிறைந்த..''

ஜெபம் முடிந்ததும் வண்டி புறப்பட்டது. இருட்டை கிழித்துச் கொண்டு சீறிப் பாய்ந்தது. மஞ்சு எனும் அந்த ஆறாம் கிளாஸ் சிறுமி இல்லாமலே.

## 6

கிராமம் முன் தூங்கி முன் எழுவதாயிற்றே!

இரவு ஒன்பதிற்கெல்லாம் பனி புகைச்சலில் அமைதி கரைந்திருந்தது. தெரு விளக்குள் வழக்கம் போல கண் மூடலில்.

மஞ்சுவின் தாய் வாசலில் அமர்ந்து தூங்கித் தூங்கி விழுந்து கொண்டிருந்தாள் உள்ளே ஜீரோவாட்ஸின் ஒளிக்கு பூச்சிகள் கும்மியடித்தன.

மஞ்சுவை இன்னும் காணோமே. எங்கே போனாள்? இன்னுமா பிக்னிக் முடிஞ்சு பஸ் வரலே..? இவ்ளோ நாழி ஆகாதே. !

நேரம் கடக்க, அவளது வயிறு கலங்கிற்று,

எதற்கும் பக்கத்து தெரு பிரியன் வீட்டில் கேட்டு பார்ப்போம். வீட்டைப் பூட்டிவிட்டு நடந்தாள்.

பிரியன் வீட்டில் அவனது தாயி அடி பைப்பில் தண்ணீர் அடித்துக் கொண்டிருந்தாள்.

''அக்கா! பிக்னிக் போன பையன் திரும்பிட் டானா?''

''அப்பவே வந்துட்டானே! ஏன்?''

''மஞ்சு இன்னும் வீடு திரும்பலே.''

''என்ன சொல்றே.. வீட்டுக்கு வராமல் அப்புறம்?''

''எங்கே போயிருப்பாள்.. பஸ்ஸிலேயே தூங்கிட்டாளோ என்னவோ! ஸ்கூலில் போய் பாரேன்!''

அவளது கலக்கம் மேலும் அதிகரிக்கவே செய்தது. வீட்டிற்கு வந்தாள். கணவனை எழுப்பி, ''ஏங்க.. நம்ம மஞ்சு..''

அவன் அதைக் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை, ''ஆளைவிடுடி'' என்று



இழுத்துப் போர்த்திக் கொண்டான். அவளுக்கு அப்படி முடியவில்லை.

ஒரே மகள். அவளது அழகும் வனப்பும் ஊருக் கெல்லாம் ஒரு அதிசயம். ஊக்கண் பட்டுவிடப் போகிறதே என்று எப்போதும் திருஷ்டி சுற்றி போட்டுக் கொண்டேயிருப்பாள். மஞ்சு படிப்பில் மட்டுமில்லை. நடனம், பாட்டு, விளையாட்டு என்று எல்லாவற்றிலும் கெட்டி, அப்படியொரு பெண்ணைப் பெற தவம் செய்திருக்க வேண்டும்.

டார்ச் எடுத்துக் கொண்டு ஸ்கூலை நோக்கி நடந்தாள். வழியில் பன்றிகள் உருமிக் கொண்டு ஓடின. அது மேற்கொண்டும் வயிற்றை கலக்கிற்று.

ஃ ஃ ஃ

பள்ளியின் வாசலிலேயே ஸ்கூல் பஸ் நின்றிருந்தது. அதன்மேல் பனியின் செதில்கள். கண்ணாடியில் நீர் ஒழுகிற்று. மாதாகோவிலின் முன்னால் விளக்கு எரிந்து. அந்த வெளிச்சத்தில் ஈசல்கள் விளையாட்டில்—

எங்கும் நிசப்தம். ஏரிக்கரையிலிருந்து காற்று விசும்பலோடு கேட்டது. நட்சத்திரங்கள் தண்ணீரில் தத்தளித்தன.

பஸ்ஸின் கதவை பிடித்து இழுக்க, திறந்து கொண்டது. டார்ச் அடித்தபடி ''மஞ்சு . மஞ்சு'' என்று அழைத்தபடி சீட் சீட்டாய் துழாவினாள்.

மஞ்சு இங்கே இருந்து விட்டால் பரவாயில் லையே.. இல்லாவிட்டால் எங்கேவென்று போய் தேட முடியும்?

கடைசி சீட்டுவரை தேடினதும் அவளுக்கு ஏமாற்றமாயிருந்தது. கடவுளே.. என்ன இது சோதனை.

கீழே இறங்கினாள். ஒருவேளை டாப்பில் படுத் திருப்பாளோ? பைத்தியகாரத்தனமாய் சந்தேகம்

ஏழ, ஏணியை பிடித்துக் கொண்டு, புடவையைச் சரி பண்ணிக் கொண்டு ஏறினாள். அங்கும் இல்லை.

இறங்கும்போது கை படபடத்தது. பேசாமல் பாதிரியாரிடம் முறையிட வேண்டியதுதான். அவர் தான் என் மகளுக்கு பொறுப்பு! பிக்னிக் கூட்டிப் போகவில்லையென்று யார் அழுதார்களாம்!

## 7

அந்த பங்களா செடி கொடிகளும் டிஷ் ஆன்டெனாவுமாய் பரந்திருந்தது. பணம் படைத்திருந்தது. எதிரே ஷெட்டில் லாரிகளும் வேன்களும் நின்றிருந்தன.

லாரி ஒன்றின் என்ஜினை சரி பண்ணிக் கொண்டிருந்த செரியான், உள்ளே கார் பிரவேசிப்பதை கண்டு வாசலுக்கு வந்தான்.

அதிலிருந்து முதலாளி ஆரோக்யம் வாசமாய் இறங்கி, அவனைப் பார்த்ததும், ''வீட்டுக்குப் போகலியா நீ..?'' என்று வேட்டியை மடக்கிக் கட்டினார். ''மாசம் முழுவதும் லாரியில் வெளியே சுற்றுகிறாய் ரெஸ்டில் இருக்கும் நாளிலாவது பெண்டாட்டி பிள்ளைகளை சந்தோஷமாய் வெச்சிருப்பா.''

''நான் சந்தோஷமாக தானே வச்சிருக்கேன்!''

''ஆமாம். எங்கே. உன் மகனை போட்டு அடிச்சியாமே. உன் பெண்டாட்டி கடை வீதியில் வருத்தத்தோட சொன்னாள் உனக்கு புத்திமதி சொல்லணுமாம்! ஏய். என்னிடம் சொன்னாளேங்கிறதுக்காக அவளை போய் அடிச்சிராதே!''

''ஐயா...''

''என்ன?''

''வேளாங்கன்னி போகணும்னு மேரி ரொம்ப நாளாய்..''

''போயிட்டு வாயேன்! இன்னும் ஒருவாரம் ரெஸ்ட் தானே! பணம் வேணுமா..?



''இல்லை, வண்டி.''

''கார் வேணுமா..?''

''வேன் சும்மா தானே இருக்கு. வெளியே எடுக்கலேன்னாலும் பேட்டரி.. வீக்காயிருமே முதலாளி.''

''அதுவும்கூட ஒரு வகையல சரிதான். சும்மா நின்னால் செலவு வைக்கும். கொண்டு போப்பா. உனக்கில்லாத வண்டியா..? அப்படியே என் வண்டியும் வேளாங்கன்னி போன புண்ணியம் பெறட்டும்! வண்டி பெயர்ல காணிக்கை ஒண்ணு வாங்கிப் போட்டிரு!''

''ரொம்ப நன்றிங்கய்யா'' செரியான் சாவி பெற்றுக்கொண்டு வண்டியில் தொற்றினான். மனைவி மகனுடன் ஒன்றாய் வெளியூர் போய் வருவது எவ்ளோ சந்தோஷம் விக்டர் உன்னை அடிச்சதுக்காக மன்னிச்சிருடா. நாளை வேளாங் கன்னி!

ஃ ஃ ஃ

''நீங்க சொல்றது நிஜமா.. மஞ்சு இன்னுமா வீட்டுக்கு வரலே..?'' பாதிரியார் கேட்டுவிட்டு மஞ்சுவின தாயை பரிதாபத்தோடு பார்த்தார். அவர் அப்போதுதான் பிரேயர் முடித்துவிட்டு படுக்க எத்தனித்துக் கொண்டிருந்தார். ''எங்கே போயிருப்பாள்?''

''எனக்கென்னவோ பயமாயிருக்கு சாமி!''

''பயப்படும்படி ஏதும் நடந்திருக்காது. மாதாவோட கருணை அவளுக்கு எப்போதும் உண்டு. குட்கர்ள்'' என்று சிலுவை வரைந்துக்கொண்டு, ''எதுக்கும் அம்ரிதா டீச்சரை ஒரு வார்த்தை கேட்டுரலாம் வாங்க!'' என்று எழுந்தார்.

அவரது மனத்திற்குள்ளும் கலக்கம் தொற்றிக் கொண்டிருந்தது. அவள் எத்தனை சூட்டிகை! பிக்னிக்கின்போது அவள் ஆடினதும் பாடினதும்

இன்னமும் தெளிவாய் கண்ணில் இருந்தது. அவளுக்கு ஏதாவதொன்று என்றால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

இந்த குடும்பத்திற்கு என்ன பதில் சொல்வேன்? ஸ்கூல் பெயரே கெட்டுவிடுமே!

''சாமி! போலீஸில் சொல்லி வைப்போமா..''

''வேணாம்'' என்று அவசரமாய் மறுத்தார். ''அந்த அளவிற்கு விஷயம் போய்விட்டதாய் நான் நினைக்கலே. டீச்சரை கேட்டுப் பார்ப்போம்.''

அம்ரிதாவின் வீட்டு கதவை தட்ட, அவளது தாய் தூக்க மயக்கத்தில் ''யாரு..?'' என்று முனகியபடியே திறந்து, ''சாமி நீங்களா..!'' என்று அருகில் நிற்கும் மஞ்சுவின் தாயையும் வினோதமாய் பார்த்தாள்.

''அம்ரிதா தூங்கிட்டாளா..''

''கொஞ்சம் இருங்க'' என்று உள்ளே போய், ''ஏய்.. அம்ரி பாதிரியார் வந்திருக்கார்.''

''என்னவாம்?''

''தெரில், நீயே போய் கேளு!''

அவள் தன் உடையைச் சரி பண்ணிக் கொண்டு முடியை ஒதுக்கிக் கொண்டு வெளியே வருவதற்குள் பாதிரியார் முந்திக்கொண்டு, ''அம்ரி! மஞ்சு உன் பாதுகாப்பில் தானே பிக்னிக் வந்தாள்?'' என்றார்.

''ஆமாம். என்ன விஷயம் ஃபாதர்.''

''அவ இன்னும் வீடு வந்து சேரலியாம்'' அதைக் கேட்டதும் அவளுக்கு வியர்த்துப் போவதை கவனித்து, ''பிக்னிக் முடிஞ்சு திரும்பும் போது மஞ்சு பஸ்ஸில் இருந்தாளா...''

''இருந்தாகத்தான் ஞாபகம்..''

''அப்போ சரியா கவனிக்கலேன்னு அர்த்தம்!''

''இல்லைங்க ஃபாதர் கவனிச்சுதான்..''



''ஷட் அப்! பொறுப்பு கிடையாது. எதுக்காக ஒவ்வொரு வாத்தியாருக்கும் பத்து பிள்ளைங் கன்னு பிரிச்சு விட்டேன் பத்து பிள்ளைங்களைக் கூட பார்த்துக்க முடியலேன்னா என்ன அர்த்தமாம்..? இவங்களுக்கு இப்போ என்ன சமாதானம் சொல்லப் போகிறாய்..''

''அது வந்து... மஞ்சு வந்திருவா. எங்கேயும் போயிருக்க மாட்டாள். ஒருவேளை விக்டர், அல்லது பிரியன் வீட்டில்.''

''பிரியன் வீட்டில் இல்லை டீச்சர். சாமி! எனக்கென்னவோ பயமாயிருக்கு. போலீஸில் சொல்லி ''

''அதெல்லாம் எதுவும் வேண்டாம். விடியறதுக்குள்ளே அவளை எப்படியும் தேடி பிடிச்சுக் கொண்டு வந்திடறோம். நீங்க சமாதானமாய் போய் தூங்குங்க!''

பாதிரியார் அவளை அனுப்பிவிட்டு, ''எல்லாம் உன்னால வரது'' என்று அம்ரிதாவை தனியே அழைத்து திட்டினார். ''கொஞ்சம்கூட பொறுப்பு கிடையாது. பிள்ளைகளைப் பத்தி நினைக்க ஏது நேரம் எப்போதும் சுகேசன் ரெண்டு பேரும் அடிக்கிற கூத்தில்...''

''ஃபாதர்.''

''ஷட் அப்! பிடிச்சிருந்தால் பேசாமல் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டியதுதானே. அதை விட்டுட்டு ஏன் எங்கள் கழுத்தை அறுக்க வேண்டும் கோ எப்படியாவது மஞ்சுவைத் தேடி கண்டுபிடித்து அவர்களிடம் ஒப்படைத்தாக வேண்டும்.''

''ஃபாதர்! இந்த இருட்டில் நான் அவளை எங்கே போய் .''

''அந்த புத்தி முன்பே இருந்திருக்கணும்... பஸ் எடுக்கும் முன்பு எல்லோரும் வந்தாச்சான்னு எண்ணி பார்த்திருக்கணும்.''

''நான் பார்த்...''

''அப்புறம் அவள் எங்கேயாம்... வீணாய் என் கோபத்தைக் கிளறாதே''

## 8

மேரி அடி பைப்பில் தண்ணீர் அடித்துக் கொண்டிருந்தாள். விடிந்ததும் விடியாததுமாய் செரியான் வேப்பங் குச்சியை பல்லில் தேய்த்தபடி, ''மேரி வேளாங்கன்னி போகணும்னு நச்சரிச்சாயே முதலாளி வண்டியே கொடுத்துவிட்டிருக்கிறார் பார் நாம் குடும்பத்தோடு... ஜாலியாய் .. இப்போ சந்தோஷம் தானே...''

அவளிடம் எந்தவித சலனமும் இல்லாமல் போகவே ''ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய் . உடம்பு சரியில்லையா?''

''அதெல்லாமில்லை. அடுத்து தெரு மஞ்சு இல்லே, அவளைக் காணோம்.''

''காணோமா?''

''ஆமாம். நேத்து பிக்னிக் போயிட்டு திரும்ப லேன்னு பேசிக்கிறாங்க. பாவம் அவங்கம்மா ராத்திரி முழுக்க தூங்காமல், தேடித் தேடி.. மஞ்சு எத்தனை சமர்த்து தெரியுமா..''

''பிக்னிக் போன இடத்துல போய் பார்த்தாங்களாம்மா வேணுமானால் அவங்கப்பாவை வரச் சொல் வேன் எடுத்துக் கொண்டுபோய் ஒரு பார்த்து வந்து விடலாம்.''

''பார்த்தாச்சாம். காணோமாம்.''

அவன் செம்பில் தண்ணீர் மொண்டு வாய் கொப்பளித்தான் முகம் கழுவி, அவளது முந்தானையில் துடைத்துக் கொண்டு, ''விக்டர் பயல் எங்கே.''



''எதுக்கு?''

''வண்டியெல்லாம் ஒரே புழுதி. கோவிலுக்குப் போறோமில்லே.. கழுவி சுத்தமாய் போக வேணாம்? நீ நாலுகுடம் தண்ணீர் அடித்துக் கொடு.''

''வேணாய்யா இங்கே ஏற்கனவே பைப்ல நூலாட்டம்தான் வருது பேசாமல் ஏரிக்கு போய் கழுவி வந்திடேன் .''

''அதுவும்கூட சரிதான். விக்டரை எழுப்பு'' என்று உள்ளே போய் குறுக்கி கிடந்தவனை எழுப்பி, ''விக்டர், கொஞ்சம் பழைய துணி, பக்கெட் எடுத்துட்டு எங்கூட வா.''

''எதுக்குப்பா?''

''வேளாங்கன்னி போறோமில்லே. வண்டி கழுகணும்.''

''வேளாங்கன்னியா..?'' உடனே அவனுக்கு குஷி பிறந்தது. ஸ்கூல் தவிர வேறு எங்குபோகணும் என்றாலும் அவனுக்கு குஷிதான் என்னதான் அடித்தாலும், கண்டித்தாலும் விகடருககு செரியன் மேல் ஒரு மரியாதை இருக்கவே செய்தது அப்பாவுடன் வெளியே போவதே ஒரு சந்தோஷம்.

வண்டியில் ஏரி அமர்ந்து ஹாரன் அடித்தான்.

வண்டி ஊரைத் தாண்டினதும், ''அப்பா எனக்கும் ஓட்டுவதற்கு கத்து தருகிறாயா .'' என்றான்.

''இன்னும் நாலு வருஷம் போகட்டும்.''

''இது முதலாளியோட வண்டியாப்பா.''

''ஆமாம்.''

''நாமும் இதுமாதிரி ஒண்ணு வாங்கலாமே.''

அவன் சிரித்து, ''அதுக்கு பணம் வேணாமா.. நீ இறங்கு ஏரி வந்திருச்சு. நான் ரிவர்ஸ் எடுக்கிறேன்.

சகதியில் மாட்டாமல் நிறுத்தணும். பின்னாடி பார்." என்று வண்டியை ரிவர்ஸ் எடுக்க ஆரம்பித்தான்.

விக்டர், "ரைட்., ரைட்! வர்லாம்ப்பா.. வர்லாம்ப்பா" என்று விசிலடிக்காத குறையாய் சொல்லிக்கொண்டு வந்தவன், "அப்பா" என்று அலறினான்.

"என்னடா..." வண்டி சடர்ன் பிரேக் அடித்து நின்றது.

"அப்பா.. இந்த துணியை பாருங்க."

"அதுக்கென்ன.." என்று இறங்கி வந்தான்.

"இது மஞ்சுவோடது!"

"மஞ்சுவோடதா, இது எப்படி இங்கே."

"அதான் எனக்கும் தெரியலே." என்று தூரப் பார்வையைச் செலுத்தி, சற்று தள்ளி காக்கைகள் இரைச்சலுடன் அமர்ந்திருப்பதையும் அங்கிருந்து துர்நாற்றம் வருவதையும் உணர்ந்து மிரண்டான். தண்ணீரை ஒட்டினாற்போல அது என்ன?

"விக்டர் அது என்னன்னு போய் பார்."

அவன் கல்லெடுத்து காக்கைகளை விரட்டி விட்டு அருகில் ஓடி மூக்கைப் பிடித்துக்கொண்டு உற்றுப் பார்த்து,

"அப்பா!" என்று அலறினான்.

"என்னடா?"

"இது மஞ்சு."

"உளறாதே!"

"உளறலேப்பா நிஜம். வந்து பாருங்க!"

செரியான் நம்பிக்கையில்லாமல் நடந்தான். அங்கே விக்டர் சொன்ன மாதிரி, மஞ்சுவின் முகம்



போல்தான் கிடந்தது. ஆனால் உடலெல்லாம் சொதசொதப்பு பிய்ந்து, குதறிக் கிடந்தது.

"ஐயோ, எப்படிடா இது!"

"தெரியலப்பா. இந்த ஏரியில முதலை இருக்கிறதாய் சொல்வாங்களே. ஒருவேளை நேத்து குளிக்கும்போது முதலை." சொல்லும்போதே அவனுக்கு நடுங்கிற்று.

"மஞ்சு," என்று அலறிக் கொண்டு அவன் வேனை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

## 9

அடுத்த நான்கு நாட்களில் ஊரின் நிம்மதி போயிருந்தது. பிக்னிக் கூட்டிப் போய் குழந்தையைப் பலி கொடுத்து விட்டார்கள் என பள்ளிக் கூடத்தின் மேல் பெற்றோர்களுக்குக் கோபம். ஆவேசம். பாதிரியாரை ஏச ஆரம்பித்து, கல்லெறிந்து, இனி எங்கள் பிள்ளைகளுக்கும் இங்கே என்ன பாதுகாப்பு— எந்த நம்பிக்கையில் அனுப்புவது என திட்டித் தீர்த்து அமளி அடங்கட்டும் பிறகு திறந்து கொள்ளலாம் என்று பள்ளிக் கூடத்துக்கு மூடுவிழா!

பசங்களுக்கு அதை சந்தோஷமாய் அனுபவிக்க முடியவில்லை. மற்ற விடுமுறை என்றால் ஜாலியாயிருக்கும். இப்போது மஞ்சுவின் இழப்பும், அவளது குதறின உடலும் அவர்களை சோகமாக்கியிருந்தன. அம்ரிதா வீட்டை விட்டு வெளியே வரவில்லை. சாப்பிடக்கூட பிடிக்காமல் படுக்கையிலேயே கிடந்தாள். மஞ்சுவின் இழப்பிற்கு யாரையாவது காரணம் காட்டி, நடவடிக்கை எடுத்தால்தான்

ணர் அடங்கும் என்கிற நிலமையில் அவள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருந்தாள்.

அவளது கவனக் குறைவுதான் காரணம் என நிர்வாகம் அவள் மேல் பழி போட்டு தப்பித்துக் கொண்டிருந்தது. அவள் மறுப்பு எதுவும் சொல்ல வில்லை. ஒரு வகையில் நான் தானே காரணம் என்று சும்மா இருந்தாள். எல்லாவற்றிற்கும் காரணம் எனது மனது! அதன் பலகீனம்! காதல்! சுகேசன் சார் மேல் புத்தியை சிதற விட்டதால் தான் இந்த கவனக் குறைவு ஏற்பட்டது.

பாதிரியார் சொன்ன மாதிரி இரண்டு பேர்க்கும் பிடித்திருக்கும் பட்சத்தில் பேசாமல் திருமணம் செய்து கொண்டிருக்கலாம். திருமணம் ஆயிற்று என்றால் கொஞ்சல்—குலவல் எல்லாவற்றையும் வீட்டிலேயே முடித்து விடலாம். அதை விட்டு விட்டு இப்படி பொது இடங்களில் மயங்க வேண்டியதில்லை. தள்ளியிருப்பதால் ஒரு திரில், கிறக்கம் கவர்ச்சி அதிகமாகிறது. ஒருவரின்மேல் ஒருவருக்கு ஈர்ப்பும் அதிகம். அதனால் புத்தி பிசகு கிறது. வேலையில் கவனம் குறைகிறது. எல்லாம் என் தவறுதான். மஞ்சு ஒரு அற்புதம். அவள் மாதிரி எல்லா திறமைகளும் பெற்ற ஒருத்தியைப் பலி கொடுத்தது மகாபாவம். அவர்களின் குடும்பத்திற்கு நான் என்ன பரிகாரம் செய்யப்போகிறேன்?

அன்று மஞ்சு ரத்த பரிசோதனைக்காக அழுத குரல் இன்னமும் நெஞ்சில் ரீங்கரித்தது.

அம்மா, ''அம்ரி! அந்த பொண்ணுக்கு ஆயுசு முடிஞ்சு போச்சுன்னா அதுக்கு நீ என்ன பண்ணுவாயாம். நீ எப்படி பொறுப்பு?'' என்று சமாதானம் பண்ணிப் பார்த்தாள் அவள் கேட்கவில்லை.



''நம் குழந்தை என்றால் இப்படி சொல்லி சமாளிப்போமா, என் தவறுதான்!''

''உன் தலையில் விடியணும்னு இருந்திருக்கு! பிக்னிக் அழைத்துப் போனது நீயா? பாதிரியார்! அவரும் தானே அன்று பஸ்ஸில் வந்தார் அவருக்குப் பொறுப்பில்லையா? ஏன அவரே பஸ் எடுக்கும் முன்பு எண்ணி பார்த்திருக்கக் கூடாது? அது தான் போகட்டும். அந்த ஏரியில் முதலை இருக்கும்னு தெரிந்திருந்தும் அங்கே பிள்ளைகளை குளிப்பதற்கு ஏன் அனுமதித்தார்''

''அம்மா! அன்று பகல் முழுவதும் சுற்றினதில் எல்லோரும் வியர்த்து, அலுப்பில் இருந்தனர். சரி குளிச்சிட்டு ப்ரெஷ்ஷாய் போகலாமேன்னு.''

''அப்போ அந்த பொறுப்பு யாருக்கு நல்லது என்றால் எல்லாரும் பங்கு போட்டுக் கொள்வார்கள். குற்றத்தை மட்டும் இளித்தவாய் யார் தலையிலாவது கட்டுவார்கள்.''

''அது இயல்புதானேம்மா.''

''அதற்கு நம் குடும்பம் தான் கிடைத்ததா?''

அப்போது சுகேசன் அம்ரிதாவை பார்க்க வரவே அம்மா தன் தர்க்கத்தை நிறுத்திக்கொண்டு உள்ளே போனாள்.

''அம்ரி ஐ ஆம் ஸாரி''

''எதுக்கு?''

''நான்தானே எல்லாத்துக்கும் காரணம்.. நான் தானே அன்று உன் கவனத்தைத் திருப்பினேன். அன்னால்தான் மஞ்சு இறந்தாள். உனக்கும் சஸ்பென்ஷன்.''

''பரவாயில்லை. ஒன்று நடக்க வேண்டும் என்றிருந்தால் அதை யாரால் தடுக்க முடியும் தயவு செய்து நீங்கள் தப்பாக எடுத்துக் கொள்ள வில்லையென்றால் ஒன்று சொல்லவா.''

''சொல்''

''ஊரெல்லாம் இப்போது என்மேல் கோபமாயிருக்கிறது. சபிக்கிறது இந்த சமயத்தில் நீங்கள் என்னை பார்க்க வந்தால் உங்களையும் சேர்த்து சபிக்கும். அன்று பிக்னிக்கும் அன்று பிக்னிக்கில் குலாவினது பத்தாதா. இங்கேயும் வந்துவிட்டாரா என்று கூசாமல் ஏசும். தயவு செய்து இன்னும் கொஞ்ச நாட்களுக்கு நாம் சந்திக்காமல் இருப்பதுதான் நல்லது. என்னால் உங்களுக்கும கெட்ட பெயர் வரவேண்டாம்''

''அம்ரி, உனக்கு ஒரு துன்பம் எனும்போது.''

''மன்னிக்கனும். நீங்கள் போகலாம்'' அம்ரி சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டாள்.

சுகேசன் கிளம்பிப் போன கொஞ்ச நேரத்தில் மதிவாணன் அம்ரிதாவைப் பார்க்க வந்தான். அவளுக்கு அவனைப் பார்க்கவே விருப்பமில்லை. இருந்தாலும் கூட எம்.எல்.ஏ. ஆயிற்றே வீட்டுக்கு வந்தவனை எப்படி விரட்ட முடியும்? அவனை ஏறெடுக்க பிரியப்படாமல் வந்து நின்றாள்.

''அம்ரி! எல்லாம் கேள்விப்பட்டேன். ஒரு வாரமாய் நான் ஊரிலில்லை. முதலமைச்சரோடு ஒரு மீட்டிங்கிற்கு போயிருந்தேன். ஏதோ ஒரு குழந்தையை முதலை குதறி, கொன்று போட்டுவிட்டால் அதற்கு நீ என்ன பண்ணுவாயாம்! இதற்கு இத்தனை பெரிய தண்டனையா? நான் பாதிரியாரிடம் பேசுகிறேன்.''

''வேண்டாம்.''

''ஏன்?''

''தப்பு செய்ததற்கு தண்டனை அனுபவிப்பது தானே நியதி.''

''என்ன பெரிய நியதி? இந்த வேலையைப் பெற வேண்டி நீ எத்தனை கஷ்டப்பட்டிருப்பாய்?



எத்தனை செலவு செய்திருப்பாய்? நான் எவ்ளோ அலைந்திருப்பேன். நான் வாங்கிக் கொடுத்த வேலையாயிற்றே. அதை இப்படி இழக்கவிடலாமா நானே பேசி மறுபடியும் வாங்கித் தருகிறேன்.''

''இன்னொரு அம்பது தருவதற்கு எங்களுக்கு வசதியில்லை.''

''சே, என்ன இப்படி பேசுகிறாய்? பணத்திற்காகவா நான் உதவ முன்வருகிறேன். எல்லாம் உன் மேல் உள்ள பாசம்தான், மறுக்காதே.''

''அதிக பாசம் ஆபத்து மன்னிக்கணும். எல்லோருடைய பாசத்தையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவிற்கு என் மனதில் இடமில்லை'' அம்ரிதா முகத்திலடிக்கிற மாதிரி சொல்லிவிட்டு நகர, அவனது முகத்தில் ஈயாடவில்லை.

உனக்கு இத்தனை நெஞ்சழுத்தமா. உனக்கு இந்த சஸ்பென்ஷன் போதாது. டிஸ்மிஸே பண்ண வைக்கணும் என்று கறுவிக் கொண்டு வெளியேறினான்.

## 10

ஒருவார விடுமுறையிலேயே பெற்றோர்களுக்கு வெறுத்துப் போய்விட்டது. எப்போடா ஸ்கூலை திறப்பார்கள் என்றாயிற்று. அந்த அளவிற்கு பசங்களின் கலாட்டாக்களைத் தாங்க முடியவில்லை.

அன்று விக்டரின் வீட்டிற்கு ப்ரியன் வ்ந்தான்.

விக்டரை தனியாக சமாளிப்பதே பெரிது. இவனே வானரம். இதில் கூட்டணி வேறு சேர்ந்துவிட்டால் கேட்க வேண்டுமா? டேப் போட்டு ஆடினர். பாடினர்.

இருவரும் வீட்டிற்குள் அமர்ந்து காரம் விளையாடுறோம் என்று சப்தம் எழுப்பினர். மேரிக்கு அந்த பக்கமும் இந்த பக்கமும் போகமுடியவில்லை வீட்டை மெழுக முடியவில்லை.

''விக்டர்! வெளியே போய் விளையாடுங்களேண்டா.''

''நீதான் வெளியே போனால் சத்தம் போடுகிறாயே''

''அதுக்காக வீட்டிற்குள்ளேயே அடைஞ்சு கிடக்கணுமா? லொட்டு லொட்டுன்னு தலைவலி, போதும போதாதற்கு டேப் வேறு. கொஞ்சநேரம் வெளியே போய் விளையாடக் கூடாதா''

''ஆகா. இதோ இப்போ கிளம்பிட்டோம். அப்புறம் அப்பா கேட்டால் உன்னைத்தான் சொல்வேன். ப்ரியா, வாடா'' என்று விக்டர் அவனை அழைத்துக்கொண்டு வெளியே ஓடினான்.

தெருவில் கிட்டிபுல் அடித்தவர்களையும் சேர்த்துக்கொண்டு வயல்களில் இறங்கினான். குளத்தில் அவர்கள் மீன் பிடித்தனர். நீச்சல், நாவல் மரம் ஏறினர். ஏரிக்கரையில் கூடையில் பலகாரம் விற்ற மூதாட்டியிடம் ஏமாற்றி வாங்கி சாப்பிட்டனர். கபடி, மாலைவரை ஊர் சுற்றினர் இருட்டினதும் தான் விக்டருக்குப் பசித்தது. அப்பாவிடம் பயம் வந்தது.

''ப்ரியா, நான் போறேன்'' என்று விடைபெற்று வீடு திரும்பினான். ஆனால் அந்த ப்ரியன் அன்று வீடு திரும்பவில்லை.

ஃ ஃ ஃ

மறுநாள் அவனது உடல் உள்ளூர் ஏரிக்கரையில் அன்று மஞ்சுவின் உடல் குதறப்பட்டு கிடந்தது போல ப்ரியனின் கீழ்பாதி உடலும் சொத சொதப்புடன்.

ஃ ஃ ஃ



ஏரிக்கரையில் காலை ஆறுமணிக்கெல்லாம் ஊர் சோககீதத்தில். அழுக்குச் சேலையும், எண்ணெய் தலையுமாய் குளிக்க வந்த பெண்கள் அங்கங்கே அப்படியப்படியே ஸ்தம்பித்து நின்றிருந்தனர்.

''இதுவும் முதலையுடைய வேலைதானா?''

''தெரியலை.''

''பச்சை மலை ஏரியில்தான் முதலை இருக்குதுன்னு கேள்வி. இங்குமா?''

''யாருக்குத் தெரியும். உடல் நனைக்க ஊரில் இது ஒண்ணுதான் இருந்தது. இனி எங்கே போக முடியும்.''

ப்ரியனின் அந்த கோர முடிவு ஊருக்கே அதிர்ச்சியளித்திருந்தது. இனி இதே மாதிரி போனால் பிள்ளைகளை வெளியே அனுப்பவே முடியாது போலிருக்கிறதே! வெளியே அனுப்பாமல் வீட்டில் கட்டி போட்டா வைத்திருக்க முடியும். ஊருக்கு ஏதோ சாபம்! சாமி குத்தம்.

இல்லாவிட்டால் ஏன் மலேரியாவும் காலராவும் வருகிறது.. இந்தமாதிரி பசங்களைக் கொண்டு போகிறது? அது எப்படியாயினும் சரி, இனி யாரையும் பலி கொடுப்பதற்கில்லை. எப்படியும் தடுத்து நிறுத்தியேயாக வேண்டும். ஊர் பெரிசுகள் ஒன்று கூடி மாரியம்மனுக்குத் திருவிழா எடுக்க தீர்மானித்தன. மறுபடியும் பள்ளிக்கு மூடுவிழா.

அம்ரிதாவிற்கு ப்ரியனின் மரணத்தையும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவளால் அவனது உடலை ஏறிட முடியும் என்று தோன்றாததால் வீட்டிலேயே விம்மிக்கொண்டிருந்தாள்.

அம்மா, ''இதுக்கு என்னடி சொல்றே?'' என்றாள்.

''எதுக்கும்மா?''

''மஞ்சுவோட மரணத்துக்கு காரணம் காட்டி உன்னை சஸ்பெண்ட் செஞ்சாங்களே.. இதுக்கு யார் பொறுப்பாம். இதுக்கு யாரைத் தண்டிக்கப் போறாங்களாம். என்னடி பேசாமல் உட்கார்ந்திருக்கிறாய்? அன்று அமளி பண்ணினவங்களை இன்று எங்கே காணோம்?''

''அம்மா! ஏன் கத்தறே?''

''அப்புறம் வேறு என்னடி செய்ய முடியும். அந்த M.L.A.வுக்கு அம்பதாயிரம் அழுது.. வாங்கின வேலை! அவர் வலிய உதவ முன்வந்தாலும் வேண்டாம் என்கிறாய்.''

''அம்மா.. இது இயற்கை மரணமில்லை.''

''அப்புறம்''

''கொலை!''

''என்ன சொல்கிறாய்?''

''ஆமாம். யாரோ எதற்காகவோ விளையாடுகிறார்கள்.''

''ஏன்.. எதற்காக?''

''தெரியவில்லை. இல்லாவிட்டால் சிறுவர்களை ஏன்? முதலை சிறுவர்களை மட்டும்தான் பிடிக்குமா?''

அம்ரிதாவின் சந்தேகம், அவளது தாய் மூலம் ஊர் முழுக்க பரவ ஆரம்பித்தது. உள்ளூர் ஏரியில் முதலை இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். அதனால் ப்ரியனை முதலை கான் அடித்தது என்று எவரும் நம்பத் தயாராக இல்லை.

விஷயம் M.L.A மதிவாணன் காதுக்கு எட்ட, உடன் அவன் ஒரு போராட்டத்திற்கு தயாரானான். ஊர்வலம்! போராட்டத்திற்கும் ஊர்வலத்திற்கும் எங்கே தருணம் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தவனுக்கு அருமையான வாய்ப்பு.



ஊரைத் திரட்டி ஊர்வலம் விட கிளம்பினான். பள்ளிக்கூட பசங்களையும் மிட்டாய் கொடுத்து படை திரட்டினான்.

''கண்டுபிடி... கண்டுபிடி... கொலைகாரனைக் கண்டுபிடி.''

''விடாதே.. விடாதே.. முதலையை விடாதே!''

மதிவாணனின் தலைமையில் ஊர்வலம் ஊர் தெருக்களில் எதிரொலித்தது. பக்கத்து டவுனிலிருந்த போலீஸ் ஸ்டேஷனில் ஐக்யமாயிற்று.

மதிவாணன் கூட்டத்தை வெளியே அமரச் செய்துவிட்டு, சப்-இன்ஸ்பெக்டருடன் உள்ளே போய் பேசிவிட்டு வந்தான்.

''வாருங்கள் போவோம்! எஸ் ஐ உடன் நடவடிக்கை எடுக்கிறேன் என்றிருக்கிறார்.'' வந்த வழியிலேயே கூட்டத்தை மடக்கி அனுப்பிவிட்டு, ''எனக்கு மெட்ராஸில் அவசர வேலையிருக்கிறது'' என்று சொல்லி காணாமல் போனான்.

பாதிரியார், ஸ்கூலை திறப்பதற்கான முயற்சிகளில் [ஈடுபட்டிருந்தார். பசங்களை இப்படியே விட்டால் அவர்களுடைய படிப்பும் கெடும். பள்ளி பெயரும் கெடும். அது மட்டுமின்றி அவர்கள் வெளியே திரிந்து கொண்டிருப்பது அத்தனை பாதுகாப்பும் இல்லை. அடுத்து எந்த குழந்தை எப்போது பலியாகும் என தெரியாது.

போலீஸ்கள் அவ்வப்போது திடீர் விஜயம் செய்தனர். ப்ரியன் வீட்டினரையும், மஞ்சு வீட்டினரையும் விசாரிக்கிற மாதிரி விசாரித்துவிட்டு,

பள்ளிக்கூடம், பாதிரியார், அம்ரிதா என விசாரித்து, கடைசியில்—

''கொலைக்கு நோக்கமும் இல்லை. மஞ்சுவை யும், ப்ரியனையும் முதலை தான் அடித்திருக்க வேண்டும் என்று அவர்களே தீர்ப்பு வழங்கி, ''இனி பிள்ளைகளை ஏரிக்கு குளிக்க அனுப்பாதீர்கள்'' என்று உத்ரவிட்டு தங்கள் தொழில் தர்மத்தைச் செய்து விடபெற்றனர்.

ஆனால் ஊரின் பயம் அடங்கவில்லை.

சுகேசனும் அம்ரிதாவும் விஷயத்தை அப்படியே விட்டுவிட விரும்பவில்லை. வீடு வீடாய் போய் பேசினர். ''இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. யாரோ எதற்காகவோ பசங்களை பலி போடு கிறார்கள். விட்டால் இன்னமும் போடுவார்கள்.''

''எதற்காக பலி?''

''தெரியவில்லை கண்டுபிடிக்கணும்.''

''யார் செஞ்சிருப்பாங்க?''

''இனி எச்சரிக்கையாய் இருங்கள். சந்தேகப் படும்படி ஊருக்குள் யார் வந்தாலும் உடனே பிடித்து பஞ்சாயத்தில் நிறுத்த வேண்டும். பசங் களும், முகம் தெரியாத யார் அழைத்தாலும் அவர் களுடன் வெளியே போய் விடக்கூடாது.'' ஜனங் களை எச்சரித்துவிட்டு, சுகேசன், ''அம்ரி! எனக் கென்னவோ இந்த நடவடிக்கைகள் பைத்தியக்கார தனமாகப் படுகிறது'' என்றான்.

''ஏன்?''

''இதனால் என்ன பிரயோஜனம்! நீ நம்புகிற படி இவைகள் கொலைதான் என்றால் ஜனங்கள் எச்சரிக்கையாகிறார்களோ இல்லையோ கொலை காரன் எச்சரிக்கையாகி விடுவான். இந்த மார்க்கம் சரியில்லை.''



''அப்புறம்? போலீஸ"ம்தான ஆர்வம் காட்ட வில்லையே வேறு வழி? பேசாமல் சி.பி.ஐக்கு மனு போடுவோமா?''

''அதெல்லாம் அத்தனை எளிது என்று தோன்றவில்லை. இந்த மாதிரி சாதாரண கேஸிற் கெல்லாம் அவர்கள் வருவது சாத்யமில்லை.''

''அப்புறம், வேறு என்னதான் வழி?''

சுகேசன் யோசித்துவிட்டு, ''எனது நண்பர் ஒருவருக்கு டி.எஸ்.பி. ஒருவரைத் தெரியும். அவரிடம் பேசிப் பார்க்கிறனே!''

''அவர் நம் டிவிஷனா?''

''ஆமாம்.''

''உள்ளூர் போலீஸ்காரர்களை மீறிக்கொண்டு அவர் செயல்பட முடியுமா?''

''டி எஸ் பியாச்சே! அவரே நேராகவும் கேஸில் இன்ட்ரஸ்ட் காட்டலாம்.''

''அப்போ உடனே அவரை போய் பாருங்க!''

''அதற்கு முன்பு பாதிரியாரிடமும் ஒரு வார்த்தை கேட்டு விடலாம். அவர் இதற்கு எந்த அளவிற்கு ஒத்துழைப்பார் என்று தெரியவில்லை.'

''ஏன், அதில் என்ன சந்தேகம்?''

''போலீஸ்—விசாரணை என்று வரும்போது ஸ்கூல் பெயர் கெடும் என யோசிக்கலாம். எதற்கு வம்பென்று நழுவலாம்.''

ஆனால் பாதிரியார், அவன் பயந்த மாதிரி எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ''ஊரின் நன்மைக்காக வும், ஸ்கூலின் நன்மைக்காகவும் கட்டாயம் உண்மையைக் கண்டுபிடித்தேயாக வேண்டும். உள்ளூர் போலீஸ்களை நம்பி பிரயோஜனமில்லை,

எனது ஒத்துழைப்பு உங்களுக்கு முழுதாய் உண்டு. கேரி ஆன்''

பாதிரியார் ஆசீவதிக்க, சுகேசன் டவுனிற்குக் கிளம்பினான் நண்பரின் துணையுடன் டி.எஸ்.பி. கருணாவை சந்தித்தான்.

## 11

பத்து நாட்களிலேயே பசங்களுக்கு போரடிக்க ஆரம்பித்தது. ஸ்கூல் திறந்திருந்தால்கூட கட்டுப் பாடு கட்டுப்பாடு. எங்கும் வெளியே சுற்ற முடிய வில்லை. வீடு உண்டு, ஸ்கூ : உண்டு என இருப்பதில் விக்டருக்கு கடுப்படித்தது வெளியே போனால் பிள்ளை பிடிப்பவன் பிடித்துப் போய் விடுவான் என மிரட்டி வைத்திருக்கின்றனர். என்னடா வாழ்க்கை இது!

சுதந்திரமில்லை, ஏரியில் போய் குளிக்க முடிய வில்லை. வயல்களில் திரிய முடியவில்லை. மரமேறி னால் குற்றம். சினிமா போகக கூடாது பிள்ளை பிடிப்பவளாம் பெரிய பிள்ளை பிடிப்பவள் அவளை என்னிடம் வரச் சொல்லுங்கள். பல்லை பெயர்க் கிறேன்.

அப்பா, பெரிதாய் வேளாங்கன்னி கூட்டிப் போறேன் என்று ஆசைக் காட்டினார். கடைசியில் மஞ்சுவால் அதுவும் போயிற்று. அதன் பிறகு ஒட்டத்திற்கு போய் விட்டார் அவனுக்கு வெறுப் பாய் வந்தது ஏதாவது செய்தாக வேண்டும். எங்காவது போய் சுற்றியாகணும்.

அன்று இரவு—புத்தகத்தை வைத்து விட்டு யோசனையில் இருந்தபோது மேரி, ''விக்டர். விக்டர்.. என்று சமையல் கட்டிலிருந்து அழைத் தாள்.



''என்னம்மா?''

''தலைவலி உயிர் போகிறது. கடைக்கு போய் மாத்திரை வாங்கி வருகிறாயா..''

''சரிம்மா..'' என்று காசு வாங்கிக் கொண்டு கிளம்பினான். வெளியே இருட்டாயிருந்தது., கடைக்கு ஓடி மாத்திரையும், தனக்கு கூலியாக சாக்லேட்டும் வாங்கிக் கொண்டான்.

திரும்பி நடக்கும்போது, ''தம்பி.. தம்பி'' என்று ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

வேப்பமரத்தடியில் பெண் ஒருந்தி. நாற்பது—நாற்பத்தியைந்து வயதிருக்கும். ''தம்பி இங்கே கொஞ்சம் வரியா'' என்று சைகை காட்டினாள்.

''என்ன?''

''இங்கே வாயேன்'' என அவள் அழைக்க அவனுக்கு நடுக்கம் எடுத்தது.

யோசனையுடன் அருகில் போன விக்டருக்கு அந்த பெண்ணின் முகத்தையும் தோற்றத்தையும் பார்க்க அத்தனை யோக்யமாய் தெரியவில்லை. இந்த முகத்தை இதற்கு முன்பும் எங்கோ பார்த்த மாதிரி இருந்தது. எங்கே.. எங்கே என்று ஏரிக்கரை யில . பலகாரம் விற்ற அதே முகம்!

ஆமாம், அப்படிதான் இருக்கவேண்டும். அன்று அப்பாவிற்கு பயந்து கொண்டு வீடு திரும்ப போன ஏரிக்கரை அருகில் இவள் மிட்டாய் விற்றுக் கொண்டிருந்தாள். அதன் பின்புதான் ப்ரியனுக்கு அந்த நிலைமை!

முகம் தெரியாத யார் அழைத்தாலும் போக வேண்டாம் அம்மா எச்சரித்தது அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. இவள் பிள்ளை பிடிப்ப

வளோ சட்டென குனிந்தான். தரையிலிருந்து கல் எடுத்த அவளது மண்டையில் ஒரே தாக்கு கிழவி "அம்மா.." என்று நெற்றியைப் பிடித்துக் கொண்டு சரிந்தாள். அன்று ராத்திரி முழுக்க ஊர் தூங்கவில்லை. திருவிழாவில் கூத்து பார்ப்பது போல முச்சந்தியில் எல்லோரும் திகிலுடனும், கோபத்துடனும் சூழ்ந்து நின்றிருக்க—

போஸ்ட் கம்பத்தில் அந்தப் பெண் வரிந்து கட்டப்பட்டு அழுதுக் கொண்டிருந்தாள். அவள் வசியகாரி என்றும் பிள்ளை பிடிப்பவள் என்றும் ஊர் நம்பிற்று. "உண்மையைச் சொல் சொல்!" என்று நெம்பிற்று.

"இல்லை நான் அப்படிப்பட்டவள் இல்லை, என்னை நம்புங்க பலகாரம் விற்பவள்."

"பலகாரத்தில் மருந்து வைத்து பிள்ளைகளை வசியம் பண்ணிக் கொண்டு போகிறவள்."

"இல்லை.. இல்லை சாமி என்னை விட்டிருங்க. அடிக்காதீங்க."

"அப்புறம் நீ யாரு.. எந்த ஊரு..?"

"அசலூருங்க."

"உன்னை இவ்ளோ நாளாய் இங்கே பார்த்ததேயில்லையே.. சொல்லுடி முண்டை உன்னை ஏவினது யார்.."

"ஐயோ... சாமி!"

"ஏய், இவ பொம்பளதானான்னு முதல்ல பாருங்கப்பா வேஷம் போட்டு வந்திருக்கப் போறா!"

உடன் பாட்டிகள் இருவர் அப்பெண்ணை குட்டிச்சுவர் ஒன்றின் பின்னால் அழைத்துப்



போய் அரைமணி நேரத்தில் திரும்பி வந்து "பொம்பளதாங்க" என்று சர்டிபிகேட் கொடுத்த பின்புதான் ஜனங்களுக்கு கொஞ்சம் ஆசுவாசம்.

"சரி. எல்லோரும் போய் தூங்குங்க. காலையில் பார்த்துக் கொள்ளலாம்." என்று ஊர்ப் பெரியவர் எல்லோரையும் அனுப்பிவிட்டு காவலுக்கு இரண்டு பேரை வைத்துவிட்டு கிளம்பினார்.

மறுநாள் விடிந்தபோது அவள் மிகவும் துவண்டுப் போயிருந்தாள். பசங்களெல்லாம் "எங்களையா . பிடிக்க வந்தாய் .?" என்று கல்லெறியத் தொடங்க, பெரியவர் அவர்களை விரட்டி விட்டு "பேசாமல் போலீஸில் ஒப்படைத்து விடலாம்" என்றபோது அங்கே ஜீப் ஒன்று ஊர்ந்து வந்து நின்றது. அதுக்குள்ளே போலீசுக்கு தகவல் போயிருச்சா ஆவலுடன் பார்த்தனர்.

ஜீப்பிலிருந்து டி.எஸ் பி. கருணாவும் அவருடன் சுகேசன் வாதியாரும் இறங்குவதை பார்த்ததும் அவர்களுக்கு எதுவும் விளங்கவில்லை.

கருணா, போஸ்ட் கம்பத்தில் கயிற்றால் கட்டப்பட்டிருக்கும் பெண்ணை அடைந்து, "நீ. யாரும்மா?". என்று கட்டை அவிழ்த்துவிட்டார்.

அவள், "ஐயா நான் ஒரு பாவம், பலகாரம் விற்பவள்!"

"இல்லைங்க, பொய் சொல்றா, பிள்ளை பிடிப்பவள்!"

''அதை நாங்க விசாரிச்சுக்கிறோம். கான்ஸ்டபிள்! இவளை ஸ்டேஷனுக்கு கொண்டு போங்க'' என்று அனுப்பிவிட்டு, ''மிஸ்டர் சுகேசன் ஸ்கூல் எந்தப் பக்கம்?''

''இதோ, இந்த பக்கம் சார் இந்த மஞ்சள் பில்டிங்!''

## 12

''வாங்க சார்! இப்படி உட்காருங்க!'' என்று பாதிரியார் டி.எஸ்.பி. கருணாவிற்கு சேர் எடுத்துப் போட்டார். சேரைப் போடும்போதே அவரது கைகள் நடுங்கின மாதிரி இருந்தது. பியூனை விட்டு காபி வாங்கி வரச்சொன்னார்.

கருணா தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு ''இங்கே நடக்கிறது எதுவும் நல்லதாய் தெரியலியே.. வாட்டீஸ்திஸ்!'' என்று அலுவலகத்தை ஒரு நோட்டம் விட்டார். ஏசுநாதர், மாதா படங்கள் டேபிளில் சிலுவை. மெழுகுவர்த்தி சைஸில் விளங்கு, பைபிள்.

''இறந்து போன மஞ்சு பற்றியும். ப்ரியன் பற்றியும் சுகேசன் மாஸ்டர் எல்லா விபரமும் சொன்னார். அவர்களுடைய ரிகார்ட்ஸை நான் கொஞ்சம் பார்க்கலாமா.. ரெண்டு பேருமே ஒரே வகுப்பா?''

கருணா அதை வாங்கி புரட்ட ஆரம்பித்தார். பசங்களின் பெயர், ஜாதி, மதம், விலாசம், பெற்றோரின் விபரங்கள், வகுப்பு, ரத்த குரூப், ரேங்க், மார்க்குகள், நடத்தை என எல்லா விபரங்களும் அதில் இருந்தன.



34228
5|68583

மஞ்சுவின் பக்கத்தில் அவள் [illegible] மார்க்குகளும் சரி ஆச்சர்யப்படும்படி [illegible] எப்போதுமே அவள் முதல் ராங்க். ப[illegible], பாட்டு, ஸ்போர்ஸ்களிலும் பரிசு வாங்கின விபரம் இருந்தது.

அடுத்து ப்ரியனின் பக்கத்தை புரட்டினார். அதிலும் விசேஷமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. அவனது ரிப்போர்ட்டும் அத்தனை மோசமில்லை.

''ஃபாதர் ரத்த பரிசோதனை எப்போது நடத்தினீங்க?''

''ரெண்டு வாரத்துக்கு முந்தி சார்.''

''யார் நடத்தினார்கள்?''

''சமூகசேவை நிறுவனம் ஒன்று'' என்று அதனுடைய பெயரை குறிப்பிட்டார். ''ஊரில் காலரா பரவியிருந்ததால் பசங்களுக்கும் ரத்த பரிசோதனை நடத்தச் சொன்னோம் அப்படியே ப்ளட் குருப்பும்.''

கருணா, அந்த புத்தகத்தின் அத்தனை பக்கங்களையும் ஒரு புரட்டு புரட்டிவிட்டு, ''அப்போ நான் வரேன் ஃபாதர்'' என்று கிளம்பினார் வாசல் வரை போனவர் திரும்பி வந்து, ''எம் எல் ஏ மதிவாணன் இங்கு அடிக்கடி வருவாரா?''

''அடிக்கடி இல்லை எப்போதாவது''

''கடைசியாய் எப்போ வந்தார்?''

''வந்து அன்று ரத்த பரிசோதனை நடத்தின தினம்.''

''எதுக்கு வந்தார்?''

''சரியா ஞாபகமில்லை. ஆங் அடுத்த மாதத்தில் தொகுதிக்கு மந்திரி வருவதாகவும், அதற்கு பசங்களை வைத்து சிறப்பாய் அணிவகுப்பு மரியாதை தர முடியுமான்னு கேட்க வந்தார்.''

''இறந்துபோன மஞ்சுவிற்கும் ப்ரியனுக்கும் பசங்களில் யார் அதிக நெருக்கம்?''

சுகேசன் இடைபட்டு ''விக்டர்ன்னு ஒரு பையன் சார், படுசுட்டி. அவனை அழைக்கட்டுமா?''

''கூப்பிடுங்க''

''இதோ'' என்று சுகேசன் ஓடினார். சற்று நேரத்தில் விக்டர் மிரண்டு போன விழிகளோடு வந்தான். போலீஸை கண்டதும் அவனுக்கு நாக்கு குழறிற்று.

''மஞ்சுவும் ப்ரியனும் எப்படி செத்தாங்க.''

நேரிடையாய் மண்டையில் அடித்த மாதிரி வந்த கேள்வியை அவன் சற்றும் எதிர்பார்க்க வில்லை. ''வந்து, வந்து முதலை''

''முதலை பிடித்ததை நீ பார்த்தாயா?''

''இல்லை.''

''அப்புறம்? கண்ணால் பார்க்காதபோது அப்படி சொல்வது தப்புதானே?''

''ஆமாம் சார், என்னை விட்டிருங்க சார்! எனக்கு எதுவும் தெரியாது சார்'' என்று அவன் அழ ஆரம்பித்தான்.

''ஒய் . ஒய் . ஏன் அழுகிறாய். இப்போ உன்னை என்னப் பண்ணினேனாம்''

அவனே அப்போதுதான் ஏன் நான் அழ வேண்டும் யாரும் எதுவும் செய்யவில்லையே என யோசித்தான்.

''மஞ்சுவும் ப்ரியனும் கொலை செய்யப்பட்டி ருக்கலாமனு நினைக்கிறோம். அவங்க ரெண்டு பேருடனும் நீ நெருங்கி பழகி இருப்பதால்—பயப் படாதே—உனக்கு ஏதும் விபரம் தெரிஞ்சிருக்க லாம்னு.. கேட்கிறேன்.''



''உனக்கு யார் மேலாவது சந்தேகம் இருக்கா?''

''இருக்கு.''

''யார்?''

''அந்த கிழவி''

''எந்த கிழவி''

''வசிய கிழவி! பலகார கிழவி''

''அவளைத் தவிர''

அவன் பாதியாரையும், சுகேசனையும் மாறி மாறி பார்க்க— ''சரி வா.. தனியா பேசுவோம்'' என்று வெளியே மரத்தடிக்கு அழைத்துப் போய் நீண்ட நேரம் பேசினார்.

அவனை வகுப்பிற்கு அனுப்பிவிட்டு, அங்கு வேலை செய்யும் ஆசிரியர்கள், ஆயா! பியூன்! எல்லோரையும் விசாரணை. கருணா அடுத்து பாதிரியார் குறிப்பிட்ட அந்த சமூக சேவை நிறுவனத்தை நோக்கி பயணமானார்.

சாப்பாட்டு நேரத்தில் அம்ரிதா, ''டி.எஸ்'பி. என்ன சொன்னார்'' என்று சுகேசனைக் கேட்டாள். ''அவருக்கு யார்மேல சந்தேகமாம்''

''தெரியல. புரிஞ்சுக்க முடியலே. என்னையே சந்தேகிக்கிற மாதிரிதான் கேள்வி கேட்டார்''

''எங்கிட்டயும் அப்படிதான்! மகா அழுத்த காரர் போலிருக்கிறது. விசாரணையை நம்மோடு நிறுத்தியிருக்கலாம். பாவம் அந்த விக்டர், பேய் அடித்த மாதிரி ஆகிவிட்டான். சின்ன பசங்களை யும் விரட்டினால் அவர்கள் என்ன பண்ணுவார் களாம். போலீஸ்களின் போக்கே புரியவில்லை. குற்றவாளிகளை விட்டு விட்டு அப்பாவிகளை

பிடித்து மிரட்டுவதை இவர்கள் எப்போதுதான் நிறுத்துவார்களோ தெரியவில்லை.''

''அம்ரிதா! கருணா நிச்சயம் அந்த மாதிரி ஆள் இல்லை. கூடிய சீக்கிரமே குற்றவாளியை பிடித்து விடுவார் பார்.''

## 13

அன்று மாலை. செரியான் டூட்டி முடிந்து அழுக்கும் அலுப்புமாய் வீட்டிற்குள் நுழையும் போதே, ''மேரி! மேரி'' என்று கூப்பிட்டான்.

அவள் அவனைக் கண்டு முகம் மலர்ந்து, அவன் கொண்டு வந்திருந்த பையை வாங்கிக்கொண்டு, ''ஐயாவுக்கு இன்று ஏக குஷி போலிருக்கு''

''ஆமாம். இருக்காதா பின்னே நாளைக்கு விக்டருடைய பிறந்த நாள் ஆயிற்றே! ஞாபகமாய் வந்து விட்டேன் பார்த்தாயா!''

''ஆகா.. என்ன கரிசனம்! கடந்த நாலு பிறந்த நாளுக்கும் வண்டியில ஓடிகிட்டிருந்தீங்க. இன்று இரண்டு லோடு கிடைத்திருக்காது வந்திருப் பீங்க''

''இல்லைடி. வேறு டிரைவரை மாற்றி விட்டு வந்தேன். சீக்கிரம் ரெடியாகு! விக்டரையும் அழைச்சுபோய் புது துணி எடுப்போம். விக்டர் எங்கே.,''



''இன்னும் ஸ்கூலிலிருந்து வரலே.''

''மணி ஏழாகப் போகுது. இன்னும் என்ன பண்றானாம்?

''எங்காவது போய் விளையாடிட்டு, ஊர் சுற்றி விட்டு வருவான் அப்பா ஊரில் இல்லையென்றால் எப்போதும் ஊர் சுற்றல் தான்.''

''நீ கண்டிச்சு வெக்கக் கூடாதா..?''

''கேட்டால் தானே. எனக்கும் சலிச்சு போச்சு'' என்றவள் செரியானின் முகம்சிவப்பதைக் கண்டு, ''இன்னைக்கு அவனை விட்டிருங்க. பிறந்த நாளிற்கு முதன் முதலாய் வீட்டில் இருக்கீங்க.

தண்டிச்சிர வேணாம். போய் குளிச்சு ரெடியா குங்கள். அதுக்குள்ளே அவன் வந்திருவான்.''

மணி எட்டு, விக்டர் வரவில்லை.

மணி ஒன்பது, விக்டர் வீடு திரும்பவில்லை. மேரிக்கு பதற்றமாயிற்று செரியான் வாசல் கட்டிலிலேயே படுத்து குறட்டையில் ஒரு வார அலுப்பு அங்கே வடிந்துக் கொண்டிருந்தது.

அவன் தூங்கட்டும் தொந்திரவு செய்ய வேண்டாம் என்று மேரி அக்கம் பக்கத்து வீடுகளில் போய் விசாரித்தாள், விக்டர் அங்கே வரவே யில்லையாம்.

கடைவீதி, பஞ்சாயத்துப் போடு.. ம்கூம் இல்லை அப்புறம் எங்கே போயிருப்பான்? அவளுக்குப் பயம் தொற்றிக் கொண்டது. இனியும் தாமதிக்கக் கூடாது. செரியானிடம் சொல்லியாக வேண்டும்!...

கடவுளே.. அவனுக்கு எதுவும் சம்பவித்திருக்கக் கூடாதே!

செரியானை அத்தனை சாதாரணத்தில் எழுப்ப முடியவில்லை. ''தூங்க விடுடி'' என்று சுருண்டு கொண்டவனை தட்டி எழுப்பி—

''நம் விக்டர் இன்னும் வீட்டுக்கு வரலே'' என்றாள் அழாத குறையாய்.

அவன், கண்களை கசக்கிக்கொண்டு எழுந்து, ''மணி என்ன..?''

''ஒன்பதரை..'

'இன்னுமா வரலே..'' என்று விசுக்கென எழுந்தான். ''ஏன் என்னிடம் முன்பே சொல்லலை..'' என்று சட்டையை மாட்டினான்.

''எனக்கென்னவோ பயமாயிருக்குய்யா ஒரே பிள்ளை.''

''அடச்சீ! வாயை மூடு'' என்று கத்தி விட்டு வெளியே இறங்கினான்.

''நானும் வரேன்ய்யா'' என்று மேரி கதவை பூட்டிவிட்டு அவனுடன் சேர்ந்து கொண்டாள்.

அவர்கள், விக்டரை தெரு தெருவாய் அலசினர். காணோம் மைதானம் ஏரிக்கரை கூவம். அம்ரிதாவின் வீடு!

சுகேசன் வீடு கணக்கு வாத்தியார்!

கடைசியில் பள்ளிகூடம்.

பள்ளியின் வகுப்பறைகள் இருண்டு கிடக்க, மாதா கோவிலில் வெளிச்சம் தெரிநதது. உடனே பாதிரியாரிடம் முறையிட வேண்டும்.

நேரம் ஆக ஆக மேரியின் பதற்றம் அதிக மாயிற்று. செரியான ஏதாவது சமாதானம் சொல்வான் என்று பார்த்தால் அவன் வாயே திறக்க



வில்லை. அவனும் பயந்து போய் இருப்பதை உணர முடிந்தது.

விக்டருக்கு என்னாயிற்று சம்பந்தமேயில்லாமல் மஞ்சுவும் ப்ரியனும் கோரமாய் குதறப்பட்டு கிடந்த அந்த காட்சி முன் வந்து மிரட்டியது. விக்டரும் அப்படி

இல்லை. கூடாது!

''ஏய்யா! நம் பையனுக்கு எதுவும் ஆகியிருக்காதில்லே..''

செரியான் பதில் எதுவும் சொல்லவில்லை. வேக வேகமாய் நடந்து கொண்டிருந்தான். அதனது நெற்றியிலும் கழுத்திலும் வியர்வை கசியல்கள்.

''போலீசுக்கு சொல்வோமே.,?''

''பள்ளிக்கூடத்துல பார்த்துட்டு அப்புறமாய் சொல்வோம்.''

பள்ளியைத் தாண்டி, மாதா கோவிலில் ஜீப் ஒன்று நின்றிருந்தது. போலீஸ் ஜீப்!

அவர்கள் யோசனையுடன் பாதிரியாரின். அறையை எட்டிப் பார்க்கப் பார்க்க, அங்கே, ஃபேன் மட்டும் ஓடிக் கொண்டிருந்தது. அவரைக் காணவில்லை.

சர்ச்சை ஒட்டின சாலையிலிருந்து.. ''செரியான்'' என அழைப்பு வர திரும்பிப் பார்த்தார்கள். அங்கே பாதிரியார் கையில் பைபிளுடன் நடந்து வந்து கொண்டிருந்தார். அவருக்கருகில் டி.எஸ் பி. கருணா!

இவர் இந்த நேரத்தில் இங்கே எப்படி?

ஒருவேளை விசாரணைக்காக வந்திருக்கலாம்.

''செரியான்! என்ன விஷயம்?''

''சாமி! எங்க விக்டரை காணோம்'' இருவரும் ஒரே குரலில் அலறினார்.

''என்ன சொல்றீங்க..?''

''ஆமாம் சாமி பள்ளிக்கூடம் விட்டு அவன் வீடு திரும்பவேயில்லை.

அவர் அதிர்ச்சியுடன் கருணாவை பார்க்க அவர், ''நல்லா தேடிப் பார்த்தீங்களா..?

''பார்த்துட்டோம்ங்க. ஊர் முழுக்க தேடி யாச்சு. ஏரிகரையைக்கூட விட்டு வைக்கலே.''

பாதிரியார், ''மைகாட், டி.எஸ்.பி. சார், எனக்கு பயமாயிருக்கிறது. வாருங்கள் உடனே.''

செரியான், ''ஆமாம் சார் வாருங்கள் அவனை எப்படியாவது கண்டுபிடித்தாக வேண்டும். விக்டர் எங்களுக்கு ஒரே மகன் அவனுக்கு ஏதாவதொன் னுன்னா அப்புறம் நாங்கள் உயிரோடு இருக்க மாட்டோம்.''

''செரியான், கார்ம், கார்ம்'' என்று கருணா அவனது தோளை தட்டினார். அவனுக்கு ஏதும் சம்பவித்திருக்காது. போய் தூங்குங்கள்.''

''அவனை பார்க்காமல் எனக்கு தூக்கம் இல்லை. ப்ளீஸ் சார் அவனை நீங்கதான் காப் பாத்தணும்.''

''விக்டர் புத்திசாலி. சமர்த்து அவன் நிச்சயம் வீடு திரும்புவான். கவலைப்படாமல் போங்க. அவனுக்கு நான் பொறுப்பு.''

''அதுக்கில்லை சார் மஞ்சு, ப்ரியன், என் மகனையும் அந்த மாதிரி.''

''அப்படி எதுவும் நடக்காது. நடக்க விட மாட்டேன். கிளம்புங்க.''



மேரி, ''சாமி, உங்களைதான் தெய்வமாய் நம்பியிருக்கோம்.''

வீட்டிற்கு வந்து நெடுநேரம் செரியனுக்கு தூக்கமில்லை. மேரியும் அதே மாதிரி விசும்பிக் கொண்டேயிருந்துவிட்டு பத்து நிமிடம் முன்பு கண்ணயர்ந்தாள்.

செரியனுக்கு இருப்பு கொள்ளவில்லை. தூக்கம் அவனுக்கு பிரச்சனையில்லை. எத்தனை ராத்திரி கள் கண் விழித்து வண்டி ஓட்டியிருக்கிறான். இப்போது முக்கியமில்லை.

விக்டர், அவனது உயிர், ஓசைப்படாமல் எழுந்தான். சட்டை மாட்டினான். கதவை ஓசைப் படாமல் திறந்து வெளியே வந்து மூடினான். செருப்பை மாட்டிக் கொண்டு முதலாளியின் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

## 14

ஆரோக்கியத்தின் பங்களாவில் சன்னமாய் ஒளி பரவியிருந்தது. கேட்டை திறந்ததும், வாட்ச்மேன் தூக்கம் கெட்டு எழுந்து டார்ச அடித்தபடி அருகில் வந்தான். ''யாரு?'' என்று கண்கசக்கி—

''ஓ நீயா, என்ன இந்த நேரத்துல?''

''முதலாளியை பார்க்கணும்.''

''தூங்கறாரே.''

''அவசரம். என் மகனை காணவில்லை.''

கதவைத் திறந்து உள்ளே நுழைய, பூச்செடிகளில் விளையாடிக் கொண்டிருந்த நாய் குரைத்துக் கொண்டு ஓடிவந்து, செரியானின் முகம் உணர்ந்து வாலாட்டி அவனது காலை நக்கிக் கொடுத்தது.

மாடியில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. நாயின் குரல் கேட்டு முதலாளி விழித்திருக்க வேண்டும்.

செரியான் காலிங் பெல் அடித்து விட்டு பதற்றத்துடன் விரல்களில் நெட்டி முறித்தான்.

ஹாலில் காலடி ஓசை கேட்டது. இதோ வருகிறார்.

வந்துவிட்டார், திறக்கிறார்.

ஆரோக்யம் லுங்கியும் பனியனுமாய் எட்டிப் பார்த்து, ''செரியான்.. என்ன இந்த நேரத்துல?''

''ஐயா, என் மகனை காணோம்ங்க'' என்று உள்ளே நுழைந்து கதவை மூடினான்.

'காணோமா என்ன சொல்கிறாய்?'' என்று கொட்டாவி விட்டார்.

''எங்கே போனான்?''

''அது உங்களுக்குத்தானே தெரியும்..!''

''ஏய், என்ன சொல்கிறாய் நீ?'' என்று அவனை முறைத்தார்.

''ஆமாங்கய்யா. உங்களுக்குத் தான் தெரியும். ஆனாலும் நீங்க இவ்வளவு மோசமாய் நடப்பீங்கன்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. சொல்லுங்க. எங்கே என் மகன்?''

''ஏய், என்ன இது அநாகரீகம். அசமந்த நேரத்தில் வந்து கதவைத் தட்டி ரர்ஸ்கல், உனக்கென்ன பைத்தியமா?''



''ஆமாம். பைத்யம்தான்! இல்லாவிட்டால் உங்கள் பேச்சைக் கேட்டிருப்பேனா! பச்சை குழந்தைகளை அபகரித்து வந்து உங்களிடம் ஒப்படைத்திருப்பேனா! எனக்கு புத்தி கெட்டுப் போனதால் தானே.. மஞ்சுவையும், பிரியனையும் உங்களிடம் சேர்ப்பித்தேன். நீங்கள் மனிதனேயில்லை அவர்களைக் கொன்றது மாதிரி என் மகனையும் கொன்று விட்டீர்கள்.''

''உளறாதே! உன் மகனை நான் எதற்கு!''

''என் மகனுக்கு ஓ ப்ளஸ் வீ ஓ இ குரூப்.''

''அப்படியா?''

''தெரியாத மாதிரி நடிக்காதீர்கள். இந்த வஞ்சனை என்னிடம் காட்டியிருக்க வேண்டாம். என்ன இருந்தாலும் பணக்காரன் பணக்காரன் தான். கடைசியில் உங்கள் புத்தியை விசுவாசமான என்னிடமே காட்டி விட்டீர்களே. ஏய், இன்னும் உனக்கு ஏன் மரியாதை, சொல்றா, எங்கே என் விக்டர்.''

செரியன் ஆவேசத்துடன் ஆரோக்கியத்தின் கழுத்தை பிடித்து நெறிக்க முற்பட்டான்.

ஆரோக்யம் அந்த தாக்குதலை எதிர்பார்க்காததால் தடுமாறி சோபாவில் விழுந்து, ''செரியான் விடு. விடுடா,'' என்று திமிறினார். ''சொன்னாக் கேள். எனக்கு எதுவும் தெரியாது. உன் மகனை நான் பார்க்கவேயில்லை.''

''இல்லை. நீதான் சொல், எங்கே அவன், சொல்லப் போகிறாயா இல்லையா..?''

அப்போது கதவு படாரென திறக்கப்பட்டு ''நான் சொல்கிறேன்..'' என்று குரல் ஒலித்தது.

இருவரும் திரும்பிப் பார்க்க, டி.எஸ்.பி, கருணா புன்னகையுடன் நின்றிருந்தார். அவருக்குப் பின்னால் பாதிரியார்.

அவருக்குப் பின்னால் விக்டர்.

விக்டரைப் பார்த்ததும் செரியான், ஆரோக்கியத்தை அப்படியே போட்டுவிட்டு, ''விக்டர்,'' என்று ஓடிவந்து கட்டிக் கொண்டான். அவனது தலையை அழுந்த பிடித்து முத்தம் கொடுத்தார்.

''ரொம்ப நன்றி சார், விக்டர், இத்தனை நேரம் எங்கே போயிருந்தாய்? நான் பயந்தேப் போனேன்.''

''நான் எங்கேயும் போகலேப்பா இந்த அங்கிள் தான் என்னை மாதா கோவிலில் ஒளித்து வைத்திருந்தார்.''

''யார்? டி. எஸ்.பியா?'' ஆரோக்கியம் அதிர்ச்சியுடன் கேட்டார்

''ஆமாம்.''

''ஏன்? என்ன காரணம்?''

''நான் சொல்றேன்'' என்று கருணா சொல்ல ஆரம்பித்தார். ''ஸ்கூல் ரிகார்டில் பார்த்தபோது இறந்துபோன மஞ்சுவும் ப்ரியனும் ஒ ப்ளஸ் வீ இ குரூப்காரர்கள். என்பது தெரிந்தது. அது ரொம்ப அபூர்வமான குரூப். ரொம்ப ரேர்! அவர்களின் அந்த குரூப்தான் அவர்களுர்கு எமனாயிருக்க வேண்டும். என யூகித்தேன். என் யூகம் பொய்க்கவில்லை டவுனில் விசாரித்தபோது அன்று ரத்த குரூப் லிஸ்டை ஆரோக்கியம் கேட்டு வாங்கினதாய் குறிப்பிட்டது.

ரத்த குரூப் தங்களுக்கு எதற்கு என்று சந்தேகம் வந்தது. தங்களை கண்காணிக்க ஏற்பாடு செய்தேன்.

ஒ ப்ளஸ் வீ இதான் பிள்ளைகளுக்கு எமன் என்றால், அடுத்து இன்னும் ஒ ப்ளஸ் வீ இ ரத்தகாரர்கள் இருந்தால் அவர்களுக்கும் ஆபத்து நேரிடலாம் என்பதால் அன்று



ரிப்போர்ட் முழுக்க அலசினதில்-விக்டரும் வீ ப்ளஸ் வீ இ என தெரிந்தது.

விக்டரையும் நீங்கள் குறிவைக்கலாமோ என தோன்றிற்று ஆனால் அவன் உங்களது விசுவாசியான செரியானின் மகன் என்பதால் நீங்கள் தாக்கியிருக்க வேண்டும். எப்படியும் விக்டரை நோக்கி வருவீர்கள். என காத்திருப்பது வேஸ்ட் என்று தோன்றிற்று.

சரி, விக்டரை நாமே ஒளித்து வைத்து செரியானின் ரியாக்ஷனை பார்ப்போம் என ப்ளான் பண்ணினேன். விக்டரிடமும் பாதிரியாரிடமும் விபரம் சொல்லி அவனை மாதா கோவிலில் மறைத்து வைத்தேன்.

என் எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை.

மகனை காணோம் என்றதும் செரியானுக்கு ஆவேசமாயிற்று. நீங்கள்தான் அவனை கொண்டு போயிருக்க வேண்டும என்று நினைத்து இங்கு வந்தான். உங்களை மிரட்டினான். மகனை காணாத துக்கத்தில் குற்றங்களை கக்கிவிட்டான். மாட்டிக் கொண்டீர்கள்.''

கருணா பெருமிதத்துடன் ஆரோக்கியத்தைப் பார்க்க, அவரது முகம் கறுத்து போயிருந்தது. வியர்வை, கைகளில் நடுக்கம்.

''மிஸ்டர் ஆரோக்கியம், சொல்லுங்கள், எதற்காக இந்த பாவத்தைச் செய்தீர்கள்? ஒ ப்ளஸ் வீ இ பசங்களை எதற்காக?'' ஆரோக்கியம் நீண்ட மௌனத்திற்கு பின், கையும் களவுமாய் பிடிபட்ட பின் தப்பிக்க முடியாது என்பதை உணர்ந்து, ''என்னை எல்லோரும் மன்னித்து விடுங்கள், எல்லாம் பாழாய் போன பணத்திற்காகத்தான்.

ஓ ப்ளஸ் வீ இ என்பது டி.எஸ்.பி. சொன்னமாதிரி அபூர்வம்தான் ப்ளஸ் வீ இ ரத்தத்திற்கு டிமாண்ட் அப்படியிருக்கும்போது அந்த கிட்னிக்கு கேட்கவா வேண்டும்? மாற்று கிட்னி பொருத்தும்போது ஓ ப்ளஸ் வீ இ காரர்களுக்கு ஓ ப்ளஸ் வீ ஓ கிட்னி வேண்டும் என் லட்சக்கணக்கான பணத்துடன் பார்ட்டி ஒன்று என்னை அணுகிற்று. வந்த பார்ட்டியே இந்த யோசனையையும் தெரிவித்தது. பள்ளி கூடத்தில் ரத்த பரிசோதனை அந்த லிஸ்டை வைத்து''

பாதிரியார், ''சே, நீங்கள் எல்லாம் ஒரு மனுஷனா நீங்கள் நம் மதத்திற்கே ஒரு அவமானம் பணத்திற்காக வேண்டி ஒன்றுமறியாத பச்சிளங் குழந்தைகளை... சை. பணம் சம்பாதிக்க எத்தனையோ வழியிருக்கும்போது குரூயல், உங்களுக்கு மன்னிப்பே கிடையாது.''

பாதிரியார் சபிக்க, ஆரோக்யம் அவர்களை ஏறிட முடியாமல் தலை தாழ்ந்து, கருணாவிடம் தன் கைகளை நீட்டினார்.

மாவட்ட
34228
5168583
கொளத்தூர், சென்னை